# கட்டுரை வளம்

சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்.

# கட்டுரை வளம்

**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்**
எம். ஏ., எம். லிட்,. பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்—தமிழ்மொழித் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**நறுமலர்ப் பதிப்பகம்**
**சென்னை-29**

முதற்பதிப்பு : 1966
ஏழாம் பதிப்பு : சூலை, 1978
எட்டாம் பதிப்பு : சூலை, 1979
ஒன்பதாம் பதிப்பு : சூலை, 1980
பத்தாம் பதிப்பு : செப்டம்பர், 1994

ரூ. 20-00

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**
184, பிராட்வே,
சென்னை-600 108.

**பிற நூல்கள் :**

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
மனோன்மணீயம்
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
மலர் காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நல்லோர் நல்லுரை
"The status of women in Tamilnadu during the Sangam Age"

---

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40, கிழக்கு செட்டித் தெரு
பரங்கிமலை, சென்னை-16.

# முன்னுரை

தமிழ் இலக்கிய உலகம் இன்பம் பயக்கக் கூடியது; பண்பை ஊட்டக் கூடியது; ஆராய்ச்சிக்கு இடமளிப்பது; வாழ்க்கைக்கு வழி காட்டி நிற்பது. பல்வேறு காலங்களில் தமிழ் இலக்கியச் சோலையில் மலர்ந்த மலர்கள் எண்ணற்றவை; அவ்வளவும் நறுமலர்கள். அவை அனைத்தும் நறுமணம் வீசி நல்லின்பம் பயப்பனவாகும். நித்த நித்தம் புத்தம் புது மலர்கள் பூத்துக் குலுங்கி நிற்கும் வண்ணத் தமிழ்ப் பூங்காவில் மனத்தைப் பறிகொடுத்து நின்றபோது என் சிந்தனையில் முகிழ்த்தெழுந்த ஆழ்ந்த சில கருத்துகளைக் கட்டுரை வடிவில் அவ்வப்போது தொகுத்து அமைத்து வந்தேன். சொற்பொழிவுகள் சிலவும் கட்டுரைகளாய் உருப்பெற்றன. அனைத்தையும் திரட்டி ஒரு நூலாக்கி, அந்நூலினுக்குக் 'கட்டுரை வளம்' என்ற தலைப்புத் தந்துள்ளேன்.

இந்நூலின்கண் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகள், வற்றாத வளமான இலக்கிய இன்பத்தை வழங்கி நிற்பனவாகும். வளமான கற்பனை, வற்றாத உணர்ச்சி, உணர்ச்சி வெளியீட்டிற்கு ஒத்த வடிவம், இவற்றின் உள்ளீடாகச் சிறந்த கருத்துகள்—இவையே தமிழ்க்கவிதைகள். இத்தகு செஞ்சொற் கவிதைகள் தீட்டிக் காட்டும் சொல்லோவியங்கள் சிலவும் என் கருத்தைப் பிணித்தன. 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே' என்பது புறப்பாட்டின் தொடர். என் நெஞ்சத்தில் நீங்காது இடம் பெற்றிருக்கும் இலக்கிய ஓவியங்களும் காட்சிகளும் கட்டுரைகளாய் உருப் பெற்றுள்ளன. இந்நூலினைத் தமிழ்கூறு நல்லுலகம் ஏற்று ஆதரிக்கும் என்னும் நம்பிக்கையுடையேன்.

சென்னை-29
19-6-66

சி. பா.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இலக்கியத்தின் பண்பும் பாகுபாடும் ... | 5 |
| 2. | தொல்காப்பியனார் தந்த பொருளதிகாரம் ... | 11 |
| 3. | சங்க கால மகளிர் ... | 25 |
| 4. | முல்லைப் பாட்டின் பெயர்ப் பொருத்தம் ... | 52 |
| 5. | வள்ளுவர் வகுக்கும் இன்பம் ... | 62 |
| 6. | தமிழ் இசையின் தொன்மையும் வளர்ச்சியும் ... | 71 |
| 7. | கானல் வரி ... | 84 |
| 8. | தமிழ் இலக்கியங்களில் இதிகாசக் கருத்துகள்... | 91 |
| 9. | இராமாயணப் போர்க்களங்கள் ... | 103 |
| 10. | பிள்ளைத் தமிழ் ... | 119 |
| 11. | பாரதியார் பா நலம் ... | 134 |

# 1. இலக்கியத்தின் பண்பும் பாகுபாடும்

உலகம் தோன்றிப் பன்னெடுங்காலம் கழிந்துவிட்டது. மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளையும் எண்ணங்களையும் மற்றவர்க்கு அறிவுறுத்த மொழியைப் படைத்துக் கொண்டான். இதனால்தான் மொழி நூலார் 'மக்கள் மனத்தின் பிரதிபலிப்பே மொழி'[1] என்று கூறுவர். எனவே மக்களிலரேல் மொழி இல்லை என்பது பெறப்படுகிறது. மொழியை வளப்படுத்திக்கொண்ட மனிதன் இலக்கியம் சமைக்கத் தொடங்கினான்.

நம் தமிழ் மொழியோ, மிகவும் தொன்மையான பண்பட்ட மொழி. வாழ்வும் வரலாறும் உடைய மொழி. இம்மொழி பேசும் தமிழ்க்குடி, 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன்தோன்றி மூத்தகுடி' என்று பழகுதமிழ்ப் புலவரொருவரால் பாராட்டப்பெற்ற பெருமை வாய்ந்தது. இருபது முப்பது நூற்றாண்டுகளாக ஓர் ஒழுங்கான வரையறைக்குட்பட்ட வளர்ச்சியினை மொழி பெற்றுள்ளது. மொழி, வாழ்வும் வளமும் பெற்ற நிலையில் மனிதன் சிந்தனையினின்றும், முகிழ்த்ததே இலக்கியமாகும்.[2] மனிதசிந்தனையின் வடிவமாக—எல்லையாக — அளவுகோலாக — நின்றிலங்குவது இலக்கியமே.

வாழ்க்கையினின்றும் கருக்கொள்வதே — முகிழ்ப்பதே, இலக்கியம் எனலாம். வாழ்க்கையிலே மனிதன், தான் கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் தான் அப்

---

1. Language is a mirror of their (People's) minds. —Pillsbury and Meader, The Psychology of Language. P 290.
2. Language is the vehicle of thought.

பொருளை எண்ணியவாறும் உணர்ந்தவாறும்மற்றவர்க்கு என்றும் நிலைத்த சுவை பயக்கக்கூடிய முறையில் எழுதி வைத்துச் சென்றதே இலக்கியமாகும். ஆதலின், 'மொழி வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம்' என்பர் மேலை நாட்டு அறிஞர் 'ஹட்சன்' அவர்கள்.[1] இதனையே 'ஆபர்கிராம்பி' அவர்கள், 'மொழி வாயிலாக உணர்த்தப்படும் கலையே இலக்கியம்'[2] என்பர். சிலர் 'இலட்சியம்' என்ற வடசொல்லின் திரிபே இலக்கியம் என்பர். ஆனால், அறிஞர் க. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், 'இலங்கு இயம்' எனப் பிரித்து 'மொழிக்குச் செம்மையான வேலியாய்த் துலங்குவதே இலக்கியம்' என்பர்.

இலக்கிய ஆசிரியன் வாழ்க்கையை நுணுகிப் பார்க்கின்றான்; கூர்ந்து பார்க்கின்றான். வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியிலோ பல நிகழ்ச்சிகளிலோ தோய்கின்ற அவனது உள்ளம் தான் பெற்ற அந்த உணர்ச்சிகளைப் பிறர் நெஞ்சில் பதிய வைக்க ஒரு வடிவம் கொடுக்க முனைகின்றது. அவன் தான் பெற்ற அனுபவம் அல்லது தோய்ந்த

---

1. Literature is a vital record of what men have seen in life; what they have experienced of it what they have thought and felt about those aspects of it which have the most immediate and enduring interest for all of us.

It (Literature) is thus fundamentally an expression of life through the medium of language.

—Hudson. 'An introduction to the Study of the Literature.'
P. 10

2. Literature is an art by which expression is achieved, in language. Poetry is the translation of experience into language.

—L. Abercrombie, 'The Idea of Great Poetry,' P. 22.

உணர்ச்சிக்கு ஒரு கலை வடிவம் தந்து, கற்பனை மெருகிட்டு, தான் பெற்ற பேற்றினை — இன்பத்தினைப் — பிறரும் பெறும் வண்ணம் தருகின்றான். இவ்வாறே இலக்கியம் பிறக்கின்றது. எனவே, மனத்தின் இயல்பையொட்டிக் கால வெள்ளத்தின் போக்கினையொட்டி இலக்கியங்கள் பிறந்தவாறே உள்ளன. 'முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்'க் காலத்தின் கூறுகளையெல்லாம் தன்னுட் கொண்டு எழுகின்றது இலக்கியம். சுருங்கக் கூறின், மொழியின் துணைகொண்டு தன்னுடைய கருத்துகளைப் பிறரும் அறியும் வண்ணம் உண்டாக்கும் நூலினை அறிவு நூலாகவும், மொழியைக் கொண்டு தன் உள்ளத்தில் ஊறிக்கிளர்ந்தெழும் உணர்ச்சிகளைப் பிறர் உள்ளத்திலும் உண்டாக்குமாறு செய்விக்கும் நூலினை இலக்கியமாகவும் கொள்ளலாம். 'நவில்தொறும் நூல்நயம் போலும்' என்ற திருவள்ளுவர் குறளுக்கிணங்கப் படிக்கும் தோறும் நயம் தந்து உணர்ச்சிவேகமும் உருவ அமைப்பும் கொண்டு இலங்குவதே இலக்கியமாகும்.

இலக்கியத்திற்கு வடிவம் (Form) இன்றியமையாதது என்பதைக் கண்டோம். அது போல்வதுதான் பொருளும் (Content) என்பதையும் உணர்தல் வேண்டும், இலக்கியம் கருத்தொன்றும் செய்தியொன்றும் வெளிப்படுத்தவில்லையேல், அஃது இலக்கியமாகாது என்பர்.[1] எனவே இலக்கியம், அமைப்பு (வடிவம்) நோக்கிச் சில வகையாகவும், பொருள் நோக்கிச் சில வகையாகவும், புலவர் தம் கருத்து—மன நிலை—நோக்கிச் சில வகையாகவும், பாகுபாடு செய்யப்படுகிறது.

---

1. For evidently, whatever else literature may be' communication it must be; no communication no literature.

—L. Abercrombie, Principles of Litarary Criticism, P. 24.

இலக்கியப் பிரிவுகளுள் தொன்மைமிகுந்தது கவிதையே உரைநடையும் இலக்கியத்தின் ஒரு கூறேயாகும். ஆயினும், இது வளர்ந்தது பிற்காலத்திலேதான் எனலாம். சிறப்பாக வாழ்வு பெற்றது, ஐரோப்பியப் பாதிரிமார்களின் தமிழ்த் தொண்டிற்குப் பின்னரே என்றும் கூறல் வேண்டும்.

தமிழின் தொன்னூலும் முன்னூலுமான 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம்' தந்த 'தொல்காப்பிய னாரும்' இலக்கியத்தை ஏழு பிரிவுகளாகக் கூறியுள்ளார் :

**பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் முதுசொல்லொ டவ்வேழ் நிலத்தும்**
**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது என்மனார் புலவர்.**

—தொல். செய்யுளியல், 75

இந்நூற்பாவிலிருந்து பாட்டு, உரை, நூல், வாய் மொழி, பிசி, அங்கதம், முதுசொல் (பழமொழி) என்ற ஏழு பிரிவுகளும் தொல்காப்பியனார் காலத்து வழங்கிய இலக்கிய வகைகளாகும் எனலாம். இங்குக் குறிக்கப் பெற்றவற்றுள் 'நூல்' என்பது இலக்கணம் முதலிய அறிவுத்துறைக்கு அவ்வளவாகப் பயன்படாதது என்பதை மட்டும் கருத்தில் கொள்ளுதல் நலம்.

தமிழ் இலக்கியத்தில் பொருள் பற்றிய பாகுபாடாகத் தொன்று தொட்டு வழங்கி வருவது அகம், புறம், என்ற இருவகைப் பகுப்புகளாகும். அகத்திலுங்கூடக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்' பாலை என்ற ஐந்திணைப் பகுப்புகளைக் காண்கிறோம். புறமும் அவ்வாறே பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த 'அகம், புறம்' என்ற வரையறைகள் எல்லாம், இப்பொழுது இலக்கியத் துறையிலே வகைப்படுத்தப்படுவதில்லை எனலாம்.

ஆங்கில நூலார் இம்முறையில் தமது இலக்கியத்தைப் பாகுபாடு செய்வதில்லை. கவிஞன் தன் உள்ளத்து உணர்ச்சியை வெளியிட்டுத் தான் கலந்து பாடுவது தன்னுணர்ச்சிப் பாட்டு (Lyric) என்றும், தன்னிகரில்லாத தலைமக்கள் வாழ்வினை வரலாறாகக் காப்பியப் போக்கில் சுவைபட வடித்துக் காட்டுவது காவியம் (Epic) என்றும், நீதியை நிலைக்களமாகக் கொண்டு நீதியை உணர்த்த எழுந்த இலக்கியங்கள் நீதிநூல் (Didactive poetry) என்றும் கூறப்படும். 'அங்கதம்' என்று தமிழில் வழங்கப்படும் இலக்கியப் பிரிவு அங்கே எள்ளல் குறிப்புப் பொருந்திவரும் பாட்டு (Satiric poetry) என்றும், முல்லை நிலம் பற்றிய பாட்டு (Pastoral poetry) என்றும், இறைவனைக் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடும் பாடல்கள் பக்திப் பாடல்கள் (Hymns) என்றும், மெய்யுணர்வு கொளுத்தும் பாடல்கள் (Reflective poetry) என்றும் வழங்கப்படும். இவையே மேலை நாட்டில் இலக்கியத்தின் வகைகளாகக் கொள்ளப்படுகின்றன.

மேலும், தனி ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த அனுபவம் பற்றியும், மனித சமுதாயத்தின் பொதுவான அனுபவம் பற்றியும், தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள உறவைக் கிளத்திக் கூறும் அனுபவம் பற்றியும், இயற்கையின் இனிமையோடும் இணைந்தும் இயற்கையின் சீற்றத்தோடு சினந்தும் எழும் உறவின் அனுபவம் பற்றியும் உலகியலில் காண இயலாத புதிய செய்திகளைக் கற்பனைக் தேரில் ஏறிக் கண்டாற் போன்ற அனுபவம் பற்றியும் இலக்கியங்கள் எழலாம் என்றும் அறிஞர் கூறியுள்ளனர்.

புலவர் தம் மனநிலையை யொட்டியும் இலக்கியம் பாகுபாகு செய்யப்படும் என்பதை நாம் முன்னரே கணடோம். புலவர்கள் உணர்ச்சியில் திளைத்து உணர்வே வடிவாய்த் தாம் கலந்து பாடியவை ஒன்றிய பாட்டு (Personal or Subjective poetry) என்றும், மற்றவருடைய அனுபவத்தைத் தாம் கலவாமல் உள்ளதை உள்ளவாறே

எவ்வகைப் பற்றும் இன்றி உணர்த்தும் வகையில் பாடியவை ஒன்றாப் பாட்டு (Impersonal or objective poetry) என்றும் கூறுவர். முன்னையதில் தன்னுணர்ச்சிப் பாடல்களும் பக்திப் பாடல்களும் அடங்கும். பின்னையதில் எடுத்துரைப் பாட்டுகளும் (Narrative poetry) காவியங்களும் சேரும். நாடகம் மட்டும், இரண்டும் கலந்து வருவதாகும் (Both Subjective and objective) மேலும், இலக்கியத்தினை 'நேர் இலக்கியம்' ('Pure Lite.ature) என்றும், 'சார்பு இலக்கியம்' (Applied Literature) என்றும் வகைப்படுத்துவர். கலையின்பம் மட்டுமே நோக்கமாகக் கொண்டு புலவர் படைப்பன 'நேர் இலக்கியமாகும்'. அரசியல், சமயப்பற்று, பரிசு பெறும் வேட்கை இவற்றால் புலவர் பாடுவன, 'சார்பு இலக்கியம்' என்று கொள்ளப்படும்.

சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகளுக்குக் கலையின்பம் மட்டுமே நோக்கமாகும். ஆனால், மணிமேகலையை இயற்றிய சாத்தனாருக்குக் கலையின்பத்தோடு பௌத்த சமயக் கருத்துகளையும் உணர்த்த வேண்டும் என்ற எண்ணம் மிகுதியாய் இருந்தது. எனவே, முன்னையது நேர் இலக்கியமென்றும் பின்னையது சார்பு இலக்கியமென்றும் கூறப்படும்.

எனவே, இலக்கியம் மனித வாழ்விலிருந்து முகிழ்த்து மனிதனை மகிழ்விப்பதும் உணர்விப்பதுமான தொழிலை ஆற்றுகின்றது எனலாம். இலக்கியத்தின் பணி இன்பத்தை மட்டும் தருவது அன்று; இன்பத்தோடு வாழ்வின் குறிக்கோளினையும் ஓரளவு இன்னதென்று உணர்த்த வேண்டும். ஏனெனில், இலக்கிய ஆசிரியன் படிப்பவன் உள்ளத்தில் என்ன சிந்தனையைக் கிளறுகின்றானோ, அதனைக் கொண்டே அவன் மதிப்பிடப்பெறுகின்றான்[1] என்பது நன்கு புலனாகும்.

---

1. Poets are judged by the frame of mind they induce.
—Mathew Arnold, Eassays in Criticism, p. 144.

# 2. தொல்காப்பியனார் தந்த பொருளதிகாரம்

தொன்று பிறந்து மூத்த மொழி தமிழ். இம்மொழியில் எண்ணற்ற இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் எழுந்துள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டதும் பெருமைக்குரியதுமாய் இருக்கும் நூல் தொல்காப்பியமாகும். இந்நூலுக்கு முன்னர்த் தோன்றினவாகச் சில நூல்கள் கூறப்படினும், அந்நூல்களைப் பற்றி நாம் ஒன்றும் இன்று திட்டவட்டமாக அறியக் கூடவில்லை. இடைக்காலத்து எழுந்த 'இறையனார் களவியல்' என்னும் இலக்கண நூலின் உரைகாரர், தொல்காப்பியத்தோடு தோன்றியனவாகப் பல நூற் பெயர்களைத் தந்துள்ளார். ஆயினும், அவற்றுள் ஒன்றேனும் இதுபோழ்து கிட்டவில்லை. மேலும் இடைக்காலத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரம் மறைப்புண்டிருந்தது என்பது தெரிய வருகிறது. அக்காலத்துப் பாண்டிய மன்னன், 'பொருளதிகாரம் இல்லையே!' என்று கவன்றுரைத்தனன் என இறையனார் களவியல் உரைகாரர் குறிப்பிடுகிறார்.

இறையனார் களவியலுரை கொண்டு தொல்காப்பியம் இடைக்காலத்தில் மறைப்புண்டிருந்ததோ என ஐயுற வேண்டியுள்ளது. ஆயினும், இன்று தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமையாய்க் கிட்டுவது தமிழர் செய்த தவப்பேறே யாகும்.

தொல்காப்பியனார் குறித்த வரலாறு பற்றிப் பல செய்திகள் வழங்குகின்றன. அவற்றுள் தொல்காப்பியனாருடன் ஒருசாலை மாணாக்கராகிய பனம்பாரனார் பாடிய

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமே சிறந்த சான்றாகக் கொள்ளத்தக்கது.

பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் கொண்டு வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பிலே வழங்கும் செந்தமிழ் மொழியின் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக்கொண்டு, தமக்கு முன்னுள்ள தமிழ் நூல்களையும் நோக்கி, 'எழுத்து, சொல், பொருள், என்னும் மூவகையிலக்கணங்களையும் முறைப்பட ஆராய்ந்து, அவற்றின் இயல்புகளையெல்லாம் தொல் காப்பியனார் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் தொகுத்துத் தந்துள்ளார் என்பது தெரியவரும்

மேலும், இப்பொழுது நமக்குக் கிட்டும் இலக்கண நூல்களுள் தொன்மையுடையதாயும் முதன்மையுடைய தாயும் ஒரு தலையாக எண்ணப்படுவது தொல்காப்பியமே யாகும். எனவே, இலக்கண ஆசிரியர்களுள் தொல் காப்பியனார் தலைமை இடம் பெறுகின்றார். பண்டை இலக்கியங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் தொல்காப்பியமே நமக்கு உறுதுணை செய்கின்றது பழந் தமிழர் வரலாற்றிற்கு நல்லரண் செய்வது இந்நூலே யாகும்.

**'கூறிய குன்றினும் முதல்நூல் கூட்டித்**
**தோமின் றுணர்தல் தொல்காப் பியன்தன்**
**ஆணையின் தமிழ் அறிந் தோர்க்குக் கடனே'**

என்று, 'பல்காயனார், என்னும் பழம்புலவர் ஒருவர் பாராட்டுவது, தொல்காப்பியனார் வகுத்துரைத்த ஆணையின் வழியேதான், பின்வந்த தமிழ் இலக்கண ஆசிரியர்கள் நூல் இயற்றினர் என்பதனைத் தெற்றெனத் தெரிவிக்கின்றது. இதனாலும் தொல்காப்பியனாரின் தலைமைச் சிறப்புப் புலனாகின்றது. மேலும், பிற்காலப் புலவராகிய சுவாமிநாததேசிகர் தமது இலக்கணக் கொத்தில்,

'பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம் திருவள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்'

எனத் தமிழ் அறிவார் தெரிந்துகொள்ள வேண்டிய முதல் நூலாகத் தொல்காப்பியத்தைச் சுட்டியுள்ளார். எத்தனையோ இலக்கண நூல்கள் தமிழில் பிற்காலத்தில் எழுந்திருப்பினும் பொருட் பெருக்கத்துடனும், செறிவுடனும், தெளிவுடனும் முறைப்பட நிரலே கூறிய நூல் பிறிதொன்றில்லை எனலாம்.

தொல்காப்பியனார் என்னும் பெயர் நூலாசிரியரின் இயற்பெயரே என ஒரு சாராரும், பிற்காலத்தே ஆசிரியர் பெயர் மறந்துபோகத் தாம் எழுதிய நூல்வழித் தொல்காப்பியனார் எனத் தம் பெயர் பெற்றார் எனப் பிறிதொரு சாராரும் கூறுவர். தொல்காப்பிய உரை ஆசிரியர்களாகிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியனார் என்னும் பெயருக்குப் 'பழமையான காப்பியக் குடியில் பிறந்தோர்' எனப் பொருள் கூறியுள்ளனர். 'காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து' என்று சிலப்பதிகாரத்தில் வரும் தொடர் கொண்டு, இவர் பிறந்த குடி காப்பியக் குடி என்பர். ஆயினும், ''செய்தானாற் பெயர் பெற்றன அகத்தியம் தொல்காப்பியம் என இவை'' என இறையனார் களவியல் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி கொண்டு. தொல்காப்பிய நூலின் ஆசிரியர்தம் இயற்பெயர் தொல்காப்பியனார் என்பதே எனத் துணியலாம். இவர், பிற்கால நன்னூல் உரைகாரர் மயிலைநாதரால் 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்' என வழங்கப் படுகின்றார். 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி என்ற தொடருக்கு உரை எழுதப்புகுந்த உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், 'பழைய காப்பியக் குடியில் உள்ளோன் எனத் தன் பெயரை மாயாமல் நிறுத்தி' எனப் பாயிரவுரைக்கண் குறிப்பிட்டுள்ளார். அறிஞர் சிலர், தொல்காப்பியனார் என்ற

பெயர் 'தொல்' என்ற அடை மொழியுடனும் 'ஆர்' என்ற சிறப்புப்பெயர் விகுதியுடனும் வழங்கப்பெற்றிருக்க வேண்டும்' எனக் கருதுவர். மேலும், 'காப்பியன் என்னும் பெயருடைய புலவர் பலர் அக் காலத்தே வாழ்ந்திருந்ததால் அவரினும் வேறு பிரிந்து அறிதற்காக இத்தகு அடைமொழி சேர்த்து வழங்கப் பெற்றனர்' என்பர். இவர் சேர நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இன்ன சமயத்தினைச் சேர்ந்தவர் என்றும் துணிந்து கூற முடியவில்லை என்றும், கி. மு. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் ஒருவாறு கூறலாம். மேலும், 'தொல்காப்பியனார் தம் ஆசிரியர் அகத்தியனார்' என்பதும், 'தொல்காப்பியத்திற்கு முதல் நூல் அகத்தியம்' என்பதும் பலரால் இன்று நம்பப்படும் செய்தியாகும்.

இத்தகு சிறப்புப் பொருந்திய தொல்லாசிரியரும் நல்லாசிரியருமான தொல்காப்பியனார் இயற்றிய நூல் தொல்காப்பியம் என வழங்கப்படுகிறது. தொல்காப்பியம் என்னும் நூற்பெயர் தொல்காப்பியனாரால் செய்யப்பட்டது எனப் பொருள்படுவதாகக் கூறுவர். இளம்பூரணர், சேனாவரையர் முதலிய உரையாசிரியர்கள் இக்கொள்கை உடையோர் ஆவர். ஆயினும், நாவலர் டாக்டர் ச சோமசுந்தர பாரதியார் அவர்கள், 'இந் நூலாசிரியரின் பெயராகிய தொல்காப்பியர் என்பதே இந்நூலுக்கு வழங்கப்பெற்றுப் பிற்காலத்தில் தொல் காப்பியம் எனப் பிழையாக வழங்கப்பட்டது' என்பர்.

தொல்காப்பியத்தில் ஏறத்தாழ இருநூற்றைம்பது இடங்களில் தொல்காப்பியனார், தம் முன்னூல் ஆசிரியர் பலரை, 'என்மனார் புறவர்,' 'யாப்பறி புலவர்,' 'நுண்ணிதின் உணர்ந்தோர்,' 'என்ப,' 'மொழித் தொன்னெறிப் புலவர்,' 'கூறுப,' 'அறிநதிசினோரே' என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளமை கண்டு, தமிழில் தொல் காப்பியத்திற்கும் முன்னர் இலக்கண நூல்கள் இருந் திருத்தல் வேண்டும் எனத் துணியலாம்.

தொல்காப்பியம் முப்பெரும் பகுப்பினையுடையது; மொத்தம் 1612 நூற்பாக்களையுடையது. முதலாவது எழுத்ததிகாரம், 'நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்' என ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியான சொல்லதிகாரம் 'கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, பெயரியல், வினையியல், இடையியல், உயிரியல், எச்சவியல், என ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. மூன்றாவது பகுதியான பொருளதிகாரம் 'அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்' என ஒன்பது இயல்களாகப் பிரித்துப் பேசப்படுகின்றது.

தொல்காப்பியத்திற்குப் பலர் உரையெழுதியுள்ளனர். இவற்றுள் காலத்தால் மூந்திய உரை இளம்பூரணர் உரையாகும். காலத்தால் பிந்தியது நச்சினர்க்கினியர் உரையாகும். எழுத்ததிகாரத்திற்கு உரை கண்ட பெருமைக்குரியோர், இளம்பூர்ணரும் நச்சினார்க்கினியருமாவர். சொல்லதிகாரத்திற்கு உரைகண்டோர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்னும் ஐவராவர். இவற்றுள் கல்லாடர் எழுதிய உரை முழு வடிவில் தனி நூலாக இதுகாறும் வெளிவரவில்லை. பொருள் அதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களுக்கும் செய்யுள் இயலுக்கும் நச்சனார்க்கினியர் உரை வகுத்துள்ளார். மெய்ப் பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டும் பேராசிரியர் உரை கண்டுள்ளார். ஆக, தொல்காப்பியம் முழுமைக்கும் கிட்டுகின்ற உரை இளம்பூரணர் உரையே. இவ்வுரை எளிமையும் இனிமையும் கொண்டது. சுருக்கமும் தெளிவும் அமைந்தது. இவையே பண்டைத் தமிழ் உரையாசிரியர் தந்த உரை நூல்களாகும். இவ்வுரை நூல்கள் இல்லையேல்

இன்று தொல்காப்பியத்தை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் இயலாது. எனவே, இவ்வாசிரியர்கட்குத் தமிழகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

உலகின் பல மொழிகளிலும் நாம் எழுத்துக்கும் சொல்லுக்குமே இலக்கணம் அமைந்திருக்கக் காணலாம். ஆனால், தமிழ்மொழியில் எழுந்த மிகப்பழம் பேரிலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் எழுத்திற்கும் சொல்லிற்கும் இலக்கணம் கூறப்பட்டிருப்பதோடு, இலக்கியத்தில் அமையும் பொருளுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஆக, பொருளதிகாரம் என்பது, எழுத்தால் அமைந்த சொற்களால் உணர்த்தப்படும் பொருள்களின் இலக்கணங்களை வகைப்படுத்தி விளக்கமாக உரைப்பது ஆகும். ''வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' எனத் தொல்காப்பியப் பாயிரத்தின் முற்பகுதியில் காணப்படுவதால், தொல்காப்பியனார் உலகவழக்கையுணர்ந்து, பண்டைத்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து, தமிழ்மொழியின் அமைதியினைவிளக்கும் எழுத்தினையும் சொல்லினையும் கூறி. பின்னர்த் தமிழ்மொழி வழங்குவதற்கு நிலைக்களனாயுள்ள தமிழர்தம் பீடுற்ற பெருவாழ்வினைப்பெருமையுறப் பேசுகின்றார் எனலாம்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர.'**

—தொல் : அகத்திணையியல், 1.

என்று அகத்திணையியலில் புலனெறி வழக்கம் இன்னது என்பதும், ஐந்திணைக்கு உரிமையுடையது என்பதும், இன்ன செய்யுட்கு உரித்து என்பதும் உணர்த்தப்படுகின்றன. முதற்கண் அகத்திணையியலின் முதலாவது நூற்பா,

**'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப'**

தொல். அகத்திணையியல் : 53

என அமைந்துள்ளது. 'கைக்கிளை, முல்லை. குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை' என ஏழு திணையினை - ஒழுகலாற்றினைத்— தொல்காப்பியனார் சுட்டியுள்ளார். கைக்கிளையென்பது ஒருதலைக் காமமாகும். ஒருவன் ஒருத்தி என்னும் இருவருள் ஒருவர் மட்டும் அன்பினாற்கூடி வாழ ஒருப்பட, பிறர் ஒருவர் அவரது அன்பின் திறத்தை உணராத நிலையில் இருப்பது ஒரு பக்கத்து உறவாதலின், கைக்கிளை 'ஒருதலைக் காமம்' அல்லது 'ஒருமருங்கு பற்றிய கேண்மை' என்பது அறியப் படும். பெருந்திணை எனப்படுவது பொருந்தாக் காமமா கும். ஒருவன் ஒருத்தியாகிய இருவருள் ஒருவருக்கொருவர் அன்பின்றிக் கூடி இன்பம் நுகரும் நிலை பெருந்திணை யாகும் இத்தகைய உளம் பொருந்தாத வாழ்க்கை உலகில் பல இடங்களிலும் காணப்பெறுதலால், இதற்குப் பெருந் திணையெனப் பெயரிட்டனர். 'நடுவண் ஐந்திணை' எனப்படுவது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம்.

முதலில் அகம் புறம் என நந்தமிழ் இலக்கியங்கள் வாழ்வுநெறியினை இருகூறாகப் பகுத்துப் பேசுகின்றன. முதலாவது 'அகம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் பின்வரு மாறு பொருள் விரிப்பர்: ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாத தாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவ தோர் பொருளாதலின், அதனை 'அகம்' என்றார்.

''இதனை ஒழிந்தன, ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்குந் துய்த்துணரப்படுதலானும், இவை இவ்வாறு

இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புற மெனவே படும் என்றார்.''

காம நிகழ்ச்சியின்கண் ஒத்த அன்பினராய்க் கூடுதற் கமைந்த தலைமகனும் தலைமகளும் ஆகிய இருவர் மாட்டும் குடிப்பிறப்பு, அதற்குத்தக்க நல்லொழுக்க நிறை, ஆள்வினையுடைமை, பருவம், வடிவம், வடிவ வனப்புக் கொண்டு எழும் காதல், உள்ளத்தை ஒருவழி நிறுத்தும் பண்பு, எல்லா உயிர்கள் மாட்டும் அன்புடையராதல், அறிவு, எக்காலத்தும் திருத்தகவிற்றாகிய உள்ளம் உடைமை ஆகிய இப் பத்துப் பண்புகளும் ஒத்திருத்தல் வேண்டும் என்பர் தொல்காப்பியனார். இதனை அவர் மெய்ப்பாட்டியலில், கீழ்க்காணும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே**

— தொல். மெய்ப்பாட்டியல்: 25

அடுத்து, தொல்காப்பியனார் அகத்திணையியலில் 'முதல், கரு, உரிப்பொருள்கள்' என மூன்று பொருள்களை வைத்துள்ளார் 'காட்சிப் பொருள், கருத்துப் பொருள்' என்னும் இரண்டும் இதில் அடங்கும். நிலமும் காலமும் உயிர் வாழ்க்கைக்கு உறுதுணை செய்வன; அவை முதற் பொருள் எனப்பட்டன. நிலம் நான்காகப் பகுக்கப்பட்டது. 'காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை' என்றும், 'மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி' என்றும், 'வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம்' என்றும் 'கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல்' என்றும் குறிப்பிடப் பெற்றன. இவை 'நானிலம்' என வழங்கப்பட்டன. வளங்குறைந்த பகுதி 'பாலை' எனப்பட்டது. இதனைச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள்:

**'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்'**

—சிலப், காடுகாண் காதை : 64—66

என்று குறிப்பிட்டுள்ளார்.

காட்டில் முல்லையும், மலையில் குறிஞ்சியும், வயலருகே மருதமும், கடலருகே நெய்தலும் பெருகச் சிறப்பாக வளர்தல் பற்றி, அந்நிலங்களுக்கு முறையே 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்' எனப் பெயரிட்டனர். பாலைக்குத் தனி நிலம் இன்றாயினும், வேனிற் காலத்தும் தளிரும் சினையும் வாடாமல் நிற்கும் பாலை என்னும் பெயருடைய மரம் உண்டாதற் சிறப்பு நோக்கிப் பாலை எனப்பட்டது.

பொழுது, 'பெரும் பொழுது', 'சிறு பொழுது' என இருவகைப்படும். 'கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்' எனப் பெரும்பொழுது ஆறு வகைப்படும். 'ஆவணி புரட்டாசி கார்காலம்' என்றும், 'ஐப்பசி கார்த்திகை கூதிர்காலம்' என்றும், 'மார்கழி தை முன்பனிக் காலம்' என்றும், 'மாசி பங்குனி பின்பனிக் காலம்' என்றும், 'சித்திரை வைகாசி இளவேனிற் காலம்' என்றும், 'ஆனி ஆடி முதுவேனிற் காலம்' என்றும் கூறப்படும். சிறுபொழுது, 'காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை' என்பனவாகும். கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகும். கூதிர் காலமும் இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி என்னும் பெரும்பொழுதுகளும் நண்பகலும் பாலைக்குரியன. ஆறு பெரும்பொழுதுகளும், வைகறை விடியல் என்ற சிறுபொழுதுகளும், மருதத்திற்கு உரியன. அது போன்றே ஆறுபெரும் பொழுதுகளும் எற்பாடும் நெய்தலுக்குரியன.

அடுத்து, நிலமும் காலமுமாகிய முதற்பொருள்களின் சார்பினால் உண்டாகும் புல் முதல் மக்கள் ஈறாக உள்ள உயிர்ப்பொருள்களும், உயிரில் பொருள்களும் கருப் பொருள்கள் என வழங்கப்படும். இதனைத் தொல் காப்பியனார்,

**'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப'**

—தொல். அகத்திணையியல்: 18

என்று குறிப்பிட்டுள்ளார்.

'உரிப் பொருள்' என்பது, அவ்வந்நிலத்திற்குரிய ஒழுக்கமாகும். முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், குறிஞ்சிக்குக் கூடலும் கூடல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும் திணை ஒழுக்கங்களாக — ஒழுகலாறுகளாகக் கூறப்படும். இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம பற்றியன வாதலாலும், மகளிர் கற்பொழுக்கத்தொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிலிருந்து நல்லறஞ் செய்தலே முல்லையாதலாலும், முல்லைத்திணை முதற் கண் கிளத்தப்பட்டது. புணர்தலின்றி இல்லறம் நிகழா மையின், குறிஞ்சி அதன் பின்னர் வைக்கப்பட்டது. புணர்ச்சிக்குப் பின்னர் ஊடல் நிகழ்தலின் மருதம் குறிஞ்சிக்குப் பின்னதாயீற்று. மருதத்திற்குரிய பரத்தை யிற்பிரிவு போலப் பிரிவின்கண் நிகழ்வது இரங்கலாகிய நெய்தலாதலின் நெய்தலை இறுதியில் பின்வருமாறு வைத்துள்ளார் தொல்காப்பியனார் :

**'மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே**

—தொல். அகத்திணையியல்: 5

இந் நூற்பாவைக் கொண்டு அந்நாட்களில் முல்லைக்குத் தெய்வம் திருமாலாகவும், குறிஞ்சிக்குத் தெய்வம் முருகனாகவும், மருதத்திற்குத் தெய்வம் இந்திரனாகவும், நெய்தலுக்குத் தெய்வம் வருணனாகவும் கொள்ளப் பெற்றனர் என்பது தெரிய வருகிறது.

புறத்திணையியலில் அகத்திணை ஏழற்கும் புறமாகிய ஏழு திணைகள் கூறப்படுகின்றன. குறிஞ்சிக்குப் புறமாக வெட்சித் திணையும், முல்லைக்குப் புறமாக 'வஞ்சித் திணை'யும், மருதத்திற்குப் புறமாக 'உழிஞைத் திணை' யும், நெய்தற்குப் புறமாகத் 'தும்பைத் திணை'யும், பாலைக்குப் புறமாக 'வாகைத் திணை'யும், பெருந் திணைக்குப் புறமாகக் 'காஞ்சித் திணை'யும், 'கைக்கிளைக் குப் புறமாகப் 'பாடாண் திணை'யும் கூறப்படும். 'வெட்சி' எனப்படுவது பகைவர் நாட்டுப் பசு மந்தை களைக் கவர்தல் என்றும், அதனை மீட்டல் 'கரந்தை' என்றும், மாற்றான் நாட்டு மண்ணைக் கைக்கொள்ளுதல் 'வஞ்சி' என்றும், பகைவனது மதிலை வளைத்துக் கொள்ளுதல் 'உழிஞை' என்றும், பகைவரை வெல்லுதல் 'வாகை' என்றும், வீடுபேறு காரணமாகப் பல வகை நிலையாமைகளை உணர்த்துவது 'காஞ்சி' என்றும்' புலவரால் பாடப்பெறும் ஆண்மகனின் வீரம், கொடை, பண்பு முதலிய பண்பு நலன்களைச் சிறப்பித்துக் கூறுவது 'பாடாண் திணை' என்றும் கூறப்பெறும். போர்க்களத்துப் பட்ட வீரர்கட்கு அந்நாள்களிலேயே 'நடுகல்' எடுக்கப் பட்டது.

களவியலில் ஆண் மகன் இயல்பினைப் **'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'** என்றும், மகளிர் இயல்பினை,

> **'அச்சமும் நாணும் மடனுமுந் துறுதல்**
> **நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப'**

—தொல். களவியல் : 8

என்றும் தொல்காப்பியனார் கிளந்துரைக்கின்றார்.

கற்பியலில் கற்பு நெறி இன்னது என்பதனைப் பின் வருமாறு கூறியுள்ளார் :

**'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே'**

—தொல். கற்பியல் : 7

இந் நூற்பாவழி உற்றார் உறவினர் அறியத் தலைமகனும் தலைமகளும் இல்லறத்தில் தலைப்படும் நெறியினை நாம் அறிகிறோம்.

பொருளியல் மேற்சொல்லப்பட்ட இயல்களிலும் இனிச் சொல்லப்பெறும் இயல்களிலும் வரும் பொருளினது தன்மை உணர்த்தப்படுகிறது. அகப் பொருளில் வரும் நற்றாய், செவிலி, தோழி, தலைமகன், தலைமகள் முதலானோர் தம் பண்புகளும் செயல்களும் இப்பொருளியலில் நன்கு கிளத்தப்படுகின்றன.

மெய்ப்பாட்டியலில் எண்வகைச் சுவைகள் கூறப்படுகின்றன.

**'நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப'**

—தொல். மெய்ப்பாட்டியல் : 3

நகை, அவலம், இழிபு, வியப்பு, அச்சம், வீரம், சினம், மகிழ்ச்சி என்னும் எட்டுச் சுவைகளும் மெய்ப்பாடுகளின் நிலைக்களனாய் உள்ளன. தொல்காப்பியனார் மெய்ப்பாடுகள் வாயிலாக மக்களது உள்ளத்தில் கிளர்ந்தெழும் எண்ண அலைகளை நுனித்தறிந்து ஆய்ந்து வரையறை செய்து கூறியுள்ளார்.

உவமவியலில் உவமை பற்றிப் பேசப்பட்டுள்ளது. தொல்காப்பியனார் உவமை அணி ஒன்றையே கொண்

டார், பிற்காலத்தில் தண்டியாசிரியர் வழியொற்றி அணிகள் பலவற்றைத் தமிழில் படைத்துக் கொண்டனர். உவமை பிறக்கும் நிலைக்களத்தை,

> **'வினைபயன் மெய்உரு என்ற நான்கே**
> **வகைபெற வந்த உவமத் தோற்றம்'**
>
> —தொல். உவமவியல் : 1

என்று தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார். உவமை யாவது, ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை ஒப்புமை கூறி, அதன்வழி அப்பொருளை விளக்குவதாகும். ஒருவன் அறியாத பொருளை அவனுக்கு அறிவுறுத்த அவன் அறிந்த பொருள் கொண்டு ஒப்புமை காட்டி அறிவுறுத்த வேண்டும்.

செய்யுளியலில் செய்யுள்களின் இலக்கணம் கூறப் பட்டுள்ளது. 'செய்யுள்' எனப்படுவது, அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரண்டனுள் ஒரு பொருள்மேல் அணி, ஓசை முதலிய நலன்கள் அமையச் சொற்களால் இயற்றப் பெறுவதாகும். ஒரு செய்யுளில் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, முரண் முதலியன அமைந்திருக்கும். தனிநிலைச் செய்யுள் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, மருட்பா, பரிபாடல் என அறு வகைப்படும்.

தொல்காப்பியத்தின் இறுதி இயல் மரபியலாகும். 'மரபு' என்பது ஒவ்வொரு பொருளுக்கும் ஆன்றோர் வழங்கிய சொற்களை, அவர்கள் வழங்கிய முறையின் படியே கூறுதல்ஆகும். உயர்திணை ஆண், பெண், மக்கள், குழந்தை, உயிரினக் குழவி, மரஞ்செடி கொடி இவற்றின் தழைகள் முதலியவற்றை இன்னின்ன மொழிகளால் உணர்த்த வேண்டும் என்ற முறையினை மரபியல் சுட்டு கின்றது. மேலும் ஆறறிவு உயிர்களையும் பின் வருமாறு தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது :

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'**

—தொல். மரபியல். 27

இவ்வாறு பொருள் அதிகாரம் நமக்கு அரிய பல செய்திகளை அறிவுறுத்துகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின் சில இலக்கண நூல்கள் தோன்றியிருப்பினும் தொல் காப்பியம் இன்றளவும் வழக்கும், வாழ்வும், புதுமையும் கொண்டு துலங்குகின்றது. மேலும் தொல்காப்பியம், இலக்கணத்தைச் செம்மையான முறைப்பாட்டுடனும் வரம்பின் உறுதிப்பாட்டுடனும் தெளிவுற விளக்குகின்றது, இன்றைய மொழி நூலார் (Linguists) வியக்கும் வண்ணம் பல அரிய மொழியியற் கருத்துகளைப் பொதித்து வைத் துள்ளது.

பழந்தமிழர் நாகரிகத்தினைப் பற்றிப் பரக்கப் பேசும் நூல் தொல்காப்பியம். மக்கள் வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்துக் காட்டும் இலக்கிய நெறியிணை எடுத்து இனிதியம்பும் ஒப்பற்ற தனிப்பெருநூல் இது. எனவே இதனைக் கழிந்துபோன பழங்காலத்தின் பெருமை யினை உணரவைக்கும் 'காலக் கண்ணாடி' எனலாம். தமிழினத்தின் பரந்துபட்ட பண்பாட்டுப் பெருமையினைப் பறைசாற்றும் தொல்பெரு நூலாகத் தொல்காப்பியத் தினைக் கருதுவதில் யாதொரு தடையும் இல்லை. எனவே தொல்காப்பியத்தினைத் தமிழர், தம் விழுமிய சொத்தாக எண்ணிப் பாதுகாப்பார்களாக.

# 3. சங்க கால மகளிர்

சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற் காலமாகும். பழந்தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களனாய் இருந்தவை சங்க கால மகளிரின் அரும்பெரும் பண்புகளே. பெண்களே வாழ்வின் கண்கள் எனலாம். 'பெண் இன்றேல் ஆணில்லை. ஆணின்றேல் பெண் இல்லை' என்றபடி, ஆணும் பெண்ணும் இணைந்து இல்லற நெறிப்படுகின்ற வாழ்வே முழுமையான வாழ்வு எனக் கொள்ளப்பட்டது. இதனை 'மக்களொடுமகிழ்ந்து மனையறம் காத்து' என்பர் நம்பியகப் பொருள் ஆசிரியர். இதுகுறித்தே, 'மனைக்கு விளக்கம் மடவார்; மடவார் தமக்குத் தகைசால் புதல்வர்' என்ற மொழியும் எழுந்தது; உமையொரு பாகனாய்ச் சிவபெருமான் கொலு வீற்றிருப்பதும் தமிழர் தம் வாழ்வின் தத்துவத்தினை நன்கு விளக்கும்.

'மாதர் காதல்' என்றார் தொல்காப்பியனார். மேலும் அவர் பெண்ணிற்குப் பின்வரும் பண்புகள் இன்றியமை யாதன என்றும் குறிப்பிட்டார்.

**'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'**

—தொல். களவியல்: 23

என்று கூறுவதினின்றும், 'மகளிர்க்கு உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது, அந்த நாணத்தைக் காட்டிலும் கற்பு நனி சிறந்தது' என்பது புலனாகின்றதன்றோ! பிறிதோரி டத்தில், 'ஆண்களுக்குப் பெருமையும் உரனும் வேண்டப் படுவன' என்று குறிப்பிட்ட தொல்காப்பியனார், பெண் களுக்கு,

**'அச்சமும் நாணும் மடனுமுந் துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப'**

— தொல். களவியல் : 8

என்றார். இதன்வழி, அச்சம், நாணம், மடம் என்பன மகளிர்க்குரிய பண்புகளென்பது தெரிகின்றது. மகளிர் தம் மனத்தில் குறிப்பின்றித் தோன்றும் நடுக்கம், அச்சம் என்று கூறப்படும். பெண் தன்மையோடு பொருந்தாத புறச்செயல்களில் ஒழுகாது ஒதுங்கி வாழ்தலே நாணம் எனப்பட்டது. இவ்வுலகினையும் இதில் தோற்றங் கொண்டுள்ள பொருள்களின் இயல்பினையும் பிறர் தமக்கு அறிவிக்க, அதனை அறிந்துணர்ந்து, பின்னர் அவ்வாறு அறிவால் மேற்கொண்ட கொள்கையினைச் சிறிதும் நெகிழவிடாது போற்றுதல் மடன் என்று கூறப் படும். இவ்வாறு பெண்கள் ஆடவர் அவாவுறும் நற்குண நற்செய்கைகளில் மேமபட்டிருக்க வேண்டும்! ஆடவர், மகளிர்பால் குடிகொண்டிருக்க வேண்டும் என்று விரும்பிப் போற்றும் பண்புகளைத் தொல்காப்பியர்,

**'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான'**

—தொல். பொருளியல்: 13

என்று பாராட்டுவர். இதற்கு விளக்கம் கூறவந்த உரை யாசிரியர் இளம்பூரணர், 'செறிவு என்பது அடக்கம்; நிறைவு என்பது அமைதி; செம்மை என்பது மனங் கோடாமை; செப்பு என்பது சொல்லுதல்; அறிவு என்பது நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிதல்; அருமை என்பது உள்ளக்கருத்து அறிதலருமை' என்று, தம் நுண்மாண் நுழைபுலம் விளங்கும் வண்ணம் உரை விளக்கம் தந்துள்ளார்.

கண்ணிறைந்த பேரழகுகொண்டு ஆடவர் உளங் கவர்ந்து நிறையும் நங்கை 'காரிகை' எனப்பட்டாள். இது பற்றியே மணிமேகலையாசிரியர் 'சீத்தலைச் சாத்தனார்' தம் காவியத்தலைவி மணிமேகலையைச் சுதமதி வாயி லாகப் பின்வருமாறு அறிமுகப்படுத்தியுள்ளார் :

**'மணிமே கலைதன் மதிமுகந் தன்னுள்**
**அணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய**
**கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்**
**படையிட்டு நடுங்குங் காமன்'**

—மணிமேகலை, மலர்வனம்புக்க காதை: 20.23

பெண்ணொருத்தியின் அழகினை மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதன் என்ற புலவர்.

**பூவொடு புரையுங் கண்ணும் வேயென**
**விறல்வனப் பெய்திய தோளும் பிறையென**
**மதிமயக் குறூஉ நுதலும்**

—குறுந்தொகை. 226: 1-3

என்று வருணித்துள்ளார். அடுத்து, மகளிர் மென்மையான உடலமைப்பினைப் பெற்றவர். புறவுலகின் பொய்ம்மையும் சூதும் அறியாதவர்: உலகின் இடையூறு நிலைகளையும் விலங்கு முதலியவற்றால் நேர்ந்திடும் இடுக்கண்களையும் உணராதவர். ஆனால் உள்ளத் திண்மையால் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொண்டு இல்லறத்தினை நல்லறமாக ஓம்பும் ஆற்றல் சான்றவர்கள் அவர்களே யாவார்கள். இவ்வாறு மகளிர்பாற் காணத்தகும் மென்னீர்மையினைச் 'சாயல்' என்ற சொல்லால் நந்தமிழர் வழங்கினர். சாயலாகிய மென்மைத் தன்மையினை இயல்பாகப் பெற்றிருத்தலின் பெண்டிர் பண்டு 'மெல்லியலார்' எனப் பொருட்செறிவோடு வழங்கப் பெற்றனர். இத்தகு மென்மை, வன்மையினைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் சான்றது.

**'நீரோ ரன்ன சாயல்**
**தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே'**

(95: 4, 5)

என்ற குறுந்தொகைப் பாடலின் அடிகள் இக்கருத்து நுட்பத்தினைப் புலப்படுத்தா நிற்கும்.

பெண்ணின் வாழ்வினை இரு பிரிவாகப் பகுத்துணரலாம், திருமணத்திற்கு முன்னர்த் தன் பெற்றோர் வீட்டில் வாழும் வாழ்வு; திருமணம் முடித்துத் தன் காதற்கணவன் வீட்டில் வாழும் கற்பு வாழ்வு என இருவகைப்படுத்திக் காணலாம்.

மகளிர் அக்காலத்தே கல்வி கேள்வியில் வல்லவராயிருந்தனர். ஆடவர் பயிலுவதற்குரிய கல்வி வேறு. போர் தூது, காவல், பொருளீட்டல் முதலிய புறத்துறைகள் ஆண்மகனுக்குரிய துறைகளாகும், எனவே. இத்துறைக் கல்வியே ஆடவர்க்கு வேண்டப்படுவதாயிற்று. மகளிர் தம் குடும்பப் பாங்கிற்கேற்பவும் பண்பிற்கேற்பவுமான கல்வி பயின்றனர். அவர் கற்ற கல்வி அவர்தம் உடலுறுப்புகளுக்கு இயைந்த கல்வியாகவும், பிற்காலத்தில் அவர் மனைவாழ்வினை மாண்புற நடத்துவதற்குஏற்பத் துணை செய்வதாகவும் இருந்தது. மகளிரைப் பொறுத்தவரை அவர்தம் குடும்பமே நல்ல பல்கலைக் கழகமாகவும், அவர்தம் தாயரே சியந்த பேராசிரியராகவும் விளக்கமுற்றனர். எனவே, அக்கால மகளிர் இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழ்த்துறைகளையும் கற்றுத் துறைபோய வித்தகராயிருந்தனர். இளமையிலேயே நிறைகல்வி யுற்றவரை 'முதுக்குறைவி' என வழங்கினர். 'முதுக்குறைந்தனளே விழவுமுதலாட்டி' என்ற தொடர் சங்க இலக்கியங்களில் யாண்டும் வரக் காணலாம். கண்ணகியும் சிலப்பதிகாரத்தில் 'சிறுமுதுக்குறைவி' எனக் கோவலனால் பாராட்டப்படுகின்றாள்;

**'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்!'**

—சிலப். கொலைக்களக் காதை: 68

எனவே, பெண்கல்வி சிறந்த தமிழ் நாடாகச் சங்க காலத் தமிழகம் துலங்கியது. சான்றாகப் பெண்பாற்புலவர் சிலர்

பெயர்கள் வருமாறு; அஞ்சியத்தை மகள் நாகையார், அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊட்டியார், ஊண்பித்தையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினியார், நக்கண்ணையார், நெடடிமையார், நெடும்பல்லியத்தை, பாரி மகளிர் பூங்கணுத்திரையார், பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, பொத்தியார், போந்தைப்பசலையக்ர், மாறோக்கத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார் வெறிபாடிய காமக் கண்ணியார் முதலியோர் அக்காலப் புலமை பெல்லியலாரிற் சிலராவர், இவர்களில் அரசனுக்கே அறவுரை கூறித் திருத்திய ஔவையார் போன்ற பெண்பாற்புலவர்களை மறக்கவும் ஒல்லுமோ? 'காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம்' என்னும் இரண்டு யாப்பிலக்கண நூல்கள் காக்கை பாடினியார் என்னும் பெண்பாற் புலவரால் இயற்றப்பெற்றனவாக அறியும்போது, மகளிர் தம் கல்வியின் மாண்பு தெற்றெனப் புலனாகின்றது.

ஆடவரினும் பெண்டிரே இசைப்பயிற்சி மிக்கிருந்தனர். அவர்கள் குரல் இயற்கையாகவே இனிமை நிரம்பியிருந்தது. எனவே இசைத்தமிழ், மகளிர்வழிப் பெரிதும் வளர்ந்தது. தாலாட்டுப் பாடல் தாய்மார் வளர்த்த இயலிசைத் தமிழ் இலக்கியம் அன்றோ? யானை முதலிய காட்டுவிலங்குகளும் மறவர்களும் அவர்தம் இசைக்கு வயப்பட்டுத் தம் கொடூரத்தன்மை மறந்து நின்றமையைச் சங்க இலக்கியங்கள் நமக்கு நன்கு புலப்படுத்துவனவாம்:

**'ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை'**

எனப் பொருநராற்றுப்படை (21, 22) குறிப்பிடுகின்றது.

மலைவாழ் மகளிர் தினைப்புனங்களில் கிளியோட்டித் தினைப்புனத்தினில் விளைந்த முற்றிய தினைக்கதிர்களைக் காத்தனர் என்பது சங்க இலக்கியத்தில் பலவிடங்களில் பேசப்படுகின்றது.

'சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை'

—குறுந்தொகை, 141: 1-2

என்று சுனைப்பூவினைப் பறித்து மாலை தொடுத்தலும், தினைப்புனத்தில் கிளி கடிதலும் மலைவாணர் மகளிரின் விளையாட்டுகள் எனக் குறிப்பிடுகின்றது. பொதுவாக இளமகளிர் அக்காலத்தே கவலையிற் றோயாமல் எஞ்ஞான்றும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர் என்பதனை, நற்றிணைப் பாடல் ஒன்று கொண்டு அறியலாம்.

'விளையா டாயமொடு ஓரை யாடாது
இளையோர் இல்லிடத் திற்செறித் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்'

—நற்றிணை 68: 1-5

இந்நற்றிணைப் பகுதிகொண்டு, மகளிர் வீட்டின் வெளியே சென்று விளையாடாமலிருப்பது அறமாகாது என்பதும், அதனால் செல்வமும் தேய்ந்துவிடும் என்பதும் தெரிய வருகின்றன. விளையாடும் மகளிர் கூட்டத்தினைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் சங்க காலப் புலவர்கள் ''ஓரையாயம்'' என்றும், 'பொய்தன் மகளிர்' என்றும் குறிப்பிடுகின்றனர். பஞ்சாய்க் கோரைப்புல் கொண்டு செய்யப்பட்ட பாவை

கொண்டு மகளிர் அந்நாளில் விளையாடிய விளையாட்டு 'ஓரை' எனப்பட்டது.

வண்டலயர்தல், சிற்றில் இழைத்தல், துணங்கையாடுதல்,குரவையாடுதல் முதலிய விளையாட்டுகள் மகளிர் விளையாட்டுகளாகச் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப் பெறுகின்றன.

**'பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை**
**ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி**
**ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்'**

—குறுந்தொகை : 239 : 1-3

என்ற பாடற்பகுதியும்,

**'அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி**
**வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்**
**முடந்தை நெல்லின் விளைவயல்'**

—பதிற்றுப்பத்து : 2-1-3

என்ற பாடற்பகுதியும், நெய்தல் நிலமகளிர் விளையாட்டினைக் குறிப்பிடும்.

தாம் வளர்க்கும் பாவைபாற் பேரன்பு செலுத்தினர். பெண்கள் தாம் வளர்க்கும் பாவைக்கு ஏதேனும் தீங்கு நேரிடின், அதனைப் பொருட்படுத்தித் தாங்களும் துன்புறுவர் எனக் குறிப்பிடப் பெறுகின்றது.

**'தாதிற் செய்த தண்பனிப் பாவை**
**காலை வருந்துங் கையா றோம்பென'**

—குறுந்தொகை : 48 : 1-2

மேலும் அப்பெண்கள் பாவையைத் தம் மடிமீது கிடத்திப் பாலுட்டி மகிழ்ந்து, பிற்கால வாழ்வின் நடைமுறைக்

குரிய பயிற்சியினை இக்கால விளையாட்டு வழியினி லேயே பெறுகிறார்கள் என்பதனை ஐங்குறுநூற்றின்கண் அமைந்துள்ள அழகிய பாடலொன்று (128) விளக்கு கின்றது.

இக்காலத்தும் இளமகளிர் மரத்தாலியன்ற பொம்மை கள் இரண்டனுக்கு மணமகன் மணமகள் என்ற பெயர் சூட்டி மணவினை நடத்தி மகிழ்வதனைக் காணலாம். அது போன்றே சங்க காலத்திலும் மகளிர் பஞ்சும், பட்டும் பூந்தாதும் கொண்டு தாம்செய்த அழகிய பொம்மை களுக்குப் பெயர்கள் இட்டு, பல வீடுகளிற் சென்று பிச்சை ஏற்றுவந்து, பிறர்க்கு வழங்கி, மணவிழா விளையாட்டு நிகழ்த்தினர் என்பதனைக் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

சிலம்பும் வளையும் அணிந்த இளமகளிர் பொன்னாற் செய்த கழற்காய் கொண்டு, மணல் மேடுகளிலே இருந்து விளையாடுகிறார்கள் என்பதனை,

**'செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்**
**பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்** (36:3-4)

என்ற புறநானூற்றுப் பாடற்பகுதி கொண்டு அறியலாம்.

**'பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ**
**எய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ**
**..........................................................**
**சிறுமுத்த னைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ**
**நறுநுத லவரொடு நக்கது நன் கியைவதோ'**

—கலித்தொகை, 59 : 16-21

சிறுமகளிர் வீட்டின் முற்றத்தில் கழங்காடுகின்றனர்.

**'கூரை நல்மனைக் குறுந்தொடி மகளிர்**
**மணலாடு கழங்கு'**

மகளிர் புதுப்புனலாடியும் மகிழ்கின்றனர்:

**'உரையினி மாதரா யுண்கண் சிவப்பப்**
**புரைநீர் புனல்குடைந் தாடினோம்'**

—சிலம்பு, குன்றக்குரவை 7 : 1-2

மேலும்,

**'வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்**
**துணங்கை நாளும் வந்தன'**

என்ற பாடற்குறிப்பு, மகளிர் நிகழ்த்திய துணங்கைக் கூத்தினைக் குறிப்பிடும். அந்நாளில் ஆடவர் விளையாடாமல் மகளிர் மட்டுமே விளையாடும் விளையாட்டு மகளிர் பூப்பந்தாகும். தங்கள் காற்சிலம்பு 'கலீர் கலீர்' என ஒலிக்க, அவர்கள் பந்தாடிப் பின்னர் முன்றிலின் மணற்பரப்பிலேயிருந்து தங்கள் வளையல்கள் 'கலகல' வென்று ஒலி செய்யக் கழற்காய் விளையாட்டு ஆடுவார்கள்.

**'தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை**
**வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்**
**கைபுனை குறிந்தொடி தத்தப் பைபய**
**முத்த வார்மணற் பொற்கழங் காடும்'**

—பெரும்பாணாற்றுப்படை, 332-335

'தைந்நீராடல்' என்ற நோன்பினை மணமாகாத மகளிர் நோற்றனர். வைகறையில் நீராடி இறைவனைப் பாடித் தொழுது பரிசாக நல்ல கணவனை வேண்டுகின்றனர் :

**'வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ**
**தையில்நீ ராடிய தவந்தலைப் படுவாயோ'**

—கலித்தொகை 59: 12-13

இதனால், திருமணத்திற்கு முன்னர், மகளிர், உடலுக்கு உறுதி தந்து, உள்ளத்திற்கு உவகை ஊட்டி, வாழ்வதற்குப் பயிற்சி நல்கும் நல்ல விளையாட்டுகளையே தேர்ந்தெடுத்து விளையாடினர் என்பது போதரும்.

பருவ வயது வந்துற்ற பெண்கள் தங்கட்கேற்ற காளைகள்பால் காதல் கொண்டார்கள். அக்கால ஆடவனுக்கு வீரமே வாழ்வாக விளங்கியது. 'பொன்முடியார்' என்ற பெண்பாற் புலவர், வயது நிறைந்த இளைஞன் ஒருவனைக் குறிப்பிடுகின்ற பொழுது,

> **'ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்**
> **களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'**
>
> —புறநானூறு, 312 ; 5-6

என்று கூறியுள்ளார். மேலும், முல்லைநில மகளிர் தம்மால் விரும்பி வளர்க்கப் பெற்ற வலிய எருதுகளைப் பிடித்து அடக்கும் அஞ்சாநெஞ்சமும் ஆற்றலுமுடைய காளையரையே மணக்க விரும்பினர். இதனை,

> **'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
> **புல்லாளே ஆய மகள்'**
>
> —கலித்தொகை, 103 : 63-64

என்று, 'முல்லைக்கலி' அழகுறக் குறிக்கின்றது. இந்நாளைப் போல் அல்லாமல், அக்காலத்தே மகளிரை மணந்து கொள்ள ஆடவரே மகளிர்தம் அணிகலன்களுக்கெனப் பெரும் பொருளினைப் பரிசமாகத் தந்தார்கள் என்பதனை அறிந்து மகிழ்ந்து போற்றுகின்றோம். ஆனால், அதற்காகத் தகுதியில்லாதவன் ஒருவன் பெரும் பரிசுப் பொருளைக் கொணர்ந்து தந்தாலும் தங்கள் மகளைப் பழந்தமிழ்ப் பெருமக்கள் மணஞ்செய்து கொடுத்தார்களில்லை. இதற்குப் பின்வரும் புறநானூற்றுப் பகுதி சான்று கூறும் :

> **'முழங்குகடன் முழவின் முசிறி யன்ன**
> **நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்**
> **புரையர் அல்லோர் வரையலள் இவளெனத்**
> **தந்தையும் கொடாஅன்'**
>
> —புறநானூறு : 343 :10-13

சங்ககால மகளிர் இறை நம்பிக்கையுடையவர்கள். மணமாகாத மகளிர், முருகனை நோக்கி, 'யாம் எம் நெஞ்ச

மர்ந்த காதலரைக் கனவிற் கூடியுள்ளோம். அது பொய்யாகாமல் நனவின் கண்ணும் எம் திருமணத்தை முடித்து வைக்க வேண்டும்,' என இறைஞ்சுகின்றனர். மணமான மகளிரோ, தமக்கு நல்ல பிள்ளைகள் பிறக்க வேண்டுமென நோற்கின்றனர்; மேலும் தம் கணவர் மேற்கொண்ட செயல்கள் செம்மை பெறவும், போரில் வெற்றி வந்தெய்தவும் வரமருளவேண்டும் என்றும் திருமுருகனை ஒருமனமாக இறைஞ்சி நிற்கின்றனர். திருப்பரங்குன்றத்திலே நடை பெறும் வழிபாடு இது :

**'அருவரைச் சேரத் தொழுநர்**
**கனவிற் றொட்டது கைபிழை யாகாது**
**நனவிற் சேஎப்பநின் னளிபுனல் வையை**
**வருபுன லணிகென வரங்கொள் வோரும்**
**கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்**
**செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்**
**ஐயம ரடுகென வருச்சிப் போரும்'**

—பரிபாடல் 8 : 102-108

பத்துப்பாட்டுள் ஒன்றான 'மதுரைக்காஞ்சி' கொண்டு சிவபெருமான், மாயோன், முருகன முதலிய தெய்வங்களை மகளிர் வழிபட்ட செய்தியை அறியலாம். தாமரைப் பூவினைக் கையிலே பிடித்தாற்போலத் தாம் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளைக் கையினால் தழுவியெடுத்துக் கொண்டு, தம் கணவருடன் பூசைக்குரிய பூவினையும் நறும் புகையினையும் எடுத்துக்கொண்டு, திருக்கோயிலுக்குச் சென்று, தெய்வத்தை வழிபாடியற்றி நின்றனர்.

**'திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை**
**ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்**
**தாதணி தமேரைப்போது பிடித் தாங்குத்**
**தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்**
**காமர் கவினிய பேரிளம் பெண்டிர்**
**பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்**
**சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளியும்**

—மதுரைக்காஞ்சி, 461-467

நல்ல பண்புடைய பெண்மக்களைப் பெற வேண்டும் என்று கேட்டு இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றனர் என்பதனால் பெண்மக்கட் பேற்றின் சிறப்புப் புலனாகும். இதனை,

**'குன்றக் குறவன் கடவுட் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்'**

—ஐங்குறுநூறு **257: 1-2**

என்னும் கபிலர் வாக்கால் உணரலாம். நல்ல ஒழுக்கம் நிறைந்த பெண் வைகறையில் துயிலுணர்ந்து தன் கணவனைத் தொழுதெழுந்தாள் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவார் :

**'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'**

—திருக்குறள், **55**

'தன்னால் விரும்பப்பட்ட தலைவனையே தனக்கு வாழ்க்கைத் துணைவனாக அளிக்க வேண்டும்' என்று தன் குலமுதற் கடவுளாம் குமரனை நன்னீரும் நறுமலரும் கொண்டு இறைஞ்சுகின்றாள் மலைவாழ்மங்கையொருத்தி.

**'குன்றக் குறவன் காதன் மடமகள்**
**மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி'**

— ஐங்குறுநூறு, **259 : 1-3**

என்பது அப்பாடல்.

இத்தகைய நல்ல பண்புகள் நிறைந்த தலைவி, தலைவன் பெற்ற பேறுகளில் தலைசிறந்த பேறாவள். இது குறித்தே வள்ளுவரும்,

**'இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை?'**

—திருக்குறள்; **53**

என்று குறிப்பிட்டார். 'தூங்கலோரி' என்ற சங்க காலப் புலவரும் ஒரு பசுவினால் வரும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவையுடைய செல்வச்சிறப்பில்லாத இல்

வாழ்க்கை, அழகையுடைய இளைய தலைவி வாழ்க்கைப் பட்டுப் புக்கனளாக, இப்பொழுது விழாவையுடையதா யிற்று என்று பாடுகின்றார் :

'ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே'

—குறுந்தொகை, 295 : 4-6

அறிவாலும், பண்பாலும், வயதாலும், குடிப்பிறப்பு செல்வம் முதலியவற்றாலும் ஒத்த தலைமகனும் தலைமக ளும், நல்லூழின் வழிப்பட்டுப் பிறர் கொடுக்கவும் அடுப் பவும் இன்றித் தாமே தமியராய்க் கூடுகின்யனர். அக்கூட் டத்திற்குப் பின்னர்த் தலைமகன் பிரிந்து சென்று விடு வானோ என்று தனக்கே இயல்பாகவுடைய அச்சங் கொண்டு கலங்குகின்றாள் தலைமகள். அதுபொழுது தலைவன் அவளைப் பின் வருமாறு தெளிவிக்கின்றான் : ''என் தாயும் உன் தாயும் ஒருவருக்கொருவர் எத்தகு உற வினர்? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினராவார்? இப்பொழுது பிரிவற்றிருக்கும் நீயும் நானும் முன்பு எவ்வாறு அறிவோம்? இப்பொழுதோ வெனில், செம்மண் நிலத்திலே பெய்த மழை நீர் அம்மண் ணோடு கலந்து அதன் தன்மையை அடைதல் போல் அன் புடைய நம் நெஞ்சம் தாமாகவே ஒன்றுபட்டன'' என்று கூறுகின்றான். இவ்வழகிய கருத்தினை உள்ளடக்கிநிற்கும் அவ்வருமைப் பாடல் வருமாறு :

'யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'

—குறுந்தொகை, 40

சங்க கால மகளிர் தம் தலைவன்பால் கொண்ட காதல் தலையாய காதலாகும். தன் நெஞ்சத்தைப் பிணித்தவனிடம் தலைவி எல்லையற்ற காதல் கொண்டிருந்தனள் என்பதனை நன்றாக அறியலாம். தலைவி தலைவன்பால் கொண்ட காதல் நிலத்தினும் பெரியதாய் வானினும் உயர்ந்ததாய், ஆழ் கடலினும் ஆழமுடையத்தாய் விளங்கியது :

**'நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று!**
**நீரினும் ஆரளவு இன்றே!'**

—குறுந்தொகை : 3: 1-2

தலைவி இப்பிறவியில் இறக்க அஞ்சுகின்றாள். அஃது இறப்புக்கு அஞ்சியன்று; இறப்பின், மறுபிறப்பிற் காதலனைக் கூட இயலுமோ என்ற கவற்சியால் அஞ்சுகின்றாள் எனப் புலவர் ஒருவர் நயமுறக் கிளத்துகின்றார்.

**'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்**
**பிறப்புப்பிறி தாகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே'**

— நற்றிணை 397 : 7-9

இந்தப் பிறவி மட்டுமல்லாது எழுமையும் தொடரும் தன்மைத்து தலைவி தலைவன்பாற்கொண்ட காதல் என்பது பின் வரும் குறுந்தொகைப் பாடற்பகுதியால் விளங்குகின்றது :

**'இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே'**

—குறுந்தொகை, 49 : 3-5

இத்தகு ஆராக் காதல் கொண்ட தலைவி, தன் உள்ளம் கவர்ந்த கள்வனையே மணக்க விரும்புகின்றாள். அதற்கு ஏதேனும் இடையூறு நேர்ந்தால், அவனோடு உடன்போக்கிற்கு ஒருப்படுகின்றாள். தலைவனோடு

சென்றவுடன்தான் தாய்க்கு அவள் காதல் நெஞ்சம் புலனாகின்றது. பாலையும் உண்ணாளாகி, பந்தையும் விரும்பாளாகி, முன்னர்த் தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிய தலைவி, இப்பொழுது வேனிலால் கரிந்த மலைப் பகுதியில் எவ்வாறு எளிதென உணர்ந்து சென்றாளோ?' எனக் கலக்கத்தோடு வியக்கின்றாள் :

'பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே
எளிதென உணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வறைக் கவாஅன்
மழை முழங்கு கடுங்குர லோர்க்கும்
கழைதிரங்கு ஆரிடை அவனொடு செலவே'

— குறுந்தொகை, 396

இவ்வாறு காதலன் பின் சென்ற தலைவியைச் செவிலித் தாய் பின் தேடிச்செல்லும் பொழுது, வழியில் எதிர்ப்பட்ட முக்கோற் பகவரை—தவம் செய் அறவோரை—வினவுகின்றாள். அதற்கு மறுமொழியாக, அச்சான்றோர், ''மலையிடைப் பிறந்த சந்தனமும், கடலிடைப் பிறந்த முத்தும், யாழிடைப் பிறந்த இசையும் முறையே பூசுவோருக்கும் அணிவோருக்கும், கேட்போருக்குமே இன்பம் பயக்குமே அல்லாது, தாம் பிறந்தவிடத்திற்குப் பயன் தரா. அதேபோல் உன் மகளும் உனக்குப் பயனின்றிச் சிறந்த தலைவனைத் தேர்ந்து தெளிந்து அவன் பின்னே சென்றாள்; அதுவே அவட்குரிய சிறப்பாகும்; இம்மைக்கேற்ற அறமும் அஃதே'' என்று அறிவுரை புகன்றனர். இவ்வழகிய பகுதி 'கற்றார் ஏத்தும் கலித்தொகை'யில் (9 :22-24) வருகின்றது:

'இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலைப் பிரியா வாறுமற் றதுவே'

இவ்வாறு 'இருதலைப்புள்ளின் ஒருயிர் ஒக்கும்மே' என்றபடி, வாழ்வில் இணைந்து இருவரும் அன்பும் அறனும் உடைத்தாய இல்வாழ்க்கையினைப் பண்பும் பயனுமான வழியிலே நடாத்துகின்றனர். கொண்ட கணவன் குறிப்பறிந்து நடப்பவளே குலமகள் ஆவள். உலக மக்கள் நீரின்றி இயங்கவியலாததுபோலக் கொண்ட கணவனின்றிக் குலமகள் இயங்க ஒல்லாதவளாகிறாள். இதனை,

**'நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நந்தயந் தருளி'**

என்று 'நற்றிணை' கூறும். மேலும் 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்ற சிலப்பதிகாரத் தொடரும்,

**'வினையே ஆடவர்க் குயிரே; வாணுதல்**
**மனையுறை மகளிர்க் காடவர் உயிர்'**

என்ற குறுந்தொகைத் தொடரும் (135 : 1-2) இதனை நன்கு விளக்குவனவாகும்.

புறவுலகில் செயலாற்றுபவன் தலைவன். அவன் வாழ்வு அல்லலும் நெருக்கடியும் சூழ்ந்தது. 'செய்வினை முடித்த செம்மல் உள்ளத்தோடு' இல்லம் திரும்பும் கணவனுக்கு அறுசுவை உண்டி தந்து மகிழ்விப்பது மனைவியின் முதற் கடமையாகும் என்பதனைச் சங்ககால மகளிர் நன்கு உணர்ந்திருந்தனர். தலைவியொருத்தி தன் காதற் கொழுநனுக்கு அட்டில் சமைத்து உணவூட்டிய செய்தியினைக் குறுந்தொகைப் பாட்டொன்று (166) நயமுறக் குறிப்பிடுகின்றது :

**'முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**

**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்,**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே'**

''முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவையாமல் உடுத்துக்கொண்டு, குவளை மலர் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணப்பத் தானே துழாவிச் சமைத்த இனிய புளிக்குழம்பைத் தன் தலைவன் இனிதென்று உண்பதனால் தலைவியின் முகமானது நுண்ணி தாய் மகிழ்ந்தது.''

இப்பகுதி,

**'ஏளது சுவைப்பினும் நீகை தொட்டது**
**வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென**
**அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்'**

என்ற தொல்காப்பியப் பகுதிக்கு (தொல். பொருளியல்-5) விளக்கம் போல அமைந்துள்ளது.

தனது செல்வமனையில் செல்வக்குடியிலே பிறந்த தன்னைப் பெற்ற தாய் ஒரு புறம் வீற்றிருப்ப, பிறிதொரு புறம் வளர்த்த தாய் தேன் கலந்த பாற்சோற்றினைப் பொற்கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, சிறுகோலோச்சி அச்சமூட்டவும், செல்வக் குடியிலே பிறந்த குழந்தை யாதலால் பசியற்ற காரணத்தால் உண்ண மறுத்துக் காற் சிலம்பொலிப்பத் தோட்டப் பந்தலில் ஓடி ஓடி விளை யாடும் தலைவி, இன்று புகுந்த வீட்டிலே வறுமையில் வாடிய போதும், தந்தை கொழுவிய சோற்றினை அனுப்பி வைக்கவும், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துத் திருப்பி யனுப்பிவிடுகிறாள் என்ற செய்தியினை நற்றிணைப்

பாடலொன்றால் அறியும் பொழுது, அக்கால மகளிரின் பண்பு கண்டு பாராட்டவும் செயலிழந்து நிற்கிறோம் :

'பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரீஇமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறள் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையனே'

—நற்றிணை. 110

இதுபோன்ற பிறிதொரு தலைவி, தன் தாய் வீட்டுத் தோட்டத்திலுள்ள தேன்கலந்த பாலைக்காட்டினும், தலைவன் நாட்டிலுள்ள தழையையுடைய கிணற்றின் அடியிலுள்ள மான் முதலிய விலங்குகள் உண்டு எஞ்சிய கலங்கல் நீரே இனியது என்று துணிகின்றாள் :

'அன்னாய் வாழிவேண் டன்னை நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
உவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே'

—ஐங்குறுநூறு, 203

தொல்காப்பியனார் மகளிர்க்கு இன்றியமையாது இருக்க வேண்டிய பண்புகளாகப் பின்வருவனவற்றைக் கற்பியலில் குறிப்பிடுகின்றார்:

**'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'**

—தொல், கற்பியல், 11

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,

**'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்?'**

—திருக்குறள் : 54

என்றார். கொண்ட கொழுநன் கற்பித்த நெறியிலே நிற்றல் கற்பெனப்படும். எனவேதான் தொல்லாசிரியராம் தொல்காப்பியனார்.

**'உயிரினும் சிறந்ததன்று நாணே; நாணினும்**
**செபிர்தீர் காட்சிக் கற்புச் சிறத்தன்று'**

—தொல், களவியல் : 22

என்று குறிப்பிட்டுள்ளார். 'கடவுள் சான்ற கற்பு,' 'வட மீன் புரையுங் கற்பு.' 'வறனோடும் வையத்து வான் தரும் கற்பு' என்னும் சங்க இலக்கியங்கள் கற்பின் மேம்பாடு பற்றிக் கூறுகின்றன. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள், கவுந்தியடிகள் வாயிலாகக் கண்ணகியைப் பாராட்டும் பொழுது, 'தன் துன்பத்திற்காக வருந்தாமல் கணவன் துயர் குறித்தே வருந்தினாள்' என்றும், 'கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் கண்ணகி போலப் பிறரைக் காண வியலாது,' என்றும் குறிப்பிட்டுள்ளார் :

**'என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்**
**வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்·**
**கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு**
**நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்**
**தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி**

**இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்**
**கற்புக் கடம் பூண்ட இத்தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்'**

—சிலம்பு, அடைக்கலக் காதை : 137-144

பொறையுடைமை என்ற பண்பு பெண்களுக்கு மிகவும் இன்றியமையாது வேண்டப்படும். இதனை,

**'அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்**
**பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை'**

என்று 'பெருங்கதை' குறிப்பிடுகின்றது. ''பூமியினும் பொறையுடையாள் எங்கள் தாய்'' என்று பாரதியாரும் பாடினார் தாய் தன் குழந்தையை அடித்தால், அது, 'அம்மா, அம்மா என்று சொல்லியே அழுகின்றது. அது போன்றே தலைவியும், தலைவன் பல கொடுமை செய்தாலும், அவனை விட்டுப்பிரிய மறுக்கிறாள் :

**'தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்டு**
**அன்னாய் என்னும் குழவி போல**
**இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்**
**நின்வரைப் பினளென் தோழி**
**தன்னுறு விழுமங் களைஞரோ விலளே!'**

—குறுந்தொகை, 377, 4-8

தலைவன் பரத்தை வீடுநாடிச் சென்ற போதும், மனைவி அத்துன்பத்தைப் பொறுத்திருந்தாள். இதனைக் கற்பிற் சிறந்த கண்ணகியின் வாழ்வில் காண்கிறோமல்லவா?

**'சேர்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்**
**காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா**
**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
**இகழினுங் கேள்வரை யேத்தி யிறைஞ்சுவார்'**

—பரிபாடல், 20 : 86-89

என்ற பரிபாடற் பகுதிக்குப் பின் வருமாறு பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். ''பரத்தைபாற் சென்று தங்கு பவனை அங்ஙனம் செல்லாமற் காத்தலும், சென்றா னென்று நீக்கி ஒழுகுதலும் மனைவியாற் கூடுமோ? கூடா. சால்பு மிக்க கற்புடை மங்கையர் தம்மைக் கணவர் இகழ்ந்தாலும் தாம் அவரைப் போற்றுவர்'' என்று குறிப் பிட்டுள்ளார். இப்பகுதி கொண்டு சங்கால மகளிரின் பொறுமைப் பண்பினையும், நற்குண மேம்பாட்டி னையும் நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

விருந்து போற்றும் வழக்கம் சங்ககால மகளிரிடம் சிறக்கவிருந்தது எனபதற்கும் பல சான்றுகளைக் காட்ட லாம் 'விருந்தே புதுமை' எனத் தனி அதிகாரம் ஒன்ற னையே அமைத்து, வள்ளுவர் வழி வழி வரும் விருந்தோம் பற் பண்பிற்குச் சிறப்பு வழங்கியுள்ளார். இச்சிறப்பினை,

**'மறப்பருங் கேண்மையொ டறப்பரி சாரமும்**
**விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்'**

—சிலம்பு, மனையறம்படுத்த காதை : 85-86

எனச் சிலப்பதிகாரம் கூறும்.

**'அறவோர்க்கு களித்தலும் அந்தண ரோம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'**

—சிலம்பு, கொலைக்களக் காதை : 71-73

என்று கண்ணகி வருந்துவதினின்றும்,

**'அருந்து மெல்லட காரிட**
**வருந்துமென் றழுங்கும்**
**விருந்து கண்டபோ தென்னுறு**
**மோவென்று விம்மும்;**
**மருந்து முண்டுகொல் யான்கொண்ட**
**நோய்க்கென்று மயங்கும்**
**இருந்த மாநிலஞ் செல்லரித்**
**திடவுமாண் டெழாதாள்'**

—கம்ப, சுந்தர, காட்சிப் படலம் : 15

என்று சீதை வருந்துவதனின்றும் விருந்தோம்பலின் சிறப்புத் தெரியவருகின்றது. இத்தகு சிறப்புமிகுந்த விருந்தோம்பலினைச் செறிந்த நள்ளிரவிலும் விரும்பி மேற்கொள்ளும் நங்கையை,

**'அல்லில் ஆபினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்'**

என்று நற்றிணை (9:12) பாராட்டுகின்றது.

**'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை'**

—திருக்குறள்,247

**'இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'**

—குறுந்தொகை:282:2

முதலிய தொடர்கள் பொருளின் இன்றியமையாத தன்மையினைப் புலப்படுத்தும், பொருள் தேடிவரத் தலைவன் செல்லும்பொழுது தலைவி தனித்துத் துயருறுகின்றாள். அவன் 'துன்பத்திற்கு துணையாவதே தனக்கு இன்பந் தருவது என்கிறாள்:

**'துன்பந் துணையாக நாடின் அதுவல்லது**
**இன்பமும் உண்டோ எமக்கு?'**

—கலித்தொகை : 6: 10-11

மேலும்,

**'ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினபர் வாழ்க்கையே வாழ்க்கை!'**

—கலித்தொகை,18 : 10-11

அன்றோ? எனவே தலைவன் செல்ல எண்ணியபோது, தோழி,

**'மற்றிவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ**
**முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே!'**

—கலித்தொகை,7 : 19-21

என்று தெளிவுறக் கூறியும், தலைமகள்,

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'

—திருக்குறள்; 1151

என்று கூறியும், தலைவன் தன் பயணத்தை நிறுத்தவில்லை. எனவே, தலைவன் பிரிந்து சென்ற பொழுது தலைவி பெரிதும் கலங்கி,

'வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்'

—திருக்குறள், 1261

என்று இரங்கத்தகு நிலையில் நெஞ்சம் நடுங்குகின்றாள்.

கணவனைப் பிரிந்த மகளிர் கூந்தலுக்கு எண்ணெய் இட்டு வாருதல் இல்லை, 'நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்' என்று புறநானூறு கூறும், கோவலனைப் பிரிந்த கண்ணகி கால்களில் சிலம்பணியாமலும், இடையில் மேகலை அணியாமலும், செயற்கை அணிகலன்களை அணியாமலும், காதில் தோடில்லாமலும், கண்களில் மையில்லாமலும், நெற்றியில் திலகமில்லாமலும், முகத்தில் புன்முறுவல் இல்லாமலும், கூந்தலில் எண்ணெய் இல்லாமலும், 'கையற்று வருந்தினாள்' எனச் சிலப்பதிகாரம் கூறும்:

'அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
..............................................
..............................................
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி'

—சிலம்பு, அந்திமாலைச் சிறப்புச் செய் காதை: 47-57

கணவரைப் பிரிந்த மகளிர், மாலைக்காலத்தில் தம்மையே புணையாக, நெய்யை வார்த்து விளக்கு ஏற்றிக் கணவர் வரும் வரவு நோக்கி அங்காந்துள்ளனர் :

'கயலே ருண்கண் கனங்குழை மகளிர்
கைபுணை யாக நெய்பெய்து மாட்டிய
அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
சுடர்துய ரெடுப்பும் புன்கண் மாலை
மெய்ம்மலி யுவகையின் எழுதரும்
கண்கலிழ் இகுபனி யரக்கு வோரே'

—குறுந்தொகை; 398 : 3-8

'மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம் பாகிய வென்வேல் நெடுந்தகை'

—புறநானூறு, 315 : 1-2

என்பதற்கிணங்கப் போர்மேற் சென்ற தலைவன், போரில் இறந்துபட்டால் மனைவி உயிர் வாழ ஒருப்படாள். கைம்மை நோன்பு நோற்று, அல்லியரிசியாலாகிய எளிய உணவை உண்டு, பாயின்றி வெறுந்தரையில் படுத்து, குளிர்நீரில் குளித்து வாழும் வாழ்வினை மகளிர் விரும்பினாரில்லை. இதனைப் பூதப்பாண்டியன் பெருந்தேவி கூற்றால் அறியலாம்:

'அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பாற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ'

—புறநானூறு, 246 : 4-10

என்று கூறுவதோடு, காதலனின் எரிதீ நள்ளிரும் பொய்கை யாகக் குளிர்ந்து தோன்றும் என்றும் கூறியுள்ளார் :

**'பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற**
**வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**
**நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே'**

—புறநானூறு 246 : 13-15

கணவனை இழந்த மகளிர் ஆதரவற்ற நிலையில் பிறர் உதவியினை எதிர்பாராது, பருத்திப் பஞ்சினை நூலாக நூற்றுத் தம் குடும்பத்தினை ஓம்பி வந்தனர். இவர்களைப் 'பருத்திப் பெண்டிர்' என்று சங்க இலக்கியங்கள் குறிப் பிடும்.

ஈன்று புறந்தருதல் தாயின் கடமையாகும். மேலும் அவர்கள் வீரத்தில் மேற்பட்டவர்களாக எதிர்காலத்தில் விளங்கத் தாயே துணை நிற்றல் வேண்டும். மறக்குடி மகளிர் தம் இயல்பும் வீரமிகுதியும் கூறும் துறை, 'மூதில் முல்லை' என்பதாகும். வீரக்குடியிற் பிறந்த மகளிர் 'மூதில் மகளிர்' எனப் போற்றப்பெற்றனர். மறக்குடியிற் பிறந்த பெண்ணொருத்தி, முதல்நாட்போரில் தன் தமை யனும், மறுநாட்போரில் தன் கணவனும் மடிந்த நிலை யில், தன் குடிக்கு ஒருவனாயுள்ள இளஞ்சிறுவனை வேல் கைக்கொடுத்துச் 'செருமுகம் நோக்கிச் செல்க' என அனுப் பினாள் என, 'ஒக்கூர் மாசாத்தியார்' என்ற பெண்பாற் புலவர் கூறுகிறார்.

**'கெடுக சிந்தை! கடிதிவள் துணிவே!**
**மூதின் மகளி ராதல் தகுமே'**
**மேனாள் உற்ற செருவிற் கிவள் தன்னை**
**யானை யெறிந்து களத்தொழிந் தனனே!**
**நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்**
**பெருநிரை விலக்கி யாண்டுப்பட்டனனே!**

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுக நோக்கிச் செல்கென விடுமே!'**

—புறநானூறு : 219

இவ்வாறு சங்ககால மகளிர் காதலேயன்றி வீரத்தினும் மேம்பட்டு விளங்கினர். நல்ல மனைவியைப் பெற்ற கணவனையே புலவர் போற்றினர். ஓர் ஆடவனைப் புலவர் போற்றும்போது, அவன் மனைவியின் சிறப்பு நோக்கியே பாராட்டினார். திருமுருகாற்றுப் படையில் 'நக்கீரர்' திருமுருகனை 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' என்றே பாராட்டியுள்ளார் 'இந்த நல்ல மங்கையினுடைய கணவன் பாராட்டியுள்ளார் 'இந்த நல்ல மங்கையினுடைய கணவன் யான்' என்று கூறிக் கொள்வதில் அக்கால ஆடவன் பெருமை கொண்டனன்.

**'நல்லோள் கணவன் இவனெனப்**
**பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே!'**

—குறுந்தொகை 14 : 5-6

எனவே, மனைத்தக்க மாண்புடையளாகவும், தற் கொண்டான் வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்பவளாகவும் வாழ்த்கைத்துணை ஒருவனுக்கு வாய்க்குமேயானால், அவன் நிறைவாழ்வு வாழலாம். இதனாலன்றோ வள்ளுவர் பெருமானும்,

**'புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை'**

—திருக்குறள் 59

என்று கூறிப்போந்தார். எனவே, மனைமாட்சி மகளிரிடத்துத் துலங்கவேண்டும் என்பதனை, அவரே.

> 'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
> எனைமாட்சித் தாயினும் இல்'
>
> —திருக்குறள் 52

என்றார்.

வள்ளுவர் குறிப்பிடும் வாழ்க்கைத் துணைநலம் உடையவர்களாகவே சங்க கால மகளிர் பழுதறத் துலக்க முறுகின்றனர். பெண்ணின் பெருமை பீடுற விளங்கிய பொற்காலம் சங்க காலமாகும்.

> 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்'
>
> —திருக்குறள் 50

என்ற நிறைநிலை சங்ககால மகளிர்தம் வாழ்வில் புலனாகின்றது. எனவேதான் வள்ளுவரும், மகளிரை 'வாழ்க்கைத் துணை' என வகையுறப் பாராட்டியுள்ளார். பெண்ணைச் சுற்றியே உலகம் இயங்குகின்றது. எனவே, அத்தகு மெல்லியலார் பண்புகளின் உறைவிடமாயிருக்க வேண்டுவது பெரிதும் இன்றியமையாததாகும். இம் முறையிற் பார்ப்பின், சங்க கால மகளிர் அறத்தின் வழி இல்வாழ்க்கை ஆற்றிப்பெற்றோன் பெட்கும் பிணையாய், ஈன்று புறந்தரும் தாயாய் விளங்கி, வீடும் நாடும் விளக்கமுறத் தொண்டாற்றினர் என்பது அங்கை நெல்லிக் கனியெனப் புலனாகும்.

# 4. முல்லைப்பாட்டின் பெயர்ப்பொருத்தம்

இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் உற்றிருந்த நிலையினைத் தெள்ளத்தெளிய விளக்குவன சங்க இலக்கியங்கள். அவற்றுள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் கொண்ட உயர்ந்த நோக்கங்களையும் விழுமிய எண்ணங்களையும் விளக்க வல்லனவாய்க் காணப்படுகின்றன. சங்க இலக் கியங்கள் தமிழர்தம் அகப்புற வாழ்வினைத் திறம்படச் சித்திரிக்கின்றன. பண்டு தமிழ் மக்களின் இரு கண்களென அகவாழ்வும் புறவாழ்வும் துலங்கின. தனிப்பட்ட மனித வீட்டு வாழ்வினை அகப்பொருள் இலக்கியங்கள் உணர்த்த நாட்டு வாழ்வினைப் புறப்பொருள் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. ஆயினும், அகப்பொருள் இலக்கியங் களில் மட்டும் ஒரு நுண்மையான வரையறை, புலவர் களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுவே தலைவன் தலைவியர் பெயரை அகப்பொருள் இலக்கியங்களில் சுட்டிச் சொல்லப் படாமையாகும். இதனைத் தொல் காப்பியனார்,

> **'மக்கள் நுதலிய அகனைந் திணையும்**
> **சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்!'**
>
> —தொல், அகத்திணை : 54

எனக் குறிக்கிறார். இத்தகைய செம்மை சான்ற வரையறை உணர்ந்து போற்றற்குரியதாகும்.

பத்துப்பாட்டு என்ற பெயரே, அத்தொகை நூலில் உள்ளன பத்துப்பாட்டுகள் என்பதை நுவலுகின்றது. அவற்றுள் அகப்பொருள் நுதலியன, 'முல்லைப்பாட்டு',

'குறிஞ்சிப்பாட்டு' 'பட்டினப்பாலை' எனும் மூன்றாகும். 'மதுரைக் காஞ்சி'யும் 'நெடுநல்வாடை'யும் புறப்பொருள் பற்றியன. மற்ற ஐந்து பாட்டுகளும் புறப்பொருளைச் சார்ந்த ஆற்றுப்படை வகையினைச் சார்ந்தன. பத்துப் பாட்டு முழுவதிலுமே, உயர்ந்த, செறிந்த—அளவான கற்பனையினைக் காண்கிறோம், அக்காலத் தமிழர் தம் பீடு நிறைந்த பெருவாழ்வினைக் கண்டு இன்புறு கின்றோம். இது குறித்தே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்.

'பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில்
கற்பனையே'

என்று புகழ்ந்து பாராட்டினார்.

பண்டைக் தமிழ்க் கவிஞர்தம் செய்யுளிடத்துப் பொருந்திய பொருளை ஆராயுங்கால், 'முதற்பொருள்' எனவும், 'கருப்பொருள்' எனவும், 'உரிப்பொருள்' எனவும் கூறப்பட்ட மூன்று பொருள்கள் காணப்பெறும். அவை சொல்லப் பெறுங் காலத்தில் முறைமையாற் சிறந் தனவாம். இதனைத் தொல்காப்பியனார்,

'முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.

—தொல். அகத்திணையியல் : 3

என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் முதற்பொருள் எனப்படுவது, நிலமும் காலமுமாகிய இரண்டினது இயற்கை என்பர்.

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'

—தொல். அகத்திணையியல் : 4

நிலத்தினை 'நானிலம்' எனக் குறிப்பிடும் வழக்குப் பண்டைக் காலத்திலேயே உண்டு. எனவே, தொல்காப்பியனார்,

**'மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.'**

—தொல். அகத்திணையியல் : 5

என்று, காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்திற்குத் தெய்வமாகத் திருமாலினையும், மலையும் மலையைச் சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்திற்குத் தெய்வமாக முருகனையும், வயலும் வயலைச் சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்திற்குத் தெய்வமாக இந்திரனையும், மணல் பொருந்திய வளம் குறைந்த நெய்தல் நிலத்திற்குத் தெய்வமாக வருணனையும், பழந்தமிழ் மக்கள் கொண்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இனி, முல்லைப்பாட்டின் பெயர்ப்பொருத்தத்தினை ஆராய்வோம்; சங்க இலக்கியங்களில் முதல், கரு, உரிப் பொருள்கள் சிறப்பாகப் போற்றப்பட்டன. முதற் பொருள் எனப்படுவது. நிலமும் பொழுதுமாகும், பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். முல்லைக்குரிய நிலம் காடும், காட்டைச் சார்ந்த இடமுமாகும். கார் காலமும் மாலைப் பொழுதும் முல்லைத் திணைக்குரிய பொழுதுகளாகும். இதனைத் தொல்காப்பியனார், 'காரும் மாலையும் முல்லை' என்பர். பிற்காலத்தெழுந்த நம்பியகப் பொருள் 'மல்குகார் மாலை முல்லைக் குரிய' என்று குறிப்பிடுகின்றது. முல்லைத்திணைக்குரிய கருப்பொருள்கள் தெய்வம் முதலான பலவாகும். முல்லைக்

குத் தெய்வம் 'மாயோன்' என்பது 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற தொல்காப்பிய நூற்பாவினால் பெறப்படுகின்றது.

தொல்காப்பியனார் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் என்பனவும் பிறவும் கருப் பொருள்கள் எனக் குறிப்பர்;

**'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப'**

—தொல். அகத்திணையியல் : 30

உரிப்பொருளைப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியனார், குறிஞ்சித்திணைக்குக் கூடலையும், பாலைத்திணைக் குப் பிரிதலையும், முல்லைத்திணைக்கு இருத்தலையும், நெய்தல் திணைக்கு இரங்கலையும், மருதத்திணைக்கு ஊடலையும் திணை ஒழுக்கங்களாய்க் கூறுவர் :

**'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'**

—தொல். அகத்திணையியல் : 1

பத்துப்பாட்டிற்கு உரையெழுதிய உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர், "முல்லைக்கு உணா வரகுஞ் சாமையும் முதிரையும்; மா உழையும் புல்வாயும் முயலும்; மரம் கொன்றையுங் குருந்தும்; புள், கானக் கோழியுஞ் சிவலும்; பறை, ஏறுகோட்பாறை; செய்தி, நிரை மேய்த் தலும் வரகு முதலியன களை கட்டலும் கடாவிடுதலும்; யாழ், முல்லை யாழ்; பிறவு மென்றதனால் பூ முல்லையும் பிடவுந் தளவுந் தோன்றியும், நீர் கான்யாறு, ஊர், பாடி

யுஞ் சேரியும் பள்ளியும்'' என்பர். முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள், இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும்.

முதற்கண் இம் முல்லைப்பாட்டைப் பற்றியும் அதன் பெயர்ப்பொருத்தத்தினைப் பற்றியும் நச்சினார்க்கினியர் பின்வருமாறு குறிக்கின்றார்: ''இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர் கூறினார். முல்லை சான்ற கற்புப் பொருந்தியதனால், 'இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிரு' வென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாமென்று கருதி, இருத்தலென்னும் பொருள் முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையின், கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள்கூறலே அவர் கருத்தாயிற்று.''

முல்லை நிலத்திலே பூக்கும் மலர் முல்லைப் பூவாகும். அந்நிலத்தில் வாழ் மகளிர் தம் கற்பு மிகுதி தோன்ற முல்லைப் பூச்சூடுதல் மரபு. முல்லை என்ற சொல்லுக்கே 'கற்பு' என்ற பொருளும் உண்டு. இதனை 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்' என்று சிறுபாணாற்றுப் படையும்,

**'முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியள் குறுமகள் உறைவின் ஊரே'**

—அகநானூறு 274 : 13-14, நற்றிணை : 241 : 10-11

என்று அகநானூறும் நற்றிணையும் குறிப்பிடுகின்றன. சிறுபாணாற்றுப்படையில் வரும் 'முல்லை சான்ற முல்லையம் புறவின்' என்ற தொடருக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'இவை காலமுணர்த்தி இங்ஙனம் நிகழ்த்தா நிற்கவும், கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்து ஆற்றியிருந்த தன்மையமைந்த முல்லைக்கொடி படர்ந்த அழகினையுடைய காட்டிடத்து'' எனப் பொருள் எழுதினர்.

இனி, முல்லைத்திணைக்கு உரியனவான முதல், கரு, உரிப்பொருள்கள் முல்லைப்பாட்டில் அமைந்து கிடக்கும் பான்மையினைக் காண்பதற்குமுன், முல்லைப்பாட்டின் அமைப்பினைச் சுருங்கக் காண்போம்.

பாட்டின் தொடக்கத்தில் கார்காலத்தின் வரவும் அது கண்டு தலைவனைப் பிரிந்த தலைவி, பெருமுது பெண்டிர் தேற்றவும் தேற மாட்டாதவளாய் வருந்தி நிற்கும் தோற்றமும், பின்னர் பாடி வீட்டில் போர் மேற் சென்ற தலைவனின் இருப்பும், ஆண்டு நிகழும் செயல் களும் கூறப் பெற்றுள்ளன. இறுதியில் தலைவன் தான் மேற்கொண்ட வினையில் வெற்றி பெற்றுத் திரும்பி வரும் தேரோசை, பிரிவுத்துயரால் நலிந்து கிடந்த தலைவியின் செவி குளிர ஆரவாரித்தலும், கார் கால வருணனையும் முல்லை நிலத்தின் இயல்பும் அழகுறக் கூறப்பெற்றுள்ளன:

**'நறுந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கைந்
நீர்செல நிமிர்த்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''**

—முல்லைப்பாட்டு 1-6

என்று இவ்வாறு முல்லைப்பாட்டு தொடங்குகிறது. இப் பகுதியில் முல்லைக்குரிய தெய்வமான திருமாலும், பெரும் பொழுதான கார்காலமும், சிறு பொழுதான மாலைக் காலமும் அழகுறப் புனையப்பட்டுள்ளன.

அடுத்து, தலைவனைப் பிரிந்து துயருற்று ஆற்ற மாட்டாத தலைவியினைப் பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு வந்து, சொல்லி வற்புறுத்தி ஆற்றுவிக்கின்றனர்

கட்டுக்காவல் அமைந்த ஊர்க்குப் புறத்தேயுள்ள மாயோன் கோயிலுக்குச் சென்று, தாங்கள் நாழியிலே இட்டுக் கொணர்ந்த நெல்லையும், முல்லை நிலத்தில் மலர்ந்த முல்லைப்பூவினையும், அப்பொழுதலர்ந்த அலரிப்பூ வினையும் தூவி வழிபட்டு நிற்கின்றனர்.

**'அருங்கடி மூதூர் மருங்கிற் போகி**
**யாழிசை இனவண் டார்ப்ப நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**
**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப.''**

—முல்லைப்பாட்டு 7-11

அதுபொழுது ஒரு நற்சொல் கேட்கின்றனர். முல்லை நிலத்தில் வாழ்பவளான இடைக்குலப் பெண் ஒருத்தி, பாலுண்ணாமை காரணமாகக் கலங்கித் துன்புறுகின்ற இளைய பசுங்கன்றை நோக்கி, ''உங்கள் தாயர், இடையர்கள் பின்னேயிருந்து செலுத்த இப்பொழுதே வந்து விடுவர்,'' என்கிறாள்;

**'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்**
**நடுங்குசுவல் அசைத்த கையள்; கைய**
**கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர**
**இன்னே வருகுவர் தாயர்' என்போள்**
**நன்னர் நன்மொழி கேட்டனம்...''**

—முல்லைப் பாட்டு 12-17

இவ்வாறு தலைவனும் தான் மேற்கொண்ட வினை முடிந்து, தெவ்வரையடக்கி, அவரைத் திறை செலுத்தப் பணித்து, விரைந்து வருவன் எனத் தலைவியைப் பலவாறு ஏதுக்கள் கூறி வற்புறுத்தவும், அவள் பூப்போன்ற மையுண்ட கண்களிலிருந்து முத்துப்போலும் கண்ணீர்த் துளிகள் துளிர்த்து நிற்கின்றன.

**'காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ் சிறந்து**
**பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப'**

என்பது முல்லைப் பாட்டு (22-23).

தலைவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை இல்லாமல் வருந்துவதே நெய்தலின் பாற்படும். ஆனால், இங்குத் தலைவியின் நம்பிக்கை அற்றுப் போய் விட வில்லை. கார்காலம் தொடங்கியும் 'கார் காலத்தில் வரு கிறேன்' என்று கூறிப் பிரிந்து சென்ற தன் இன்னுயிர்த் தலைவன் வரவில்லையே என்றுதான் பிரிவுத் துயரால் கலக்கமுறுகின்றாள். முல்லைப்பாட்டின் இறுதிப் பகுதிகள் அவள் கொண்ட தனிமைத் துயரத்தினையும், அதுபொழுது தலைவன் வளையும் வயிரும் ஆர்ப்ப வெற்றியோடு திரும்பி வரும் தேரின் ஓசையும், குதிரைகளின் குளம்போசையும், அவள் செவிகளில் ஆரவாரித்தன என்பதையும் புலப் படுத்துகின்றன :

**'நீடுநினைந் தேற்றியும் ஓடுவளை திருத்தியும்**
**மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்**
**ஏவுறு மஞ்ஞையின் நடுங்கிஇழை நெகிழ்ந்து**
**......................**
**கிடந்தோள்,**
**அஞ்செவி நிறைய ஆலின............**
**துனைபரி துரக்கும் செலவினர்**
**வினைவிலங்கு நெடுந்தேர் பூண்ட மாவே......'**

—முல்லைப் பாட்டு 82-84, 88-89, 102-103

பெருமுது பெண்டிர் கூறிய தேறுதல் மொழிகளாலும் 'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை' என்றபடி கணவன் கூறியாங்கு அவன் வருமளவு ஆற்றி இல்லறக்

கடமைகளை ஓம்பவேண்டும் என்பதனாலும், தலைவி, தன் கையினின்றும் கழன்றோடுகின்ற வளையல்களை மீண்டும் செறித்து, மயக்கம் கொண்டும், நெடுமூச் செறிந்தும், அம்புபட்ட மான் போல் வருந்தியும், அணி கலன்கள் நெகிழ்ந்தும் காணப்படுகின்றாள். இம்மட் டோடு இப்பாட்டு நின்றுவிட்டால் முல்லைத்திணை முற்றுப் பெற்றதாகாது. அதனால் வருந்திக் கிடக்கும் அவள் செவிகள் குளிர, வினை மேற்கொண்ட தலைவன் திரும்பி வரும் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகளின் குளம் போசை ஆரவாரித்தன என்று கூறிப் புலவர் பாடலை முடிக்கின்றார். அவ்வாறு புலவர் தலைவன் வெற்றியுடன் விரைந்து வருவதனைக் குறிப்பிடும் பொழுது, முல்லை நிலக் கருப்பொருளைச் செவ்விதின் அமைத்தும் கார் காலத்தின் வரவைப் புலப்படுத்தியும் அமைக்கிறார் :

**'செறியிலைக் காயா அஞ்சனம் மலர**
**முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்**
**கோடல் குவிமுகை அங்கை அவிழத்**
**தோடார் தோன்றி குருதி பூப்பக்**
**கானம் நந்திய செந்நிலப் பெருவழி**
**வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்**
**திரிமருப்பு இரலையொடு மடமான் உகள**
**எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்**
**முதிர்காய் வள்ளியங் காடுபிறக்கு ஒழிய'**

— முல்லைப்பாட்டு 93-101

என்ற இவ்வொன்பது அடிகளில் முல்லை நிலக் கருப் பொருள்கள் பல இனிய பெற்றியுடன் அழகுறத் தீட்டப் பெற்றுள்ளன. காயாஞ்செடிகள் நீல மலரைப் பூத்திருக் கின்றன; இளந்தளிர்களைக் கொண்ட கொன்றை பொன் போல மிளிர்கின்றது, காந்தளம் பூக்கள் உள்ளங்கை போல் மலர்ந்திருக்கின்றன. தோன்றிப் பூக்கள் குருதி

போலும் பூக்களைப் பூத்துள்ளன. பெய்த மழையால் பொலிவுற்ற வரகங் கொல்லையில் கலைமானுடன் பிணை மான் துள்ளித் திரிகின்றது. வள்ளியங்காட்டினைப் பின்னே போக விட்டுத் தலைவன் விரைந்து வருகிறான்.

இறுதியாக, ''வஞ்சி தானே முல்லையது புறனே'' என்ற தொல்காப்பிய நூற்பாப்படி, முல்லை என்னும் அகத்திணைக்கு இயைந்த புறவொழுக்கமான 'வஞ்சி,' இம்முல்லைப் பாட்டின் இடையில் அமைவுறப் பொருந்தி வருகிறது. தலைவி தலைவனைப் பிரிந்து காட்டின் நடுவே அமைந்துள்ள தன் மனைக்கண் இருப்பதுபோலத் தலைவனும் தலைவியைப் பிரிந்து பகைவர் நாட்டிற்கு அரணான காட்டின்கண் அமைந்த பாடிவீட்டில் இருப்பான். ஆதலால், முல்லையும் வஞ்சியும் தம்முள் இயைந்து காணப்படுகின்றன. தலைவியின் இருப்பினையும், பிரிவுத் துயரினையும் திறம்படக் கூறியவுடன் தலைவன் தங்கியிருக்கும் பாசறையின் அமைப்பினையும், ஆண்டு நிகழும் செயல்களையும் ஆசிரியர் பொருத்தமுற விளக்குகின்றார்.

இம்முறையில் சங்க காலத்துப் புலமை நல்லிசையாரான காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நம்பூதனார் தாம் இயற்றிய முல்லைப்பாட்டிலே முல்லைத்திணைக்கு இயைந்த முதல், கரு, உரிப்பொருள்களையும், அதற்கு இயைந்த புறவொழுக்கமான வஞ்சித்திணையினையும் பொருளும் பொருத்தமும் சிறக்க அமைத்துள்ளார்.

# 5 வள்ளுவர் வகுக்கும் இன்பம்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடினார் அமரகவி பாரதியார். தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய வள்ளுவர் தந்த தமிழ்மறை உலகப் பொதுமறையாய் மிளிர்கிறது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினாலும் வீட்டுப்பேற்றை உய்த்துணர வைத்த பெருமை அவருக்கே உரியது. வள்ளுவர் பெருமான் வதிங்கிய முப்பாலும் ஒவ்வொரு வகையில் தனித்தனி கீர்த்திமிக்கனவாயிருக்கின்றன. 'அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகுபடுத்தாமல் விட்டதில்லை' என்ற மேனாட்டு அறிஞரொருவர் கருத்துக்கு ஒள்ளிய உருவாக விளங்குகிறார் வள்ளுவர். பேரின்பப் பெருவாழ்வை அடைந்து உலகம் உய்ய வேண்டுமென்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் சிற்றின்பத்தின் சிறப்பைத் திட்பமாகவும் நுட்பமாகவும் எடுத்துரைப்பாராயினர். சங்கத் தமிழிலக்கியங்களிலே காணக்கிடக்கும் அனைத்து வகை அகப்பொருள் கருத்துக்களையும் நாம் வள்ளுவரின் காமத்துப் பாலில் பரக்கக் காணலாம். குறள் கொடுத்த கோமானின் காமத்துப்பால் அகப்பொருள் நுணுக்கங்கள் பல மிளிர்ந்து சிறந்து காணப்படுகிறது.

ஒத்த குணமும், ஒத்த நலமும், ஒத்த அன்பும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் உடையவராய்த் தலைவனும் தலைவியும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி ஊழ் வினைப் பயனாய்த் தாமே எதிர்ப்பட்டுக் காதலித்துக் கலக்கும் முறையே 'களவு' என்று நந்தமிழ் நூல்கள் நவிலுகின்றன. 'கற்பியல்' என்று கழறப்படுவது, மேற் கூறிய வாறு கலந்த காதலர் இருவருர் கடிமணம் புரிந்து மக்களொடு மகிழ்ந்து' மனையறம் காத்து, மிக்க காமத்து

வேட்கை தீர்த்த காலையில், இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமை கண்டு துறக்கவின்பம்பெற முயல்வதேயாகும் களவியல், கற்பியல் என்று கூறப்படும் துறைகளைத்தான் வள்ளுவர் தமது காமத்துப்பாலில் அமைத்திருக்கிறார். அவர்தம் இன்ப இயல் குறளுக்கே சிறப்புத் தருவதாகும்.

எல்லாக் குணநலன்களும் பொருந்தித் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனும் தலைவியும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்ட, ஒரு பொழிலிடத்தே எதிர்ப்படுவர். இவ்வாறு பால்வழி உய்க்கப் பெற்று எதிர்ப்பட்டுக் கண்ட காலையில் தலைமகன் தலைவியைப் ''தெய்வப் பெண்ணோ' மயிலோ, மானிடப் பெண்ணோ'' என்று ஐயுறுவான். இதனை வள்ளுவர்'

**'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலுமென் நெஞ்சு!'**

—திருக்குறள் : **1081**

என்று, 'தகையணங்குறுத்தல்' என்ற காமத்துப்பாலின் முதல் அதிகாரத்தில் வைத்துள்ளார். இவ்வாறு அவள் அழகுநலச் செவ்வியால் நெஞ்சம் பறிகொடுத்துப் பலவாறு புலம்பிய தலைவன், தலைவியின் கரிய மலர் போன்ற கண்களால் குறிப்பறிவான்.

**'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்'**

—திருக்குறள் : **709**

என்பதன்றோ குறள்!

தலைவன் தன்னை நோக்குங்கால் தலைவி நிலம் நோக்கியும், அவன் தன்னை நோக்காதபொழுது தான் அவனைக் கண்ணின் கடைக் கூட்டில் புன்முறுவல் நெகிழ நோக்குதலும், அன்னாரின் காதற்குறிப்யினைப் புலப்

படுத்திவிடும். கண்களிலிருந்து காதல் பிறக்கிறது என்று பல நூல்களும் நுவலா நிற்கும் கருத்தினை,

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
என்ன பயனு மில' [வாய்ச்சொற்கள்

—திருக்குறள் : 1100

என்ற குறளால் அறியலாம். பின்னர், தலைவன் தன் கண்ணொடு கலந்து கருத்தொடு நிறைந்த காதலியின் பண்பு நலனைப் பலபடப் பாராட்டி மொழிவான்.

'கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள'

—திருக்குறள் :1200

என்று 'தனக்குக் காதல் நோய் தந்த காரிகையே அந் நோயைத் தீர்க்கும் அருமருந்தாவள்' என்றும், தலை மகளின் அழகு நலம் பாராட்டி அகமகிழ்வான்.

இன்னணம் பலவாறு மனமகிழ்ந்த தலைவன் அவள் நலம் புனைந்துரைக்க முற்படுவான் அனிச்சமலரைப் பார்த்து 'மென்மை நிறைந்த அனிச்சம் பூவே! நின்னினும் என் காதலி மென்மை நிறைந்தவள்' என்றும் 'மலரில் தேனுண்டு திளைக்கும் வண்டு தன் தலைவியின் கண்களைக் கருங்குவளை என்றும், கையினைக் காந்தள் என்றும், கொல்வைச் செவ்வாவைக் கொழுமை நிறைந்த ஆம்பல் மலரென்றுப் கூறிச் சுழன்று திகைப்பதாகவும்' கூறுவான் பின்னர் விண்ணிலே தண்ணொளி வீசி வலம் வரும் வெண்மதியை விளித்து நோக்கி, ''மதியே மலர் போன்ற கண்களையுடைய இவள் முகத்தை ஒத்திருக்க விரும்பினால், நீ பலரும் காணும்படியாகத் தோன்றாதே'' என்று கூறுவான். தலைவனும் தலைவியும் தங்கள் காதற் சிறப்புரைத்துக் கொள்வார்கள். தலைமகன்' 'உயிருக்கும்

உடலுக்கும் என்ன தொடர்போ, அத்தகைத்தே எனக்கும் தலைவிக்கும் இடையேயுள்ள தொடர்பு' என்பான். தலைமகளோ 'காதலர் எம் நெஞ்சில் இருக்கின்றார்; சூடான பொருளை உண்டால் அவர் வெம்மையுறுதலை எண்ணி, சூடான பொருளை உண்ண அஞ்சுகிறோம்' என்று கூறுவாள். பின்னர், தலைவன் தலைவியைக் கூடிப் பிரிந்து செல்வான்.

இவ்வாறு கூடிச் சென்ற தலைவன், மீண்டும் இடந்தலைப்பட்டுத் தலைவியைத் தழுவிச் செல்ல நினைப்பான். தலைவன் பிரிவாற்றாது பெரிதும் வருந்தி வனப்பழிவதைக் கண்ட பாங்கன், அதற்குக் காரணம் என்னவென்று தலைவனைக் கேட்பான். தலைவன் தலைவியின் நலனைக் கூறிப் 'பள்ளத்துப் பாயும் வெள்ளம் போலத் தன்னுள்ளம் பாவை பின் சென்றதைத் தெரிவிப்பான். இது கேட்ட தலைவன் பாங்கன், தலைவனை இடித்துரைப்பான். அதற்குத் மறுமொழியாக, "உருவின் திருவினளான தலைவியை நீ கண்டாயில்லை; கண்டால், இங்ஙனம் பேச மாட்டாய்" என்பான். பாங்கன் தலைவியைப்பற்றிக் கூறச் சொல்வான். அதற்குத் தலைவன்,

**'முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
**வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.'**

—திருக்குறள் : 1113

என்று தலைவியின் மேனி நலத்தை மிகுத்துரைப்பான். தலைவன் குறிப்பிட்ட விடத்தில் தலைவியைப் பாங்கன் கண்டு தலைவன் கூற்று மிகையன்றென்பதை உணர்ந்து, தலைவன் தலைவியைச் சேர உதவி புரிவான்.

பின்னர்த் தலைவன், தலைவியும் தோழியும் தமியராய்த் தினைப்புனத்தில் இருக்கும் பொழுது சென்று, 'யானை சென்றதோ?' என்று கேட்டுப் பின்னர், 'மான் சென்றதோ?' என்று வலியப் பேச்சுக் கொடுப்பான். இம்

மட்டோடு அமையாமல், அணியும் தழையும் கையுறை யாகக் கொண்டு சென்று இரந்து பின்னிற்பான்.

**'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே யுள.'**

—திருக்குறள் : 1093

என்று தோழி அவர்கள் இருவரிடையிலும் காதல் உண் டென்பதை நிச்சயிப்பாள். பிறகு தலைவன் தோழியிடம் தன் குறையைச் சொல்லிப் பலகாலும் வற்புறுத்துவான். தழையும் கண்ணியும் கையிலேந்தி நிற்பான். தோழி அவன் நிலைக்கு இரங்காதவள்போல் இருப்பாள். உடனே தலைவன், 'பெருங்காதலால் உழந்து வருந்தும் எனக்கு இனி மடலேறி உயிர் விடுதலே சால்புடைத்து,' எனத் துணிவான் :

**'காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடலல்லது இல்லை வலி.'**

—திருக்குறள் : 1131

என்ற குறள் இதனைப் புலப்படுத்துகின்றது 'நாணமழிந்த செயலன்றோ மடல் ஊர்வது?' என்பாள் தோழி.

**'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்றுடையேன் காமுற்றார் ஏறும் மடல்.'**

—திருக்குறள் : 1132

என்று கூறிப் ''பேயும் கண்ணுறங்கும் நள்ளிருள் யாமத்து நான் மடலேறி மடிவேன்?' என்பான். இத்தகைய மன வுறுதியைக் கண்டு ஆற்றாளாய தோழி, தலைவன் கருத் தினைத் தானே முடிப்பதாகத் தேற்றுவாள்; அதன்பின் தலைவி மனங் கொள்ளுமாறு மெல்ல அவளிடம் பேசு வாள். பின்னர்த் தலைவியும் உடன்படுவாள்.

இவ்வண்ணம் பலகாலும் களவு வழியே இன்பம் நுகர்வதால், அஃது எங்கே நற்றாய், உற்றார், செவிலிக்குத் தெரிந்து, ஊரில் அலர் எழுந்து விடுமோ வென்று தோழி, தலைவியை மணம் புரியுமாறு தலைவனை வேண்டுவாள். தலைவனோ, வரைவு நீட்டித்திருப்பான். பிரிவுத் துயரால் நாளுக்கு நாள் தலைவி 'நீரற்ற புலம்' போலவும், 'பொருளில்லான் இளமை' போலவும், 'அறஞ்சாரான் மூப்பே போலவும்' மெலிவாள். இதனையுணர்ந்து, 'மகளின் வேறுபாட்டிற்குக் காரணம் யாதோ' என்று கேட்ட தாய்க்குத் தோழி, தலைவன் மலர் கொடுத்ததையும், இடர் தீர்த்ததையும், புனலிலிருந்து புணையாய் நின்று காப்பாற்றியதையும் கூறுவாள். தாய் கற்புக்கடம் பூண்ட தலைவிக்குக் கடிமணம் செய்யாவிடின், வேற்று வரைவு நேர்ந்து நொது மலர் வாழ்க்கை எய்தும்; அதனால் காதலர் இருவரும் வெளியேறி விடுவர். பின்னர்க் குரவர்கள் உவக்கத் திருமணம் செய்து கொண்டு, நல்லறமாம் இல்லறத்தைத் தொடங்குவார்கள்.

இவ்வாறு கருத்தொன்றிக் கண்ணும் ஒளியும், மலரும் மணமும் போலக் காதலிருவர் வாழ்ந்துவரும் நாளில் தலைவன் அறுவகைக் காரணங்களால் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு. பிரியுங்காலை தலைவன் தலைவியை அடுத்துத் தன் பிரிவுணர்த்தினால்,

> **'செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்**
> **வல்வரவு வாழ்வார்க் குரை.'**
>
> —திருக்குறள் : *1151*

என்று மறுமொழி கிடைக்கும். அப்படித் தவைவன் பிரிந்த பின்னர், "தீயோ, தொட்டாரையன்றி மற்றவரைச் சுடாது; ஆயின், காதலன் பிரிவோ, அவன் விட்டு நீங்கிய காலத்தும் சுடுகிறதே!' என்பாள். காதல்நோயினைத் தனக்குள் மறைத்தலும் இயலாமல், பிறர்க்கும் உரைத்தலும் இயலாமல் சுழல்வாள்; 'பிரிவுக்கடலைக் கடக்குமுகத்தான்

ஏற்ற புணையில்லையே!' எனப் புலம்புவாள்; கண்களை நோக்கியும் பசலையை நோக்கியும் வருந்தித் துடிப்பாள். முன் தலைமகளுடன் கூடி நுகர்ந்த இன்பத்தை நினைத்தாலும் பெருமகிழ்ச்சி தருதலால் தேனினும் காதல் இனிதென்று தெளிவாள்; கனவு கண்டு வருந்துவாள்; காதலனது அருளற்ற தன்மையை எண்ணிக் கண்ணீர் உகுப்பாள்.

**'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்.'**

—திருக்குறள் : 1227

என்பாள். இதனால் தலைவி மெல்ல மெல்ல மேனி நலம் குன்றி விடுவாள். காம நோய் மறைக்கவும் இயலாத தொன்று.

**'மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்.'**

—திருக்குறள் : 1153

என்று தலைவி ஆற்றாமைப்பட்டு அலறித் துடிப்பாள்.

அதுகாலை, பொருள்வழிப் பிரிந்த தலைவன் மீண்டும் வந்து சேர்வான். ''என் பிரிவால் எத்துணைத் துயர் உற்றனைகொல்?'' என்று தலைவியின் நிலைக்குத் தலைவன் இரங்குவான். ஊட நினைத்த தலைவியின் கண்கள் தலைவன் கண்களோடு கூடிவிடும். இதனைத் தலைவி,

**'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்ட விடத்து.'**

—திருக்குறள் : 1285

என்று கூறுவாள். இவ்வாறு வாழ்ந்து இனிதான இல்லறம் ஓம்புவோர் இடையிலும் ஊடல் நிகழும்.

'ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.'

—திருக்குறள் : 1339

என்ற குறள் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. தன் தலைவன் பொதுமகளிரோடு கூடிக்களிப்பதைக் காதலி காண ஒருப்படாள்.

'வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

—திருக்குறள் : 919

என்ற குறளில் வள்ளுவர் பரத்தையொழுக்கத்தை இடித்துரைக்கிறார். இவ்வாறு ஊடல் நிகழ்ந்த காரணத்தைத் தோழி கேட்ட பொழுது, தலைவன், 'நான் இம்மையிற் பிரியோம்' என்றேன்; 'மறுமையில் பிரிவீர்கொலோ?' என்று தலைவி புலந்து அழுதாள்,' என்பான். மேலும் ''நான் உன்னை நினைத்தேன்' என்றேன்; அதற்கு அவள் ''இடையே சின்னாள் மறந்து பின்னர் நினைத்தீரோ' என்று ஊடினாள்'' என்பான். ஒருமுறை அவளிடைத் தும்மிய பொழுது ''எப்பெண் உம்மை நினைக்க நீவிர் தும்முகிறீர்!' என்று கூறி ஊடினாள்'' என்றும், பிறிதொருமுறை தும்மலை மறைத்தபொழுது, ''எப்பெண் உம்மை நினைத்ததை நான் அறியாமல் மறைக்க முயல்கிறீர்' என்றாள்'' என்றும், பலவாகக் கூறுவான் தலைவன். ஊடிக்கூடலே காதலர்களுக்குக் கழிபேருவகை தருவதாகும்.

'உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது'

—திருக்குறள் :1326

என்றும்,

**'துனியும் புலவியும் இல்லாயிற் காமம்
கனியும் கருக்காயும் அற்று'**

—திருக்குறள் 1306

என்றும் வள்ளுவர் ஊடலின் தன்மையைக் காட்டுகிறார். இவ்வாறு வளமாக வாழ்ந்த தலைவனும் தலைவியும் உலக நிலையைக் கண்டு இறுதியில் பேரின்ப வழிப்படுவர்.

இவ்வாறு வள்ளுவர்கண்ட காமம் அகப்பொருள் நுணுக்கங்கள் அனைத்தும் பொதிந்து காணப்படுகின்றது. பழந்தமிழகத்தின் காதல் வாழ்வினை, 'உள்ளங்கை நெல்லிக்கனி' யெனச் செந்நாப்போதார் செப்பிச் செல்கிறார்.

# 6. தமிழ் இசையின் தொன்மையும் வளர்ச்சியும்

'தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்நிலை வாணர்களும் — இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பினளாம் எங்கள் தாய்'

என்று கவியரசர் பாரதியார் தமிழ்மொழியின் பழமையினைச் சிறப்புறப் பாராட்டினார். இத்தகு பழமையும் பெருமையும் உடைய தமிழ் முப்பிரிவாகப் பகுக்கப்பெற்று இயல், இசை, நாடகம் என்ற பெயருடன் வழங்கப்பெறுகின்றது. எனவே, தமிழ் **'முத்தமிழ்'** என்றும் முழங்கப்படுவதாயிற்று. இம் முத்தமிழும் ஒன்றனோடு ஒன்று இயைபுடையன; தமக்கென இலக்கிய இலக்கணச் செல்வங்களைக் கொண்டன. மூன்றனுக்கும் பொதுவாக அமையும் சில இலக்கணங்களும் உண்டு. இவற்றினை 'மும்மைத் தமிழ்,' 'முத்தமிழ்' என அறிவிற் சிறந்த நம் ஆன்றோர் வழங்கினர். சான்றாக, சிலப்பதிகாரத்தின் நூற்சிறப்புப் பாயிரத்தில், 'குடக்கோ முனி சேரன் தண்டாவுரை முத்தமிழ்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 'ஒருந் தமிழொருமூன்று முலகின் புறவகுத்துச் சேரன் தெரித்த சிலப்பதிகாரம்' என்றும் பேசப்படுவது கொண்டு, முத்தமிழ் என்ற வழக்குண்மை உணரலாம்.

சிலப்பதிகாரம் மூன்று தமிழும் விரவி வரும் நாடகக் காப்பியமாதலின், முத்தமிழ்க்காப்பியமென்று கூறப்படும். சிலப்பதிக்காரமும் அதற்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் எழுதிய உரையுமே கொண்டு, நாம் அக்கால முத்தமிழ்ப்போக்கினை ஒருவாறு அறிய இயல்கின்றது.

எனவேதான் அடியார்க்கு நல்லாரைச் சிறப்பித்துப் பேசும் அடியார்க்கு நல்லார் உரை சிறப்புப் பாயிரம்:

**'காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்தக் கடியபெருங்**
**காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமற் காலமெனும்**
**கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ணகாங்கெயர்கோனளித்த**
**சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே'**

—சிலம்பு அடியார்க்கு நல்லாருரைச் சிறப்புப்பாயிரம் : 3

எனக் குறிப்பிட்டுள்ளது. சிலப்பதிகாரம் நமக்குப் பழைய இசை மரபினைத் தெரிவிப்பதாய் உள்ளது.

இசை என்ற சொல்லுக்கு 'இசைவிப்பது, வயப்படுத்துவது, ஆட்கொள்வது' என்பன பொருளாகும். எல்லாம் கடந்து எங்குமாய் எல்லாமாய் நீக்கமற நிறைவுற்று விளங்கும் இறையவனையே நம் முன்னோர் இசை வடிவமாகக் கண்டனர். 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பது **திருவாசகம்**. மேலும், கோவை நூல்களுள் சிறப்பித்துக் கூறப்பெறும் **திருச்சிற்றம்பலக் கோவையார்** எனப்படும் **திருக்கோவையாரில்** *(20)*.

**சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென்**
**[சிந்தையுள்ளும்**
**உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ**
**இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியவே!**

என்று கூறப்படுகின்றது. ஏழிசையின் சூழலில் இறைவன் ஈடுபட்டான் என்பது இதனால் பெறப்படுகின்றதன்றோ!

தமிழின் மிகப் பழைய நூலான தொல்காப்பியம் கொண்டே தமிழ் இசையின் பழமையினை அறிய முடியும். தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபியலின் இறுதி நூற்பாவில் *(33)*,

**'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்'**

என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூற்பாவிற்கு உரையாசிரியர் இளம்பூரணர், 'உயிரெழுத்துகளெல்லாம் தமக்குச் சொன்ன அளவினைக் கடந்து ஒலித்தலையும், ஒற்றெழுத்துகள் தம்மொலி முன் கூறிய அளபின் நீட்டலையும், இந்நூலுட் கூறும் விளியின் கண்ணேயன்றிக் 'குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற் கண்ணும் உள' எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர்,' என்று உரை எழுதியுள்ளமை நோக்குழித், தொல்காப்பியனார்க்கும் முன்னமே இசைத் தமிழ் வளர்ச்சியுற்று வரையறையான—கட்டுக்கோப்பான இலக்கணத்தைப் பெற்றிருந்தது என்பதை அறிகின்றோம். மேலும். தொல்காப்பியனார் பொருளதிகாரத்தின் அகத் திணையியலில் (18) கருப்பொருள்களைப் பின்வருமாறு கூறுவர் :

**'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப'**

என்று தமிழ் இசைக் கருவிகளுள் பழமையான யாழினை யும் சுட்டியுள்ளார். எனவே, இசையோடு மட்டுமன்றி இசையினை எழுப்பத் துணைகோலும் யாழும் பழமை யாய் வந்துகொண்டிருக்கிறது என்பதை அறியலாம்.

இறையனார் களவியலுரையாசிரியர், முச்சங்க வரலாற்றின் தலைச்சங்க வரலாறு கூறுமிடத்தில், 'அவர் களாற் (தலைச் சங்கப்புலவர்களால்) பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும்

களரிவியாவிரையுமென இத் தொடக்கத்தன'' என்றும், கடைச் சங்கத்தைக் குறிக்குமிடத்தில், ''அவர்களாற் (கடைச்சங்கப் புலவர்களால்) பாடப்பட்டன. நெடுந்தொகை நானூறும்,' 'குறுந்தொகை நானூறும்,' 'நற்றிணை நானூறும்,' 'புறநானூறும்,' ஐங்குறுநூறும்,' 'பதிற்றுப் பத்தும்,' 'நூற்றைம்பது கலியும்,' 'எழுபது பரிபாடலும், 'கூத்தும்,' 'வரியும், சிற்றிசையும், பேரிசையுமென' இத் தொடக்கத்தன'' என்றும் குறிப்பிட்டுள்ளார். இக் குறிப்பினாலும் தமிழிசையின் பழமை தெற்றெனத் துலக்கமுறும்.

'பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், 'பஞ்சமரபு', 'தாளசமுத்திரம்', சச்சபுடவெண்பா', 'இந்திரகாளியம்', 'இசை நுணுக்கம்', 'பதினாறுபடலம்', 'தாளவகையோத்து, 'இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவை' முதலிய எண்ணற்ற இசைத்தமிழ் நூல்கள் பழங்காலத்தில் வழக்கிலிருந்து பின்னர் வழக்கு வீழ்ந்துபட்டிருக்கும் என்பர்.

நமக்கு இன்று கிடைக்கும் இசை பற்றிய குறிப்புகளுள் மிகப் பழமையானவை, எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடல் என்னும் நூலில் காணப்படும் அரிய இசைக் குறிப்புகளாகும். பரிபாடல் கி. பி. முதல் நூற்றாண்டினைச் சேர்ந்த நூலாகும். எழுபது பரிபாடலில் இன்று நமக்குக் கிடைப்பன இருபத்திரண்டேயாகும். ஒவ்வொரு பரிபாடலின் கீழும் அப்பாடலைப் பாடிய புலவர் பெயர், இசை அமைத்தவர் பெயர். யாழ், செந்துறை, வண்ணம், தூக்குமுதலியன குறிப்பிடப்பட்டுள்ளன. இக்குறிப்புகளை நோககினால் வளமார்ந்த தமிழிசையின் பழமையினையும் சிறப்பினையும் அறிவதோடு பாடலில் அமைந்த விழுமிய பொருளுணர்ச்சியினையும் சுவைத்து இன்புறலாம்.

தமிழில் ஆற்றுப்படை நூல்கள் இசைபற்றிய குறிப்புகள் பலவற்றைத் தந்திருக்கின்றன. 'இசைக்குக் காட்டு

விலங்குகளும் கட்டுப்பட்டு நிற்கும்' என்பதனைப் பின் வரும் பாட்டால் அறியலாம் :

**'ஒலியல் வார்மயிர் உயிரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது நிலையிலும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்'**

—அகநானூறு 102 : 5-9

''ஒரு குறமகள் குறிஞ்சி நிலத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணைத் திறமுறப் பாடத் தினைக்கதிரையுண்ண வந்த ஒரு யானை அதனை உண்ணாமலும், அவ்விடத்தை விட்டுப் புடைபெயராலும் அப்பண்ணால் நெஞ்சம் ஈர்க்கப்பட்டு மனமுருகி நின்று உறங்கியது என்பதனை இப்பாடற்பகுதியினால் அறிகின்றோம். மேலும் 'மதுரைக் காஞ்சி'யில் 'யாழோர் மருதம் பண்ண' என வரும் தொடரினையும், கலித்தொகையில் 'செவ்வழி யாழிசை நிற்ப...........மாலையும் வந்தன்று' என வரும் தொடரினையும் நோக்குமிடத்துச் சங்க காலத்து இசையினை உணர இயல்கின்றது

தமிழ்ப்பண்கள் நூற்று மூன்று என்று கொள்ளப்படும். 'பண்களாவன, பாலை யாழ் முதலிய நூற்று மூன்று' என்பர் பரிமேலழகர். பிங்கலந்தை நிகண்டு 'ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்' எனக் குறிப்பிடுகின்றது. பெரும்பண்களாவன பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பனவாம். இந்நாற்பெரும்பண்களுக்கும் மொத்தம் இருபத்தொரு திறங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் பாலை யாழ்த்திறம் ஐந்தாகவும், குறிஞ்சி யாழ்த்திறம் எட்டாகவும், மருத யாழ்த்திறம் நான்காகவும், செவ்வழி யாழ்த்திறம் நான்காகவும் கொள்ளப்படும். 'ஏழுசுரங்கள் எனப்படுவன 'குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி,

விளரி, தாரம்' என்பனவாம். இவற்றை வடமொழியில் ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று குறிப்பிடுவர். தமிழில் பண் என்பதை வடமொழியில் இராகம் என்பர், திருவள்ளுவர்.

**'பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்; கண்ணென்னாங் கண்ணோட்ட மில்லாத கண்.'**

என்ற குறளில் (573) 'பண்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். எழுசுரங்களால் ஆகிய இராகங்களைப் பண் என்றும் ஆறு சுரங்களால் ஆகியவற்றைப் பண்ணியல் என்றும், நான்கு சுரங்களால் ஆகியவற்றைத் திறம் என்றும் மூன்று சுரங்களால் ஆகியவற்றைத் திறத்திறம் என்றும் இசை இலக்கண நூலார் கூறுவர். வடமொழியாளர் இவற்றை முறையே சம்பூரணம், ஷாடவம், ஔடவம், சதுர்த்தம் என வழங்குவர்.

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் பழந்தமிழ் இசையின் நுட்பம் தெற்றெனப் புலப்படுத்தப் பட்டிருக்கின்றது. மேலும் 'கானல் வரி'யால் விளங்கும் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலை வரி, மயங்குதிணை நிலைவரி, சாயல் வரி, முதலிய பல்வேறு வரிப்பாடல்கள் இசையின் மேன்மையினையும் விரிவினையும் விளக்கவல்லன சமணப் பெருங்காப்பியமான 'சீவக சிந்தாமணி'யில், காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் இடைக்காலத் தமிழிசையினைப் பரக்கக் காணலாம். மதம் பிடித்த யானையின் சீற்றத்தினை இசையால் தணிவித்த செய்தி, 'உதயணன் கதை'யில் பேசப்படுகின்றது.

இவ்வனைத்திற்கும் மேலாகச் சமய குரவர்கள் அருளிச்செய்த தேவாரத்தில் தமிழிசையின் முழுமறுமலர்ச்சியினையும் காண்கிறோம். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசர், தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்தி ஆகியோர், 'கழகமொடமர்ந்த கண்ணுதற் கடவுளை'

இன்னிசையுடன் பாடிப் பரவினர். எண்ணற்ற தேவாரப் பதிகங்களை அருளிச் செய்தனர். 'இசையாதரித்துக் கற்று வல்லார் சொல்லக் கேட்டு உகந்தவர் தம்' என்று பாடு கிறார் ஞானத்தின் திருவுருவாம் சம்பந்தர்' திருநாவுக் கரசரோ,

**'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்'**

—நான்காம் திருமுறை : 16

என்று பாடுகிறார். 'ஏழிசையாய் இசைப்பயனாய், இன்ன முதாய், என் தோழனுமாய்' என்றபடி இறைவனை இசை வடிவமாகவே கண்டு போற்றியவர் நம்பியாரூரர். இவ்வாறு இவர்கள் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப்' பாடிய தேவாரத்தில் இருபத்து மூன்று பண்கள் அமைந் துள்ளன அவையாவன : செவ்வழி, தக்கராம், நேர் திறம், புறநீர்மை, பஞ்சமம், நட்டபாடை, நைவளம், அந்தாளிக் குறிஞ்சி, காந்தாரம், பழம் பஞ்சுரம், மேக ராகக் குறிஞ்சி, கொல்லிக் கௌவாணம், பழந்தக்கராகம், குறிஞ்சி, நட்டராகம், வியாழக்குறிஞ்சி, செந்திறம், செந் துருத்தி, தக்கேசி, கொல்லி, இந்தளம், காந்தார பஞ்சமம், கௌசிகம், பியந்தை, சீகாமரம். சாதாரி என்பனவாம். இவ்விருபத்து மூன்று பண்களும் நாயன்மார் மூவராலும் அவர்களாலேயே இசையமைத்துப் பாடப்பெற்ற தனிப் பெருமையுடையனவாம்.

தேவாரப் பண்களில் பகற்பண், இராப்பண் என்ற பகுப்பு முறை பழமையானதாகும் விடியற்காலையில் பாடவேண்டிய பண் புறநீர்மைப்பண் ஆகும் அதனை இக்காலத்தில் 'பூபாளம்' என வழங்குவர் காலையில்

மருதப்பண்ணினையும், மாலையில் செவ்வழிப் பண்ணினையும், நள்ளிரவில் குறிஞ்சிப் பண்ணினையும் பாட வேண்டுமென்பது பழந்தமிழ் இசை மரபாகும்.

**'பாலை யாழொடு செவ்வழி பண்கொள**
**மாலை வானவர் வந்து வழிபடும்'**

என்று திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் பாடியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

வாயினாற் பாடுவதோடு மட்டுமல்லாமல் இசைக் கருவியோடு இசைத்தும் பாடல்கள் பாடப்பட்டன என்பது தெரியவருகிறது. அக்காலத்தே இசைக்கருவிகள் பல இருந்தன என்பதும் தேற்றம். சங்க காலத்திலும் சிறிய யாழினை வைத்திருந்த பாணன் 'சிறுபாணன்' என்றும், பெரிய யாழினை வைத்திருந்த பாணன் 'பெரும் பாணன்' என்றும் வழங்கப்பட்டனர். 'யாழ்ப்பாணர்.' 'மண்டைப் பாணர்' என்ற பிரிவினரும் அக்காலத்தே இருந்தனர். 'மாசில் வீணையும்' என்ற பாடலில் நாவுக்கரசர் வீணையினைச் செவிக்கின்பம் பயக்கும் செம்மையான இசைக் கருவியாகக் கொண்டுள்ளார். மேலும், இசையுருவங்களைக் காப்பாற்றி வருவதோடு அவற்றை மாறுபடாமல் வழிவழி வளர்த்து வருவன இசைக் கருவிகளாகும். இசைக்கருவிகள் 'தோற்கருவி துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி' என நான்கு வகைப்படும். பண்டைத் தமிழிசைவாணர் இக்கருவிகள் கொண்டு ஏழிசைத்திறனை வழுவின்றி இசைத்து வெளிப் படுத்தி இசை நுட்பங்களை இனிமையாகப் புலப்படுத் தினர் என்ற செய்தி,

**'குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்**
**வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்**
**அரும்பெறல் மரபிற் பெரும்பாண் இருக்கையும்'**

எனவரும் சிலப்பதிக்காரத்தின் இந்திரவிழவூ ரெடுத்த காதைத் (36-38) தொடர்கொண்டு அறியலாம்.

**'குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்.'**

என்ற திருக்குறளானும் (66) இசைக்கருவிகளுள் குழலும் யாழும் சிறப்பிடம் பெறத்தக்கன வென்பதை அறியலாம்.

இதுபோன்றே தேவராத்திருப்பதிகங்களில் வேறுவேறு இசைக்கருவிகள் குறிக்கப்படுகின்றன.

**'பாடல்வீணை முழவம் குழல்பண் ணாகவே**
**ஆடு மாறு வல்லான்.'**

—இரண்டாம் திருமுறை : 61

என்றும்,

**'குழலோடு கொக்கரை கைத்தாளம் மொந்தை**
**குறட்பூதம் முன்பாடத் தானாடுமே'**

—ஆறாந் திருமுறை : 4-7

என்றும் வரும் திருப்பதிகத் தொடர்கள் தேவார கால இசைக்கருவிகளை உணர்த்தும், தேவாரத் திருப்பாடல்களில் இடக்கை, உடுக்கை, கத்திரிக்கை, கல்லவடம், கல்லலகு, கிணை, குடமுழா, கொக்கரை. கொடுகொட்டி, சல்லரி, தக்கை. தகுணிச்சம், தண்ணுமை, பறை பிடவம், முழவு மொந்தை, முரவம் முதலிய தோற்கருவிகளும், வேய்ங்குழல் முதலிய நரம்புக் கருவிகளும், தாளம் முதலிய கஞ்சக்கருவிகளும் பயின்று வந்துள்ளன.

திருவாசகத்தில் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்பன இசைத்தமிழ்த் துறையைச் சார்ந்த பாடல் வகைகளாகும்.

இசைத்தமிழின் பொற்காலமான தேவார காலத்தில் நாயன்மாரால் அருளிச்செய்யப்பட்ட தேவாரத்திருப்பதிகங்கள் பண்முறையோடு ஓதப்பெற்று வந்துள்ளமையைக் கல்வெட்டுக்கொண்டு உணரலாம். விசயநந்தி விக்கிரமனாகிய நந்திவர்ம பல்லவனது 17-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 750) எழுந்த திருவல்லம் திருக்கோயிற் கல்வெட்டு ஒன்றில் ''திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும் திருப்பதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வோருக்கும் நெல்லு நானூற்றுக்காடியும்'' என்று குறிப்பிடப்படுவதால், கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலேயே திருக்கோயில்களில் தேவாரப்பதிகங்கள் முறையாக ஓதப்பட்டன என்பதைத் தெளியலாம். ஆயினும் தேவாரத் திருமுறையினை நாடெங்கும் பரப்பிய பேரரசன் தஞ்சையில் பிரகதீச்சுரர் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனே ஆவன். இவனது ஆறாம் ஆண்டில் எழுந்த திருநல்லம் கோயில் கல்வெட்டின் பகுதி வருமாறு: ''ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் கொடுத்த பிடாரர் நாற்பத்தெண்மரும், இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம், நெல்லு முக்குறுணி நிவந்தமாய், ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால், உடையார் உள்ளூர்ப்பண்டாரத்திலே பெறவும்'' என வரும் கல்வெட்டுப் பகுதியால், திருக்கோயில்களில் திருப்பதிகங்கள் பாட ஓதுவார் நாற்பத்தெண்மர் நியமிக்கப்பட்டிருந்த நம் பண்டைக்காலச் செய்தியினை அறிந்து இறும்பூதெய்துகிறோம்.

திருஞான சம்பந்தர் காலத்திலேயே அவரோடு திரு நீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் மனைவியார் 'மதங்கசூளாமணியா'ரும் சீகாழிப்பதி போந்து, சம்பந்தரை வணங்கி, அவர் பாடியருளிய தேவாரப் பதிகங்களைத் தம் யாழில் இசைத்துப் பின்னர்த் தமிழ்நாடெங்கும் சென்று அத்தெய்வப் பாடல்களை இசையுடன் பரப்பினர் என்பது வரலாறாகும். இன்றளவும் இந்தப் பழந்தமிழ்த் தேவார இசையினை விடாது போற்றிக் காத்து வருபவர்கள் ஓதுவாமூர்த்திகளேயாவர். அவர்களுக்குத் தமிழிசை உலகு நன்றிக்கடன்பட்டுள்ளது.

பிற்காலத்தில் — அதுவும் நாயக்க மன்னர் காலத்தில்— இசை பல்வேறு வகையில் வளர்ந்தது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'அருணகிரி நாதர்' சந்தப் பாடல்களால் ஆன திருப்புகழை இயற்றினார். பழம் பண்கள் மறக்கப்பட்டு இராகங்கள் வந்து சேர்ந்தன. மேலும் இராகங்கள் பழைய பண்களிலிருந்து அமைந்து வளர்ந்தவையே என்னும் உண்மை புறக்கணிக்கப்பட்டது. கர்நாடக இசை, தென்னாட்டு இசைக்கலை என்பதும் தமிழ்ப் பெருமக்களின் பரம்பரைச் சொத்து என்பதும் ஏற்றுக்கொள்ளப்படாமற் போயின. கர்நாடக இசை என்றால், தெலுங்குப்பாட்டுகள் என்ற அளவிற்கு ஒரு மயக்கமான நிலை ஏற்பட்டது. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட 'தியாகையர்' தெலுங்கில் கீர்த்தனங்கள் இயற்றினார், சாகித்தியங்களை உருவாக்கினார். இது போன்றே சீர்காழி அருணாசலக் கவிராயர் தமிழில் 'இராம நாடகம்' எனும் இயல் இசைத்தமிழ் நூலை இயற்றினார். கோபாலகிருஷ்ண பாரதியார் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'களை இயற்றி இசைத் தமிழிற்குத் தொண்டாற்றினார். முத்துத் தாண்டவரும் நெஞ்சைத் தொடும் நல்ல கீர்த்தனைகளை இயற்றி உதவினார். மேலும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' இயற்றிய திரிகூடராசப்பக் கவிராயர், கனம் கிருஷ்ணையர், கொட்டையூர்ச்

சிவக்கொழுந்து தேசிகர், பெருங்கரைக் கவிக்குஞ்சர பாரதி, திருக்கடவூர் அபிராமி பட்டர், வையை மகா வைத்தியநாதய்யர். மாயூரம் வேத நாயகம் பிள்ளை, சென்னிகுளம் அண்ணாமலை செட்டியார், இராமலிங்க அடிகள் ஆகியோர் இசைத்தமிழ் உலகிற்குப் பெருந் தொண்டாற்றினர்.

இந்நூற்றாண்டில் தோன்றிய பாரதியார், ''வித்து வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளிலே பழம்பாட்டுகளை மீண்டும் பாடுதல் நியாயமில்லை. அதனால், நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்'' என்று எச்சரிக்கை விடுத்தார். பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசனார் ஆகிய மூவரும் இசைத்தமிழுக்குரிய பாடல்களை எழுதி உதவினர். மேலும் கவிஞர்களில் யோகி சுத்தானந்த பாரதி யார், பெரியசாமித்தூரனார், என். எஸ். சிதம்பரம், உளுந்தூர்ப் பேட்டைச் சண்முகம் முதலியோர் இசைப் பாடல்களை எழுதி இசைத்தமிழ் உலகிற்கு அளித்து வருகின்றனர்.

தமிழிசைக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து, தமிழ் இசை இயக்கம் கண்டு தொண்டாற்றிய பெருமை, மறைந்த பெரியார் ராஜா சர். அண்ணாமலைச் செட்டி யார் அவர்களையே சாரும். 1943-ல் தமிழ் இசை இயக்கம் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு உறுதுணையாகச் சர்.ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், கோவை திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும் தொண்டாற்றினர். இரசிகமணி 'டி. கே. சி.' கதை மணி 'கல்கி' முதலியோரும் துணை நின்றனர்.

தமிழிசை இயக்கம் தொடக்கக் காலத்தில் தனக்கேற்பட்ட இன்னல்களையும் இடையூறுகளையும் கடந்து வெற்றி கண்டது. இப்பொழுது சென்னையில் இராஜா அண்ணாமலை மன்றம் அமைக்கப்பட்டு, டிசம்மர்த் திங்கள் இறுதியில் தமிழிசை விழாவும் பழம்பண்களை ஆராயும் பண் ஆராய்ச்சி மாநாடும் நடைபெற்று வருகின்றன. இன்று செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், அவர்தம் இளவல் திரு. மு அ. சிதம்பரம் செட்டியார் அவர்களும், தந்தையார் விட்டுச் சென்ற பணியினை—தமிழிசை வளர்ச்சியினைக் கண்ணும் கருத்துமாய்க் காத்து வருகின்றனர். தமிழிசை நாளும் வளர்வதாக!

# 7. கானல் வரி

வாழ்க்கையைப் போலப் பரந்து விரிந்த கடல் ஒரு புறம், வாழ்க்கையோடு கலக்கும் கலையைப் போன்று கடலிற்கலக்கும் காவிரியாறு பிறிதொருபுறம். காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா முடிந்த பின்னர் 'சித்திரைச் சித்திரைத் திங்கள்சேர்ந்தென' என்னும் சித்திரை முழுநிலா நாளன்று கடலாடக் கோவலனும் மாதவியும் சென்றனர், புலால் மணம் கடியும் கைதைவேலி நெய்தலங் கானலிலே, சித்திரப் படாத்தில் ஒரு விதானம் அமைத்து இன்பமாய் வீற்றிருந்தனர். எங்கும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. அது போது மாநெடுங்கண் மாதவி, தோழி வயந்தமாலை கையிலிருந்த யாழை வாங்கி, அஃது எண்வகையில் குற்றம் தீர்ந்ததா என்று, பண்வகையால் ஆராய்ந்து கண்டாள். அவள் 'மரகத மணித்தாள் செறித்த மணிக்காந்தாள் மெல் விரல்கள் பயிர் வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப் படர்ந்தன.' பின்னர் ஏவலன்பின் உரிமையால் அவ்வியாழைக் கோவலன் கையிற் கொடுத்துப் பாணியா தென வினவி நின்றாள். கோவலன் அவ்வியாழைக் கையில் வாங்கி, அகப்பொருட்சுவை அமைந்தனவும், காவிரியை நோக்கினவும், கடற்கானல் வரிப்பாணியும் ஆகிய இசைப் பாடல்களை மாதவிதன் மனமகிழ வாசிக்கத் தொடங் கினான்.

ஆயின், மாதவிக்குக் கோவலன் மனம் மகிழ இசைத்த பாட்டு வெறுப்பை விளைத்தது. மாதவி, அவன் யாரோ ஒரு பெண்ணின் மேல் உயிர்க்காதல் கொண்டு உள்ளுருகிப் பாடுவதாக எண்ணி மயங்கினாள். எனவே, அவள் முறை

வந்தபோது எதிர்ப்பாட்டுப் பாடினாள் இதனை ஆசிரியர் இளங்கோவடிகள், கட்டுரை வாயிலாக,

**'ஆங்குக் கானல் வரிப்பாடல்**
**கேட்ட மாநெடுங்கண் மாதவியும்**
**மன்னுமோர் குறிப்புண்டிவன்**
**றன்னிலை மயங்கினானெனக்**
**கலவியான் மகிழ்ந்தாள்போற்**
**புலவியால் யாழ்வாங்கித்**
**தானுமோர் குறிப்பினள்போற்**
**கானல்வரிப் பாடற்பாணி**
**நிலத்தெய்வம் வியப்பெய்த**
**நீணிலத்தோர் மனமகிழக்**
**கலத்தோடு புணர்ந்தமைந்த**
**கண்டத்தாற் பாடத்தொடங்குமன்'**

—சிலம்பு : கானல்வரி, 24

என்று கூறுகிறார். 'நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள், நிலத்தோர் மனமகிழ' மாதவி இசைத்த பாட்டு தானொன் றின்மேல் மனம் வைத்து மாயப்பொய் பலகூட்டும்' மாயத் தாள் பாட்டாக அவனுக்குப்பட்டது. எனவே, 'விடுதல் அறியா விருப்பு,' வெறுப்பாயிற்று. அவன் அவளைத் துறந்து ஏவலாளர் பின்தொடரப் படர்ந்தான்.

பல நாளும் அன்போடு ஒன்றி வாழ்ந்த கோவலனும் மாதவியும், பிரிய நேர்ந்த காரணம் யாது? இதனை அடிகளே கூற முற்பட்டிருக்கிறார். ''யாழிசை மேல் வைத்துத்தன் ஊழ்வினைவந் துருத்ததாகலின், உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தனனாய்' என்று கூறிச் செல்கிறார். ஆயின், இந்தக் காரணம் நமக்குப் பொருத்தமாகப் படவில்லை. யாதோ ஒரு காரணத்தை

அடிகள் மனமின்றியே கூறிச் செல்வதாகத் தெரிகிறது. எனவே நாம் அவர்கள் வாழ்வில் புகுந்து இதற்குரிய காரணத்தைக் காண்போம்:

நெய்தலங்கானலிலே காணும் கோவலனுக்கும், 'வடு நீங்கு சிறப்பின் மனையகம் துறந்து, கூனியின் கைமாலை வாங்கி, மாதவி மனை புகுந்த' கோவலனுக்கும் மன வளர்ச்சியில், பெரியதொரு வேறுபாடு இருந்ததாக நாம் கூற இயலாது. அன்று கண்ட அதே கோவலனையே நாம் இன்றும் காண்கிறோம். அறிஞன், அழகன், கலைஞன், சுவைஞன் ஆகக்கோவலன் விளங்கினாலும், அவனிடம் கொழுமைக்கூட்டுணர்வில் எழுகின்ற ஓர் ஒற்றுமை மனப் பான்மை—ஒரு நிறைவுடைமை — இவற்றைக் காண் கிறோம். மணிமேலை என்ற பெண்ணை மாதவி மணி வயிற்றிலிருந்து பெற்றிருப்பினுங்கூட, அவன் மனம் வயதுக்கேற்ப வளர்ந்து நிற்கவில்லை. அதற்கு மாறாக, மாதவியானவள் தன் தாய்மைப் பண்பில் ஊறித் திளைக் கிறாள். உலகின் பேராரவாரத்தில் கோவலன் ஈடுபட் டிருக்கிறான். மாதவியோ, தன்னைக் கலையினுள் அமிழ்த்திக் கொள்கிறாள்.

இனி அவன் பாடிய பாட்டைக் காண்போம். இந்திர விழவூரெடுத்த காதையிலும், கடலாடு காதையிலும் கோவலன் மாதவிபால் ஊடலோடு இருந்ததாகக் கூறப் படுகிறது. அப்பொழுது அவன் உள்மனத்தை ஏதோ ஓர் எண்ணம் அரித்து அலைத்துக் குலைத்து வந்திருக்கிறது. அது கண்ணகிபாற்சென்ற எண்ணமாகவும் இருக்கலாம்; அன்றேல், தன் வறுமை நிலையைப் பற்றிய வாட்டமாக வும் இருக்கலாம்.

'திங்கள் மாலை வெண் குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி!'

—சிலம்பு : கானல்வரி, 2

இந்தப் பாடலில் மாதவி தவறு கண்டாள். கோவலன் உள் மனத்தில் எழுகின்ற எண்ணமெல்லாம் பாட்டாய்ப் பரிணமித்தது. 'கண்ணகிதான் உள்ளிருந்து பாடுகிறாளோ!' என்று ஐயுறும் அளவுக்கு அவன் பாட்டு அமைந்திருக்கின்றது. கண்ணகியின் பெருங்கற்பைப் பாராட்டியதாகவும், மனையறம்படுத்த காதையில் அவன் பேசும் உலவாக் கட்டுரையின் சாயலாகவும், அவன் பாட்டு நமக்குத் தோன்றுகின்றது. இதனையே மாதவி, அவன் வேறொரு பெண்ணின் மேல் காதல் கொண்டு உள்ளம் நெக்குருகிப் பாடுவதாகக் கொண்டாள். மேலும்:

'பொழில்தரு நறுமலரே! புதுமணம் விரிமணலே!'

என்று தொடங்கும் குறியிடம் கூறும் பாடலிலும் மாதவி இக்கருத்தையே கண்டாள். ''தவள முத்தம் குறுவாள் செங்கண், குவளை யல்ல கொடிய கொடிய!' என்ற பாடல் அவள் கொண்ட எண்ணத்திற்கு உரமூட்டியது. இறுதியாகக் கோவலன் பாடிய,

'சேரல் மடவன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மடவன்னம் சேரல் நடை ஒவ்வாய்
ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள்பின்
சேரல் மடவன்னம் சேரல் நடை ஒவ்வாய்!'

—சிலம்பு : கானல் வரி, 13

என்ற பாடலைக் கேட்டுத் தன் எண்ணத்தில் தவறில்லை என முடிவு செய்தாள்; அப்பாட்டில் தன்னை விலக்கும் குறிப்பு இருப்பதாக எண்ணி வாடினாள். மேலும் அவன் கட்டிய மனைவி கண்ணகியை விட்டுத் தன்னை வந்து அடைந்தவனாதலின், தன்னையும் ஒருநாள் துறந்து விடுவானோ என்ற அச்சம் அவள் அடிமனத்தில் இருந்திருக்கலாம். எனவே, அவள் ''மன்னுமோர் குறிப்புண்டு, இவன் தன்னிலை மயங்கினானென'' நினைத்துத் தானுமோர் குறிப்பினள் போலக் கானல் வரி பாடத் தொடங்கினாள்.

**'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப**
**மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்**
**கருங்க யற்கண் விழித்தொல்கி**
**நடந்தாய் வாழி காவேரி !**
**கருங்க யற்கண் விழித்தொல்கி**
**நடந்த வெல்லாம் நின் கணவன்**
**திருந்து செங்கோல் வளையாமை**
**அறிந்தேன் வாழி காவேரி !'**

—சிலம்பு : கானல் வரி, 25

என்று மாதவி பாடுகிறாள். கோவலன் பெண்ணின் பெருந் தக்கதாகிய கற்பைப் பாராட்டிப் பேச, அக்கற்பு வளையாமை மன்னன் செங்கோல் வளையாமையின் திறத்தால்தான் என்று மாதவி பாடுகிறாள். கோவலன் பாட்டைவிட மாதவியின் பாடல் உருக்கம் நிறைந்ததாய் இருக்கிறது. மேலும், கோவலன் தன் பாட்டில் எடுத்தாண்ட சொற்களையே வைத்துப்பாடுகிறாள். கையுறை மறுப்பது போலப் பாடல் பாடிப் பின்னர்ப் பிறனொரு தலைவன்மேல் காதல் கொண்டிருப்பதாகத் தோன்றப் பாடுகிறாள் :

**'தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்**
**எம்மை நினையாது விட்டாரோ ! விட்டகல்க;**
**அம்மென் இணர அடும்புகாள் ! அன்னங்காள் !**
**நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால் !**

—சிலம்பு : கானல் வரி, 38

என்று அவள் பாடிய பாட்டு, உயர்நிலைப் பாட்டாய், சிலப்பதிகாரத்தின் மணியாய் விளக்கமுறுகிறது. இறுதியாக அவள் பாடி முடிக்கும் பாட்டு, கோவலன் அவளை விட்டுப் பிரிந்து போகக் காரணமாய் அமைகிறது.

**'அடையல் குருகே ! அடையலெங் கானல்;**
**அடையல் குருகே ! அடையலெங் கானல்;**
**உடைதிரை நீர்ச்சேர்ப்பற் குறுநோ யுரையாய் !**
**அடையல் குருகே அடையலெங் கானல்;**

—சிலம்பு : கானல் வரி : 46

என்ற பாடலில் கோவலன், மாதவி தன்னை விலக்கும் குறிப்பைக்காண்கிறான். மாதவியின் பாடல் இயற்கையை எல்லாம் கை கோத்துச் செல்லும்படி அமைகிறது :

**'பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று**
**மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்.'**

—சிலம்பு : கானல் வரி, 51 : 3-4

என்று கூறி மாதவி தன் கானல் வரியை முடிக்கிறாள். கோவலன் மாதவியை மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாளாய் எண்ணிப் பிரிகிறான்.

கோவலன் மனம் பண்பட்ட மனமன்று; மாதவியின் அகமனத்தை அவன் முற்றிலும் அறிய இயலவில்லை. மாறாக, மாதவியோ, 'புடத்தில்இட்ட தங்கமாய்' காட்சி தருகிறாள். ஆயின் மாதவி கோவலனைப் பற்றித் தவறாக எண்ணிய எண்ணம் சரிதானா என்று ஆய்ந்து பார்த்

திருக்கலாம்; புலவியால் இந்த முறையும் கோவலனை மாற்றலாம் என்று எண்ணினாள். ஆயின், புலவி முற்றி விட்டது. அஃது ஊடற்குரிய காலமன்று என்பதை அவள் ஓர்ந்திலள். எனவே, கதையின் திருப்பத்தைக் கானல் வரியிலே காண்கிறோம்.

மாதவி ஒரு கலைச்செல்வி. கலையால் வாழ்க்கையை வெல்ல இயலும் என்று நம்பினாள். கோவலனும் அவள் கலையில் ஒன்றி நிற்கும் நிலையை அடையவில்லை. கலையே இருவரையும் பிணித்தது. இறுதியில்இருவரையும் பிரித்ததுப் அதுவே. கோவலன் சீர் தூக்கும் இயல்பினையும் மாதவி பெருங்கற்புக்குரிய பொறுமைப் பண்பினையும் மறந்தனர். கலையின் செவ்வியை இருவரும் அறியத் தவறினர். முடிவு, வாழ்க்கைக்கு வெற்றியாயும் கலைக்குத் தோல்வியா யும் முடிந்தது. கண்ணகியின் பெருங்கற்பே இறுதியில் வென்றது என்பதையே கானல் வரி தெளிவாக விளக்கி நிற்கிறது.

# 8. தமிழ் இலக்கியங்களில் இதிகாசக் கருத்துகள்

பாரத நாடெங்கும் தொன்மைக் காலந்தொட்டுப் பரவி மக்கள் மனத்தில் நீங்காது நல்லதோர் இடத்தினைப் பெற்றுள்ள கதைகள், பாரதமும், இராமாயணமும் ஆகும். இக்கதைகள் இரண்டும் முதற்கண் கதைவடிவில் வழி வழியாக நீண்ட காலம் வழங்கி வந்து, பின்னரே நூல் வடிவு கொண்டிருத்தல் வேண்டும். இவ்விரு பெரு நூல்களும் 'இதிகாசங்கள்' என்று சிறப்பித்துக் கூறப்படுவனவாகும். இக் கதைகள் முதன்முதல் வடமொழியில் தோன்றிப் பின்னர் இந்தியமொழிகள் அனைத்திலும் உருக்கொண்டிருந்தல் வேண்டும். கவிஞர் பலர் பற்பல காலங்களில் இக்கதை முழுமையினையும் தனி நூலாகவும், நாடகமாகவும், அல்லது கதையின் ஒரு பகுதியினைத் தனி நூலாகவும் செய்துள்ளனர். சில கதைகள் சுருங்கியும், சில கதைகள் விரிவுபெற்றும், சில கதைகள் திரிந்தும் காணப் படுகின்றன. நாட்டு நடப்பு, சூழ்நிலை முதலிய காரணங்களால் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டன. இக்கதைகள் பல கிளைக்கதைகளுக்கும் இடம் தந்து, அக்கிளைக் கதைகள் எல்லாம் இன்று தனித்தனியான நூல்களாய் வாழும் சிறப்பும் பெற்றுள்ளன. வான்மீகி முனிவர்க்கு முன்னும் இராம காதை நாட்டில் வழங்கியுள்ள உண்மையினை வான்மீகி இராமாயணத்தின் முதற்சருக்கமாகிய நாரத வாக்கியங் கொண்டு அறியலாம். இப்பழம்பெருங் கதைகள் நாடோடிப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன; பல பழமொழிகளில் பயின்று வழங்குகின்றன. மேலும், இக்கதைகள் பாரத நாட்டில் மட்டுமன்றிக் கடல்

கடந்தும் கீழ்த்திசை நாடான கம்போடியா நாட்டிலும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே கோயில்களில் படிக்கப்படும் அளவிற்குப் பரவியிருந்தன என்பது தெரிய வருகிறது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் 'சம்பா' என்னும் இடத்தில் பாரதத்தை வடமொழியில் செய்த 'வியாச முனிவ'ருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருந்தது என்பது சாசனங்கள் வழி அறியக்கிடக்கின்றது. அதே போன்று ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சம்பாவில் வான்மீகி முனிவருக்குக் கோயில் ஏற்பட்டிருந்தது என்ற செய்தியும் அறியத் தக்கது. சுமித்திரா ஜாவா முதலிய தூரக்கிழக்கு நாடுகளில் இவ்விரு கதைகளும் அந்த நாளிலேயே நன்கு வழங்கின.

முதற்கண் பாரதக்கதையின் பழமையினையும், அக் கதை பழந்தமிழ் இலக்கியங்களில் எத்தகைய குறிப்பு களைக் கொண்டிலங்குகின்றது என்பதனையும் காண் போம் பாரதத்தினை நான்கு வேதங்களோடு ஒருங்கு வைத்து 'ஐந்தாம் வேதம்' என மக்கள் போற்றி வந்தமை யினைப் 'பாரதஃ பஞ்சமோ வேத:' என்ற பழந்தொடர் கொண்டு அறியலாம். மேலும், வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரப்பாடல்,

**'நீடாழி உலகத்து மறைநாலொ**
**டைந்தென்று நிலைநிற்கவே**
**வாடாத தவவாய்மை முனிராசன்**
**மாபார தம் சொன்னநாள்'**

என்று குறிப்பிடுவது கொண்டும் இவ்வுண்மையினை உணரலாம். மாபாரதம், மகாபாரதம் என்ற தொடர் களாலேயே பாரதம் வழங்கப்பெறுவது இதன் பழமை யினையும் பெருமையினையும் மேலும் மேலும் வலியுறுத்தும்.

பாரதக் கதைகள் பாரதமக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தனவாகும். விரிவான ஒரு செய்தியினை 'இது என்ன பாரதமாய் இருக்கிறதே!' எனக் கூறும் மரபு இன்றும் உண்டு. இன்றும் பாமர மக்கள் கொடையிற் சிறந்தவனைக் 'கர்ணன்' என்றும், நெறி தவறாத தரும சீலனைத் 'தருமன்' என்றும், பலம் மிக்கவனை 'வீமன்' என்றும், ஆற்றல் மிக்கவனை 'விசயன் என்றும், கலக மூட்டித் திரியும் ஒருவனைச் 'சகுனி' என்றும் கூறும் வழக்கும் உண்டு. தருமன், அருச்சுனன், சகாதேவன், பாஞ்சாலி, திரௌபதி முதலிய பெயர்களை இன்றும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு இட்டு வழங்குகின்றார்கள் இதனாலும் பாரதக் கதையில் எத்துணையளவு மக்கள் மனம் ஈடுபட்டிருந்தது என்பதனை நன்கு உணரலாம்.

அடுத்து, எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்னும் ஐந்து நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடிய புலவர், 'பாரதம் பாடியபெருந்தேவனார்' என்று வழங்கப் படுகிறார், இவர் பாரதம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாய் இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இடைக்காலத்தில் 'பாரத வெண்பா' என்ற நூல் வழங்கியிருக்கிறது. வில்லி பாரதத்திற்குப் பின்னர் இந்நூல்கள் வழக்கொழிந்திருத்தல் கூடும்.

பாதப்போரில் தமிழரசர்கள் பெருஞ்சோறு அளித்தார்கள் என்ற செய்தி புறநானூற்றின் பழைய பாடலொன்றால், அறியக்கிடக்கின்றது.

**'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!'**

—புறம் : 2 : 13-16

எனவும், புறம் 366-ஆம் பாடல் 'தருமபுத்திரனைக் கோதமனார் பாடியது' என்றும் காணப்படுகின்றன. அப் பாடலில் ஆசிரியர் கோதமனார், தருமபுத்திரனை 'அறவோன் மகனே! மறவர் செம்மலே!' என்று குறிப்பிட்டுள்ளார். இது பாண்டவர் ஐவருள் ஒருவனாகிய தருமபுத்திரனைக் குறித்ததாகுமோ என்பது ஆராய்தற்குரியது. பெரும்பாணாற்றுப்படையில், பாண்டவர் ஐவர், கௌரவர் நூற்றுவரைப் போர்க்களத்தில் வென்றமை போலப் பாட்டுடைத் தலைவனாம் இளந்திரையன் பகைவர்களைப் போர்க்களத்தே பொருது வென்ற செய்தி புலப்படுத்தப் படுகிறது.

**'ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்**
**பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஆராச் செருவின் ஐவர் போல'**

—பெரும்பாண். 415-417

என்பது காண்க.

அடுத்து, சிறுபாணாற்றுப்படையில் வில் விசயன் காண்டவ வனத்தை எரித்த செய்தியும், வீமன் வகுத்த மடைநூற்படியே ஓய்மானாட்டு நல்லியக் கோடனின் அரண்மனையில் பற்பல உணவுவகை ஆக்கப்பெற்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**'காவெரி யூட்டிய கவர்கணைத் தூணி**
**பூவிரி கச்சைப் புகழோன் தம்முன்**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்'**

—சிறுபாண். 238-241

என்பது காண்க.

பாரதக்கதை நிகழ்ச்சிகள் பல 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை'யில் எடுத்துக் காட்டுகளாய்க் கூறப்பட்டுள்ளன.

**வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற**
**முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்**
**ஐவரென்று உலகேத்தும் அரசர்கள் அகத்தரா**
**கைபுனை அரக்குஇல்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்**
**களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா**
**முளிகழை உயர்மலை முற்றிய முழங்கழல்**
**ஒள்ளுரு அரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்**
**உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான்போல்'**

—கலி. 25 : 11-18

என்னும் பகுதியில் அரக்கு இல்லில் ஐவரைக் குடிபுகச் செய்து துரியோதனன் இரவில் அதற்குத் தீயிட்ட செய்தியும், அப்பேராபத்திலிருந்து வீமன் தன் கிளைஞரைக் காப்பாற்றியதும்,

**'அஞ்சீர் அசையில் கூந்தற்கை நீட்டியான்**
**நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்**
**வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்.'**

—கலி, 101 : 18-20

என்ற பகுதியில், துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பற்றியதும், அவனது நெஞ்சத்தை வீமன் பிளந்ததும்,

**'மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்**
**குறுங்கறுத் திடுவான் போல்'**

—கலி, 2-3

என்ற பகுதியில், துரியோதனன் தொடையை வீமன் முரித்த செய்தியும்,

**'புரியுமேற் சென்ற நூற்றுவர் மடங்க**
**வரிபுனை வல்லில் ஐவர் அட்ட**
**பொருகளம் போலும்'**

—கலி, 104 : 57-5

என்ற பகுதியில் பாரதப் போர்க்களமும் உவமைகளாய் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

தமிழின் முதற்காப்பியமாம் நெஞ்சையள்ளும் சிலப்பதி காரத்தில் பாரதப்போர்—'கடல்வணன் தேர் ஊர் செரு' என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பாரதப் போர் பதினெட்டு நாள் நடந்த செய்தியும், அப்போரில் சேரமன்னன் பெருஞ் சோறு அளித்த சிறப்பும் குறிக்கப் பட்டுள்ளன. மேலும், கண்ணன் பாண்டவர்க்குத் தூது நடந்த அருட்செயலை அருட் கவிஞராம் இளங்கோ வடிகள்,

**'மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்**
**கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்**
**படர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே !**
**நாராய ணாவென்னா நாவென்ன நாவே !**

—சிலம்பு. ஆய்ச்சியர் குரவை : 37

என்று அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் பாரதக் கதை நிகழ்ச்சிகள் கிளத்தப்பட்டுள்ளன. பிற்கால நூலாம் கலிங்கத்துப்பரணியிலும், நிகண்டு நூலாம் திவாகரத்தி லும் பாரதக்கதை நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன பிற் கால உரையாசிரியர்கள் நச்சினார்க்கினியர் தமது தொல் காப்பியப் புறத்திணையியலுரையில் 'இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்' என்றும், யாப்பருங்கல விருத்தியுரைகாரர், 'தொன்மை' என்றும் வனப்பிற்கு உதாரணமாகப் பாரதமும் இராமாயணமும், முதலா

பாரதமும் இராமாயணமும், முதலா யினவும் கொள்க' என்றும் மேற்கோள் காட்டுகின்றமை, முற்கூறிய கருத்தினுக்கு அரண் செய்யும். தமிழ்ச் சாசனங்கள் கொண்டும் பாரதத்தின் பழைமையை அறியலாம். 'மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்ற 'இராசசிங்க பாண்டியன் மெய்க்கீர்த்தி' (சின்னமனூர்ச் செப்பேட்டுப் பகுதி) கொண்டும் பாரதக்கதைச் செய்தியின் தொன்மையை அறியலாம். இதுகாறும் கூறியவற்றால் பாரதக் கதைக் குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே வந்துள்ளன என்பதைக் கண்டோம். இனி இராமாயணக் கதை நந்தமிழ் இலக்கியங்களில் எத்தகைய இடம் பெற்றுள்ளது எனக் காண்போம்.

'பாரதஞ்சீ ராமகா தை' என்ற திருவள்ளுவமாலைத் தொடர்கண்டு, சீராமகாதை' எனவும் முன்னோர் இராமாயணத்தை வழங்கினர் என்பது போதரும்.

முதற்கண் அகநானூற்றில் வரும் ஒரு குறிப்பினைக் காண்போம்: தனுஷ்கோடிக் கடற்கரையில் ஆலமரமொன்றின் கீழ் இராமபிரான் தங்கி போர்குறித்து வானரவீரர்களுடன் ஆலோசனை செய்தார் என்றும், அதுபொழுது அவ்வாலமரத்தில் வாழ்ந்த புள்ளினங்களின் ஒலி அதிகமாகி, ஒருவர் கூறும் செய்தி மற்றொருவருக்குக் கேளாமற் போக, அவ்விடையூறு களைய இராமபிரான் தம் திருக்கைகள் காட்டி அப்பறவைகளின் ஒலியை யடக்கினார் என்றும், 'கடுவன் மள்ளனார்' என்ற புலவராற் பாடப்பட்டுள்ளது.

> **'வென்வேற் கவுரியர் தொன்முது கோடி**
> **முழங்கிரும் பௌவம் இரங்கு முன்துறை**
> **வெல்போர் இராமன் அருமறைக் கவித்த**
> **பல்வீழ் ஆலம் போல**
> **ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே.'**

—அகம் : 70. 13-17

மேலும், இப் பகுதி ஓர் உவமையாய் எடுத்தாளப் பட்டிருக்கிறது என்பதனையும் அறிதல் வேண்டும். 'தலைவன் வரைவு நீட்டித்தானாக, அதனால் தலைவி குறித்து ஊரில் அலர் எழ, அப்பொழுது தலைவன் தமரொடு வரையும் நோக்கத்தோடு தலைவி வீட்டிற்கு வர, அதனால் இதுவரை அலர் பேசிய வாய்கள் தாமாகவே மூடிக்கொண்டன' என உவமேயப் பகுதியின் விளக்கம் செல்கின்றது. இதனால் உவமைகூறி விளக்கும் அளவிற்கு இராமகாதைக் குறிப்புகள் நாட்டில் பரவியிருந்தன என்பது புலனாகின்றது. 'தெரிந்த பொருளால், விளக்கப் படுவதன்றோ உவமை?' மேலும் புறநானூற்றில் மற்றோர் உவமையிலும் இராமகாதைக் குறிப்பு இடம் பெற்றுள்ளது. வறியவரான புலவர் ஒருவர், தம் குடும்பத் துடன் சென்று சோழவேந்தன் ஒருவனைக் கண்டு, அவனாற் பெரிதும் விருந்தோம்பப்பட்டுத் திரும்பும் பொழுது அணிகலன் முதலிய பல பரிசுகள் அளிக்கப் பெற்றார். வள்ளல் வழங்கிய அணிகலன்களை முறை தெரியாமல் எளிய புலவரின் குடும்பத்தினர் தம் உறுப்பு களில் மாற்றி மாற்றி அணிந்தனர். அதுபொழுது அரசவை யில் பெருநகை விளைந்தது. இக்காட்சியினை விளக்க அப்புலவர் கையாண்ட உவமை இராமசரித நிகழ்ச்சிகளு ளொன்றாகும். இராவணனால் நிலத்தொடு பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்ட சீதாபிராட்டி இடைவழியில் போட்ட அணிகளை வானரர்கள் கண்டெடுத்து, அவற்றை அணியும் முறை அறியாமல் தடுமாறி, விரலணிகளைச் செவியிலும், செவியணிகளை விரலிலும், அரையணி களைக் கழுத்திலும், கழுத்தணிகளை அரையிலுமாக மாற்றியணிந்தனர் என்று இராமகாதைச் செய்தியினை உவமைப்படுத்தியிருப்பது காணலாம். வேறு நூல்களில் காணப்படாத இவ்வரிய செய்தியினைத் தன்னகத்தே கொண்டிருக்கும் புறநானூற்றுப் பாடல் வருமாறு :

'எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த வல்ல; மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குந்ரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ அருநகை யினிதுபெற் றிகுமே.''

—புறநானூறு, 378 : 9-22

அடுத்து, கலித்தொகையில் இராவணன் கைலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்று துயருழநத செய்தி குறிக்கப்படுகிறது :

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்புலி தடக்கையின் கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல'

—கலி, 38 : 1-5

என்று வந்துள்ளது காண்க. பரிபாடலில்,

'இந்திரன் பூசை, இவள்அக லிகை; இவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு,
ஒன்றிய படியிதுஎன் றுரை செய் வோரும்'

—பரிபாடல், 19 : 50-52

என்று அகலிகை சாபம் பற்றிய சித்திரம், திருப்பரங் குன்றத்துச் சித்திர மண்டபத்தில் அழகுற வரையப்பட் டிருந்தது என்பது கூறப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியில் இராவணனைப் பற்றிய செய்தியொன்று வந்துள்ளது,

**'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்**
**தொன்முது கடவுள் பின்னர் மேய'**

—மதுரைக் காஞ்சி : 40-41

என்னும் அடிகளில் தென்னவன் என்றது இராவணனை; கடவுள் என்றது அகத்திய முனிவரை. இம்முனிவர் பொதியின்கணிலிருந்து 'இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவன் உள்ளிட்ட இராக்கதர்களை ஆண்டு இயங்காமை விலக்கினார்' என்பது பழைய வரலாறு.

சிலப்பதிகாரத்தில் 'கவுந்தியடிகள்' கோவலனைத் தேற்றுமுகத்தான் 'இராமன் விதி வயத்தால் தந்தை கட்டளைப்படி மனைவியுடன் காடு சென்று கடுந்துயர் உழந்தான்,' என்று குறிப்பிட்டுள்ளார் :

**'தாதை ஏவலின் மாதுடன் போகிக்**
**காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்**
**வேத முதல்வற் பயந்தோன் என்பது**
**நீயறிந் திலையோ? நெடுமொழி அன்றோ?**

—சிலம்பு, ஊர் காண்காதை : 46-49

இப்பகுதியில், 'நெடுமொழி' என்ற சொல் சற்று ஊன்றி உணரத்தக்கது. ஆண்டாண்டு காலமாக அடிபட்டுப் பயின்று வழங்கும் கதை இராமனின் திருக்கதை என்பது இதனால் நன்கு தெரியவருகின்றது, மேலும், இளங்கோ வடிகள், 'புறஞ்சேரியிறுத்த காதை'யில்,

**'அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த**
**அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்**
**பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்'**

என்று கூறியிருப்பதினின்றும், இராமன் காடு சென்ற போது அயோத்தி மக்கள் எவவாறு துன்புற்றார்களோ அவ்வாறே கோவலன் பிரிவால் புகார் நகர மக்களும் துன்புற்றார்கள் என்பது பெறப்படுகின்றது.

மேலும், இராம காதையின் முழு வரலாறும்—அதாவது இராமன் தம்பி இலக்குவனுடன் காடு சென்று இலங்கையை அழித்த செய்தி—ஆய்ச்சியர் குரவையில் கூறப்படுகிறது.

**'மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்**
**தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து**
**சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கைக்கட்டழித்த**
**சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே!**
**திருமால் சீர்கேளாத செவியென்ன செவியே!'**

—சிலம்பு, ஆய்ச்சியர் குரவை : 35

இலக்குவன் தன் தமையன் இராமனுக்கு ஆற்றிய அருந்தொண்டினைப் 'பெருங்கதை' பின் வருமாறு குறிப்பிடுகிறது :

**'இறைமீக் கூறிய இராமன் தம்பி**
**மறுவொடு பெயரிய மதலைக்கு இயைந்த**
**ஆனாப் பெரும்புகழ் யாமும் எய்தத்**
**தேனார் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி**
**வழிபா டாற்றுதும்'**

—பெருங்கதை, 11 : 24, 90-94

சிலப்பதிகாரமும் பெருங்கதையும் சமணர்கள் இயற்றிய நூல்களாய் இருப்பினும், இராம காதையினைக் குறிப்பிட்டுள்ளன. புத்த ஜாதகக் கதைகளுள் இராம சரிதம் ஒன்று காண்கிறது. எனவே, காலம், சமயம், இனம் முதலியன கடந்து இராமகாதை நாடெங்கும் பரவி யுள்ளமையறியலாம்.

யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியப் பொருளதி கார நாச்சினார்க்கினியர் உரை, 'புறத்திரட்டு' என்னும் தொகை நூலில் தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்களுட் சில, தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் சில, இராம காதைக் குறிப்புகளை கொண்டிலங்குகின்றன. ஆழ்வார் கள் இராம காதையின் பல கூறுகளையும் பக்திச் சுவையில் தோய்ந்து பாடியுள்ளனர். 'இராமாயண வெண்பா' என்னும் வெண்பா யாப்பில் அமைந்த நூலும் இடைக் காலத்தில் வழக்கில் இருந்துள்ளது.

இதுகாறும் கூறியவற்றால், பாரத இராமாயணக் கதைகள் பண்டு தொட்டே மக்களிடையே நன்கு வழங்கி வருகின்றன என்பதும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் இவ்விரு இதிகாசங்களைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு உவமையாகவும், செய்தியாகவும் வந்துள்ளன என்பதும் நன்கு விளக்கமுறுகின்றன.

# 9. இராமாயணப் போர்க்களங்கள்

மலர்தலையுலகில் எத்தனையோ உயிரினங்கள் தோன்றித் தோன்றி வளர்ந்து இருந்து மறைந்துவிட்டன. வரலாற்றுத் தொடக்கக் கால மனிதன் வாழ்விற்கும் இன்றைய நாகரிக உலகின் மனித வாழ்விற்கும் இடையில் எத்தனையோ வேற்றுமைகள் காணக் கிடக்கின்றன. ஆயினும், மனிதனின் அடிப்படை உணர்வுகள் மாற வில்லை; மாறவும் மாட்டா மனிதன் புறவாழ்வு எத்தனையோ மாற்றங்களைக் காண்கின்றது. ஆயினும், அகவாழ்வில் பொங்கியெழும் உணர்ச்சிகள் முழுமை பெற்று நிற்கக் காணலாம். மனித மனத்தைப் பாதிக்கும் இன்ப துன்ப உணர்வுகள்; பசி, தாகம், வேட்கை போன்ற மனித வாழ்வின் அடிப்படை. உணர்வுகள், இன்றுவரை எத்தகைய மாற்றமும் இல்லாமலேயே இயங்கி வருதல் கண்கூடு மனித இன வரலாற்றில் படிப்படியான வளர்ச்சி யுண்டு; எனவே சூழல்கள் மாற மாற, வாழ்விலும் பல மாற்றங்கள் தோன்றுதல் இயற்கை. ஆயினும், அக வாழ்வின் பற்றுக்கோடாய் இயங்கும் காதல், புறவாழ்வின் சீர்மையாய் விளங்கும் போர் போன்ற உணர்ச்சிகளை நோக்க, மனிதன் மனத்தில் ஆழ வேரூன்றி நிலைத்து, வாழையடி வாழையாக இலங்கி வருவதனைக் காணலாம்.

இது குறித்தே பழந்தமிழர், தம் வாழ்வினை அகம் புறம் என இரு கூறாகப் பகுத்தனர். காதல் நெஞ்சங்கள் வாழும் அகவாழ்வு, வீட்டு வாழ்வாகவும், காதலற்ற பகைமை நெசஞ்சங்கள் இரண்டு பிணங்கி வேறுபட்டுப் போரிட்டு, உடற்றுவது நாட்டு அரசியலின் இன்றிய மையாத கூறாகிய போர் வாழ்வாகவும் அமைந்துவிட்டன. வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இருவேறு இயற்கை

யினைக் காணலாம். பகலும் இரவும், இன்பமும் துன்பமும் மேடும் பள்ளமும், வளமையும் வறுமையும், காதலும் போரும் இத்தகைய இருமுனைக் காட்சிகளேயாகும்.

பழந்தமிழர்கள் காதல் நெஞ்சம் வாய்க்கப் பெற்ற வர்கள்; அதே நேரத்தில் வீரப்பண்பும் நிறைந்தவர்கள். பழந்தமிழ்க் குடியின் பெருமையினைப் பேச வந்த புறப் பொருள் வெண்பா மாலை ஆசிரியர் ஐயனாரிதனார். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி' என்று தமிழர்தம் பண்டைப் பெரு வீரத்தினைப் பாராட்டிக் கூறினார். மற்றவனிடத்திலே மாறுபாடு கண்டவிடத்துப் பகைமை தோன்றுகின்றது; அவனை அடக்கி ஒடுக்க வேண்டும் என்று அடங்காச் சீற்றம் எழுகின்றது; அரசர்கள் இடையில் தாம் ஆளும் இடம் சிறிது என்கின்ற காரணத்தால், ஊக்கம் சுரந்து உள்ளத்தை உந்தித் தள்ளுகின்றது. எனவே, மாற்றானை வெல்ல வேண்டும் என்று அரசன் மண்கொளப் படை நடத்திச் செல்கின்றான். அந்நாளைய மனிதன் புகழ் பெறு வதற்குரிய வழியாக வீரத்தினையும் எண்ணினான்; ஏன்? வீரத்தை விளைத்துப் பெறும் புகழ் பெரிதென்றும்கூடக் கருதினான். புகழெனின் உயிரும் கொடுத்தான். நில்லாமை நிறைந்த உலகத்தில் தன் பெயர் நிலைக்க வேண்டுமென்று எண்ணிய அவன், தன் புகழை நிறுவிவிட்டுச் சென்றான். இதனையே 'இடைக்குன்றூர் கிழார்' என்னும் புலவர்.

**'ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை'**

—புறநானூறு, 76 : 1-2

என்று குடுப்பிட்டுப் போந்தார்.

இதனால் உலக வரலாறு போர்க்களங்கள் பல வற்றினைச் சந்தித்துள்ளது; சந்தித்தும் வருகின்றது. போரே இல்லாத சமுதாயம், உலகப்பேரரசு ஏற்பட வேண்டும் என்று பலரும் கூறி வருகின்ற இந்நாளிலேயே போரும் புகைச்சலும் நிலவுகின்றனவென்றால், வரலாற்றின் தொடக்ககால மனிதன் எவ்வாறு வாழ்ந்திருப்பான் என்பதனைக் கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு இலக்கியம் கண்ட போர்க்களங்களில் பழமையான போர்க்களம், இராம இராவண யுத்தம் நிகழ்ந்த இலங்கைப் போர்க்களமாகும். இப்போர் நிகழ்ந்ததற்குரிய அடிப்படைக் காரணத்தைப் 'பிறன்மனை விழைவோர் கிளையொடும் கெடுப' என்ற பாவிகப் பண்பு கொண்டு அறியலாம். மேலும், வள்ளுவர் பெருமான்,

> **'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
> **அறனொன்றோ? ஆன்ற ஒழுக்கு'**
>
> —திருக்குறள் : 148

என்று பிறர் மனையை மனத்தாலும் எண்ணிப் பாராத அரும்பெரும்பண்பினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். ஆற்றல் சான்றவனாயிருப்பினும், இராவணன் பிறன் மனை நயத்தலாகிய பேதைமைப்பண்பில் தலைப்பட்ட காரணத்தால், தன் சுற்றமெல்லாம் கெடப் போர்க்களத்தே பட்டொழிந்தான்!

இராம காதை பாரதநாடு அறிந்த பழம்பெருங் கதை யாகும். நாடெங்கும் வாழும் மக்கள் தத்தம் மக்களுக்கு இன்றும் இடும் பெயர்களாகும். வடமொழியின் ஆதி காவியமாகப் போற்றப்படுவது வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணமாகும். இராமாயணக் கதைக் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கக் காணலாம். அக

நானூறு, புறநானூறு போன்ற பண்டைய நூல்களில் இராமாயணச் கதை நிகழ்ச்சிகள் உவமை வாயிலாக விளக்கப் பெற்றிருத்தல் கண்டு, இராம காதை பழந்தமிழ் மக்கள் நன்கறிந்து போற்றிய கதையே என்ற முடிவிற்கு வரலாம். மேலும் சிலப்பதிக்காரத்திலும் இராம காதைக் குறிப்பு வரக் காணலாம். பிற்கால இலக்கியங்களிலும் உரைகளிலும் வரும் குறிப்புகள் மிகப் பலவாகும். இராமாயணத்தைப் பெருங்காப்பியமாகத் தமிழில் தந்த கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு முன்னரும் தமிழ் இராமாயண நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. ஆயினும், கம்பன் கட்டிய கலைக்கோயில் கால வெள்ளத்தையும் கடந்து, கற்பவர் உள்ளங்களையெல்லாம் அள்ளிக் கொள்ளை கொண்டு வாழும் கவினுறு காப்பியமாய்த் திகழ்கின்றது.

ஈண்டு இராமாயணப் போர்க்களங்களையே ஒருசிறிது காணலாம். முதற்கண், காகுத்த மரபிலே வந்த இராமன் விளைத்த கன்னிப்போரினைக் காண்போம்.

விசுவாமித்திரர் தவயோகச் சிரேட்டராய்க் காட்டிலே தங்கிக் கடுந்தவம் இயற்றும் துறவறநெறி நின்ற தூய்மையாளர். ஆனால், அவர் மேற்கொள்ளும் தவமுயற்சிக்கு இடையூறு நேரிட்டது. அவ்விடையூறு 'தாடகை' என்னும் பொல்லா அரக்கியால் வந்துற்றது. கொடிய குணமும் கோர உருவமும் பேராற்றலும் படைத்த அவள், வேத வேள்வியை நிந்தனை செய்துழன்றவள். எனவே அவ் விடையூற்றினின்றும் தவம் தப்பிப் பிழைக்கத் தசரதன் அவையில் அவன் தன் மூத்த கான்முளையாம் இராமனை நயந்து கேட்கின்றார் முனிவர். முதலில் கலங்கிய மன்னன், இறுதியில் மனம் ஒப்பி, இராமனையும் இலக்குவனையும் முனிவர் பின்னே அனுப்புகின்றான். காட்டிலே பாலை வழி குறுக்கிடுகின்றது. நல்ல நிலம் பாழ்பட்டுப் பாலையானதற்குக் காரணம் தாடகையே என முனிவர்வழிக் கேட்ட இராமன், "அவள் எங்கு உறைகின்றாள்?" எனக்

கேட்டான். அவள் உறையும் மலையை விசுவாமித்திரர் இராமனுக்குக் காட்டிய அளவில் தாடகை பேராரவாரத், துடன் தோன்றி, அவர்களை நோக்கி நகைத்து வீரவுரை பகர்ந்தாள். 'வேல்கொண்டு எறிவேன்' எனச் சினந்து கூறினாள். காடுறை வாழ்க்கையளாய் மன்னுயிர் அனைத்தையும் வயிற்றில் இடும் ஆயிரம் யானைப் பலக்கொண்ட தாடகை பெண் என்பதனால், அண்ணல் இராமன் கணை தொடுத்து அதன்வழித் தன் வீரத்திற்கு இழுக்குத் தேடிக் கொள்ள விரும்பவில்லை இராமனின் இக் கருத்தினை உணர்ந்த முனிவர், 'தீமையெலாம் புரிபவள் இவள்; மன்னும் பலஉயிர்களை மாய்ப்பவள் இவள்; இவளைப் பெண் எனல் பெருந்தீது! குற்றமற்ற அறத்தின் வழி நின்று பார்ப்பினும், இவளைக் கொல்லாதிருப்பது அறமன்று; கொல்லுவதே அறம்'' என்று பொருந்தக் கூறினார். இராமனும் விசுவாமித்திர முனிவரின் உரையை வேதம் எனக் கொண்டு, தாடகைமேல் அம்பு செலுத்தினான். அவ்வம்பு அவள் நெஞ்சில் ஊடுருவிச் சென்று, அவளை மாய்த்து மண்ணில் வீழ்த்தியது: 'புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளுரை எனப் புறம் போயிற்று' எனக் கம்பன் உவமை காட்டுகின்றான். அப்பாடலைக் காண்போம்:

**'சொல்லொக்கும் கடிய வேகக் சுடுசரம் கரியசெம்மல்**
**அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுத்தலும் வயிரக்குன்றக்**
**கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்**
**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே'**

—கம்பன், பால, தாடகை : 49

இதுவே 'காசுலாம் கனகப் பைம்பூண் காகுத்தன்' உடற்றிய கன்னிப் போராகும்.

அதன்பின்னர் இராமன் கண்ட போர், பரசுராமனோடு உடற்றியதாகும். மிதிலைப் பொன்னாம் சீதையை மணந்து தசரதனோடு அயோத்தி திரும்பும் இராமனோடு

இருபத்தொரு முறை க்ஷத்திரிய குலத்து வேந்தர்களை யெல்லாம் தன் மழுவாளால் எறிந்த பரசுராமன், ஊழிக் காலத்து இறுதியில் தோன்றும் உமை கேள்வனாம் சிவன் எனத் தோன்றினான். பரசுராமனை அறியாத இராமன் அவனை 'யார்?' என வினவினான். அதற்கு மறுமொழி யாகப் பரசுராமன், 'ஒடிந்த சிவதனுசினை ஒடித்த உன் தோள்வலி அறிய இங்கு வந்தேன்!' எனச் சினத்துடன் மொழிந்தான். அதுபோது தசரதன் பரசுராமனை இரந்து 'போரைத் தவிர்க' எனக்கேட்டும், இணங்காத பரசு ராமன், தன் கையில் உள்ள வில், 'நின்று உலகை நேமி யால் அளந்த நெடிய மாலின் வில்'லென்று பெருமை சாற்றி இராமனால் கூடுமானால் அவ்வில்லை வளைக்கப் பணித்தான். உடனே இராமன் வில்லை வாங்கி வளைத்து, 'இவ்வில்லிற்கு இலக்கு யாது?' எனக் கேட்டான். பரசு ராமன், 'இராமனைப் புகழ்ந்து, தான் அதுகாறும் அரிதின் முயன்று தேடிப்பெற்ற வரத்தை இலக்காக்கி, அவனை வாழ்த்தி, விடைபெற்றான். இதனைக் கம்பநாடன்,

**'எய்த அம்பு இடைபழுது எய்திடாமல் என்**
**செய்தவம் யாவையும் சிதைக்க வேயெனக்**
**கையவண் நெகிழ்தலும் கணையும் சென்றவன்**
**மையறு தவமெலாம் வாரிமீண்டதே.'**

—கம்ப : பால, பரசுராம, 39

எனக் கூறியுள்ளான். இது இராமன் கண்ட இரண்டாவது போர்க்களமாகும்.

மாய மானாய் வந்த மாரீசனை வதைத்தது, களங்கண்டு சிறந்த நிகழ்ச்சியன்று. எனவே அதனை விடுத்து, வாலி யின் வதையினைக் காண்போம்; இலங்கை வேந்தனாம் இராவணனையும் தன் வாசலிலே கட்டி அவன் வலி யடக்கிய பேராற்றல் வாய்ந்தவன் வாலி; சிறந்த சிவ

பக்தன்; ஆயினும் வாழ்வில் ஒரு குறை செய்தான். அதுவே தன் தம்பியாம் சுக்கிரீவன் மனைவியை நயந்து தன்னிடத்தில் வைத்துக் கொண்டது, அனுமன் துணையால் இராமனின் உதவி பெற்ற சுக்கிரீவன் வாலியின் இருப்பிடத்தைத் தேடிச்சென்று கண்டு, இராமன் உரைப்படி ஆரவாரித்து வாலியைப் போருக்கு அழைக்கிறான். தம்பியின் போர் முழக்கம் கேட்ட தமையன் வாலி, போருக்கு ஆய்த்தமாகிறான். அவன் அன்பு மனைவி தாரை, 'இப்பொழுது இராமன் என்னும் நெடுந்துணை உடைமையால் தம்பி போர் முழக்கம் அஞ்சாது செய்கிறான்' என்று கூறி, இராமனின் நற்பண்புகளையும், பேராற்றலையும் எடுத்து மொழியவும், வாலி தடுத்து மொழிந்து, தன் தம்பியோடு, தான் நடத்தும் போரில் இராமன் தன் வில்லெடுத்துக் கணை தொடுக்க மாட்டான் எனக் கூறிக் குன்றின் புறத்துவந்து இருந்தான். அது பொழுது வாலியும் சுக்கிரீவனும் பெரும்போர் விளைக்க, விரைவில் சுக்கிரீவன் சோர்ந்து இராமனை அடைகிறான். 'கொடிப்பூ அணிந்து செல்க' என இராமன் சுக்கிரீவனைப் பணிக்கிறான். அவ்வாறே அவன் சென்று மலைய, அவனைப் பற்றிப் போரில் மோதும் பொருட்டு வாலி சுக்கிரீவனை மேலே தூக்கவும், வாலிமேல் இராமன் அம்பு விட்டான். அவ்வம்பு 'கனிந்த கதலிப் பழத்தினுள் செல்லும் ஊசியென' உட்சென்று ஐந்து பூதங்களையும் வெற்றி கொள்ளும் வாலியின் மார்பைத் துளைத்து ஊடுருவியது. மேருமலை அடியற்று வீழ்ந்தது போன்று இணையற்ற வீரனாம் வாலி மண்மேல் சாய்ந்து, சுக்கிரீவனைப் பற்றிய பிடியை விடுத்து, அம்பினைப் பற்றியெடுத்து, அதில் இராமனது திருப்பெயர் இலங்கக் கண்டு, இராமனை இகழ்ந்தான். அதுபோது இராமன் அவன் எதிர் தோன்றுதலும், அவனை நோக்கி, 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தசரதன் எனும் தூயவன் மைந்தனா? பரதன் முன் தோன்றலா?'' என்று கேட்டான் 'சீதையைப் பிரிந்ததனால் அறிவு குலைந்து நின்று விட்டனையோ?' என்று நகையுற நவின்றான்:

**'கோவியல் தருமம் உங்கள் குலத்துஉதித் தோருக்கெல்லாம்**
**ஓவியத்துஎழுதவொண்ணாஉருவத்தாய்! உடைமைஅன்றோ?**
**ஆவியைச்சனகன்பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த**
**தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனைபோலும் செய்கை!**

—கம்ப, கிட்கி, வாலி : 78

'இருவரும் பொரும்பொழுது மறைய நின்று என் மேல் அம்பெய்தது தவறு; தருமமும் அன்று' என்றும், 'சூரிய மரபிற்குக் களங்கம் விளைத்து விட்டாயே' என்றும் வாலி கூறி, 'வாலியைப் படுத்தாய் அல்லை; மன் அறவேலியைப் பிரித்தாய்!' என்று இறுதியில் உரைத்தான். இராமன் தன் செயல் சரியென்று தக்க ஏதுக்களை எடுத்துக் காட்டி மொழிந்தான். 'தம்பி மனைவியைத் தகாத வழியில் அடைந்தது தருமச் செய்கையன்று,' என்பதனை,

**'தருமம் அன்றிது எனும்தகைத் தன்மையும்**
**இருமையும் தெரிந்து எண்ணலை, எண்ணினால்**
**அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்**
**பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ?**

—கம்ப, கிட்கி, வாலி : 187

என்று குறிப்பிட்டான். இதனைக் கேட்ட வாலி, தான் செய்த செல்கை தன் மரபிற்கு ஏற்றதே என எடுத்துக் காட்டினான் வாலியின் கூற்றை இராமன் மீட்டும், 'மறைந்து நின்று அம்பு எய்தது ஏன்?' எனக்கேட்க, இளையவனாம் இலக்குவன் 'முன்பு நின் தம்பி சுக்கிரீவன் இராமனை அடைக்கலம் புக, அதனை இராமன் ஏற்று வாலியை மடிவிப்பன்!' என்று உறுதி கூறினான். 'இராமன் உன் எதிரில் வந்தால், நீ அன்பிற்குருகி இராமனைச் சரணடைந்தால், சுக்ரீவனுக்கு இராமன் தந்த சத்தியம் தவறிப் போய்விடுமே என்றுதான் இராமன் மறைந்திருந்து உன்மேல் அம்பு எய்தான்' என்றான் இது

கேட்ட வாலி, மன அமைதி பெற்று, 'அங்கதன்' என்னும் தன் மகனை இராமனுக்கு அடைக்கலமாக்கி விண்ணுல கெய்தினான்.

இராமாயணத்தில் அமையும் முக்கியமான போர்க் களம் இலங்கைப் போர்க்களமேயாகும். எழுபது வெள்ளம் சேனையோடு இராமன் இலங்கைமேற் படையெடுத்தான். இது கேட்ட இராவணன் போரை விரும்பி யெழுகின் றான். 'வீடணன்' இராமனிடம் அடைக்கலம் புகு கின்றான். இராமன் வாலி மைந்தன் அங்கதனை இராவணன்பால் தூது விடுக்கின்றான். அதனையும் இராவணன் பொருட்படுத்த வில்லை.

எனவே, போர் தொடங்கிற்று. வானர சேனையும் அரக்கர் சேனையும் மோதிக்கொண்டன; பெரும்போர் விளைத்தன வடக்கு வாயிலில் வானர சேனையைச் சிதைத்த 'வச்சிர முட்டி' எனும் அரக்கனைச் சுக்கிரீவன் சிதைத்தான். கிழக்கு வாயிலில் கும்பானுவும், தெற்கு வாயிலில் சுபாரிசனும், மேற்கு வாயிலில் துன்முகனும் இறந்தொழிந்தனர். நாற்றிசையிலும் நிகழ்ந்த போர்ச் செய்தி கேட்ட இராவணன் தானே தேர் ஏறிப் போர்க் களம் புகுகின்றான். தூதுவர் மூலம் இச்செய்தியினை அறிந்த இராமன் மகிழ்ந்து, போர்க்கோலம் பூண்டு, அவன் எதிர் சென்றான். இராவணனின் வில்நாண் ஒலி கேட்டு வானரப்படைகள் பயந்து ஓடின. முதலில் சுக்கிரீவனும், அவனை அடுத்து அனுமனும் இலக்குவனும் போர்செய்து சிறிது தளர்கின்றனர். அது போது அனுமன் வேண்டுகோட்படி, அனுமன் தோளில் ஏறி இராமன் இராவணனோடு வெம்போர் விளைத்தான். இராமன் விட்ட வாளியால் பலர் மடிகின்றனர் இராமன் விட்ட அம்பால் இராவணன் மணிமுடி இழந்து நாணி நிற் கின்றான். அதுபோது அறத்தை நிலை நிறுத்த வந்த அண்ணல் அரக்கர் கோமானை நோக்கிப் பின்வரும் உரை பகர்ந்தான் :

'உன் தீமை இன்று அழிந்தது; அமரர்களுக்கும் அறத்தின் வழியே அல்லாமல் மறத்தின் வழியே அரும்போரில் வெற்றி பெறுதல் என்பது இயலாத செயலாகும். ஆதலின், சிறைகொண்ட சீதையை விடுவித்து, வீடணனுக்கு முடி சூட்டி வாழ்க; அன்றேல் ஆற்றல் முழுதும் காட்டி வீரப் போர் புரிக!' என்று கூறி 'இன்று போய் நாளை வா' என்று இனிமையாக எடுத்து மொழிந்தான்.

**'ஆளையாவுனக் கமைந்தன மாருதம்; அறைந்த**
**பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு**
**நாளைவாவென நல்கினன் நாகிளங் கமுகின்**
**வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்'**

—கம்ப, யுத்த, போர்புரி படலம் : 255

இதனால், முதலில் இராமன் அங்கதனைத் தூது விட்டும் நேரில் அறிவுரை கூறியும் போரினைத் தவிர்க்கவே முற்பட்டான் என்பதும், அஃது இயலாமற்போனபோது போர் புரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதும் அறிந்து கொள்ளத் தக்கனவாகும்.

இவ்வாறு முடியிழந்து, படைக்கலமிழந்து, இலங்கை நோக்கி மீளும் நிலையினைக் கம்பர் வாக்கே கவினுற விளக்குதல் காண்க. யானையோடு அஞ்சாது மோதும் மார்பினையும், உமை கேள்வன் உறையும் கைலை மலையினையே எடுக்கும் தோளினையும், நாரத முனிவற்கேற்ப இன்னிசை முழக்கும் இனிய நாவினையும், பத்துத் தலைகளிலும் பாங்குறத் தரித்த முடியினையும், சிவன் தந்த வெற்றி வாளினையும், தன்னிடத்தே இதுகாறும் நிலைத்திருந்த வீரத்தினையும் போர்க்களத்தே போட்டு விட்டு, இராவணன் வெறுங்கையனாய் இலங்கைக்குத் திரும்பிச் சென்றனன். அவ்வாறு திரும்பிச் சென்றவன், எட்டுத் திக்குகளில் எதையும் நோக்கவில்லை; தன்

கோநகரைக் கண்கொண்டு பார்க்கவில்லை; தன் அன்பர்களை நோக்கவில்லை; அரண்மனைப் பெண்கள் தன்னைத் தனித்தனியே நோக்க, தான் அவர்களுள் ஒருத்தியையும் நோக்காமல், மண்மகள் எனும் ஒரு பெண்ணையே தலை கவிழ்ந்து நோக்கினான் என்பதே கம்பசித்திரமாகும் :

**வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்**
**நாரத முனிவற் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்**
**தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்**
**வீரமும் களத்தே போட்டு வெங்கையோ டிலங்கை புக்கான்.'**

**'மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த**
**காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்**
**தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தானப்**
**பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.'**

—கம்ப, யுத்த, கும்பகருணன் : *1,3*

இராவணன் தன்னிலையுணர்ந்து தலைகுனிந்து இராமன் தன் நிலை நினைந்து, அதற்கெல்லாம் அவ்வளவாக வருந்தாமல், 'சீதை தன்னை நகுவாளே' என்று மட்டும் நாணத்தால் பெரிதும் மெலிந்தான் :

**'வான்நகும் மண்ணும் எல்லாம் நகும்மணி வயிரத் தோளான்**
**'நான்நகு பகைவர் எல்லாம் நகுவர்' என்று அதற்கு நாணான்**
**வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த**
**'சானகி நகுவள்' என்றே நாணத்தால் சாம்பு கின்றான்.'**

—கம்ப, யுத்த, கும்பகருணன் : *11*

இந்நிலையில் 'மகோதரன்' வந்து இராவணனுக்குத் தேறுதல் மொழிகள் கூற, இராவணன் தன் வீரர்களை அனுப்பிக் கும்பகருணனை எழுப்பிவரப் பணிக்கின்றான். உறக்கத்தினின்றும் விழித்துவந்த கும்பகருணன், இராவண

னுக்கு எடுத்துக்காட்டிய அறவுரைகள் கணக்கில; அவை பயன்படவில்லை. எனவே, அவன் போர்க்களம் புகுகின் றான்; வீடணன் தன்னை இராமன் பக்கல் அழைத்ததை மறுத்து, இராவணனுக்காக உயிர்ஈதலே தனக்கு ஏற்றது என்று கூறி, அவனை மட்டும் இராமன்பால் சேரச் சென்னான்,

**''நீர்க்கோல வாழ்வை நச்சி**
**நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்**
**போர்க்கோலம் செய்து விட்டாற்கு**
**உயிர்கொடாது அங்குப் போகேன்''**

எனத் தன் நன்றிக் கடன்பட்ட நல்வாழ்வினை எடுத்து நயமுற நவின்றான்.

பின்னர்ப் போர்க்களம் சென்று, அங்கதன், அனுமன், இலக்குவன் முதலியவர்களோடு போரிட்டான். தன் தங்கை மூக்கினை அறுத்தவன் இலக்குவனே என்பதை அறிந்து, அடங்காச் சினங்கொண்டு, 'அவள் கூந்தலைத் தொட்டு ஈர்த்த கையை அறுத்து மண்ணிடைக் கிடத் துவன்' என்றான். அதற்கு இலக்குவன் 'மறுமொழி வில்லினால் சொல்வேனேயல்லால் சொல்லினால் சொல்லக் கற்கவில்லை யான்' என்றான்.

**.........மாற்றங்கள் நும்பால்,**
**வில்லினால் சொல்லின் அல்லது வெந்திறல் வெள்கச்**
**சொல்லி னால்சொலக் கற்றிலம் யாம்எனச் சொன்னான்'**

—கம்ப, யுத்த, கும்ப : 235

இறுதியில் இராமனோடு போரிட்டு, இராமனின் அம் பால் கும்பகருணன் தலை துணிந்துபோய்க் கடலில் கலந்து மூழ்கியது.

அடுத்து, இராவணன் மகன் இந்திரசித்துவிற்கும் இலக்குவனுக்கும் கடும்போர் விளைகிறது. பலரைக்

கொன்றுகுவித்து இந்திரசித்து, நாகபாசத்தால் இலக்குவன் முதலியோரைக் கட்டிவிட்டு, இலங்கை செல்கிறான், இராமன் ஏவல்வழிச் செயற்பட்ட கருடனால் நாகபாசம் நீங்குகிறது. வானரர் முதலியோர் மட்டும் உயிர்பெற்று எழுகின்றனர்; ஆரவாரிக்கின்றனர். ஆராவாரத்தைக் கேட்ட இராவனன், அன்று இரவு உறங்கவில்லை. அதேபோன்று தருமமூர்த்தியாம் இராமனை எண்ணி ஏங்கும் சீதையும் உறங்கவில்லை.

நிகும்பலை யாகம் செய்ய முயன்று இயலாமற்போன இந்திரசித்து, மீட்டும்படைகொண்டு போர்க்களம் புகுகின்றான். போவதற்குமுன் தன் தந்தை இராவணனிடம், "சீதையை விட்டுவிட்டால் தீமை தொலையும்; இதை நான் கொண்ட அச்சம் காரணமாக உரைக்கவில்லை; உன்பாற் கொண்ட அன்பு காரணமாக உரைத்தேன்" என்றான். அது கேட்ட இராவணன், "மற்றையவர் வீரத்தையும் ஆற்றலையும் நம்பி நான் சீதையைக் கொணரவில்லை; என்னையே நோக்கி யான் இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்; இராமன் பெயர் உள்ளளவும் என் பெயரும் நிலைக்கும், இன்று உள்ளவர் நாளை மாய்வர்; புகழுக்கு இறுதியில்லை," என்றான்.

இதுகேட்ட இந்திரசித்து, போர்களம் புகுந்தான் இலக்குவனோடு வீரப்போர் ஆற்றி, இறுதியில் அவன் பிறைமுக அம்பால் தன் தலை துணிக்கப்பட்டு மாண்டான், தன் தனயனது மரணச்செய்தி கேட்ட இராவணன், பலவாறு புலம்பி, வெட்டுண்ட அவன் கையைக் கண்டு விம்மினான்; அவன் உடலத்தை இலங்கைக்கு எடுத்துச் சென்று அதனைத் தைலத் தோணியில் இடுமாறு பணித்தான், பின்னர் ஒருவாறு தேறி, இராம இலக்குவரை முற்பட வெல்லுமாறு தன் சேனைத் தலைவர்களுக்குக் கட்டளைப் பிறப்பித்து, அவர்களுக்குத் துணையாக மூலபலச்சேனையையும் அனுப்பி வைத்தான், மூண்டது பெரும் போர்! மேகக்கூட்டங்களை ஒத்த யானைக் கூட்டங்கள்,

மலைகளைப்போன்ற மணி வயிரத் தேர்கள். ஆசை போன்று விரியும் குதிரையின் தொகுதி; ஆகம் எத்தனையோ அத்தனை படை அவதிகள் அங்கு அணி வகுத்து நின்றன. ஆனாலும், இராமனின் வில்லாற்றல் யாவரையும் வென்றது, அரக்கர்கள், தேர், கார், கடல், பார், உம்பர் போர் ஆக எங்கும் இராமனைக் கண்டனர், இறுதியில் பத்துக்கோடி வீரர் பட்டனர், எஞ்சியோர் தெய்வப்படைகளை வீசிப்பொர, இராமனும் அவை களைத் தெய்வப்படைகளால் மாற்றி வென்றான். இறு தியில் மூலபலச் சேனை முற்றும் அழிந்த நிலையில். இரா வணன் தேர் ஏறிப் போர்களம் புகுகின்றான்; இராம னோடு சினந்து போர் புரிகிறான். இதனைக் கம்பன்,

**‘வேல் ஆயிரம் மழு ஆயிரம் எழு ஆயிரம் விசிகக்**
**கோல் ஆயிரம் பிற ஆயிரம் ஒரு கோல்படக் குறைவக்**
**கால் ஆயின கனல் ஆயின உரும் ஆயின கதியச்**
**சூல் ஆயின மழை அன்னவன் தொடைபல்வகை தொடுக்க’**

—கம்ப,யுத்த, இராவணன் வதைப்படலம் : 55

என வருணித்துள்ளான்.

பெரும்போர் நிகழ்த்தியதன் முடிவில், இராமன் விட்ட பிறை முக அம்பு இராவணன் தலையை அறுக்க, அது கடலில் போய் விழுந்தது, ஆனால் அது மீட்டும் முளைத் தெழுந்தது: இறுதியில் அயன் படையினை இராமன், பெருந்தவத்தால் முக்கோடி வாழ்நாளை முக்கண்ணனிட மிருந்து முயன்று பெற்ற இராவணன் மார்பில் பாய்ச்ச, அது அவன் மார்பினை துளைத்து உயிரைக் குடித்தது.

**‘‘முக்கோடி வாழ் நாளும் முயன்றுடைய பெருந்தவமும்**
**முதல்வன் முன்னாள்**
**எக்கோடி யாராலும் வெலப்படாய்’’ எனக்கொடுத்த**
**வரமும் ஏனைத்,**

**திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும்**
**தின்று மார்பில்**
**புக்கோடி உயிர்பருகிப் புறம் போயிற்று இராகவன்தன்**
**புனித வாளி''**

*— கம்ப, யுத்த, இராவண : 198*

இராவணன் இறந்த செய்தி கேட்டுப் பெருந்துயர் அடைந்த மண்டோதரி, போர்க்களம் புகுந்து, இராவணன் மார்பில் விழுந்து புலம்பி அரற்றுகின்றாள். அவல உணர்வு தரும் அப்பாடல் வருமாறு :

**''வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி**
**மேலும் கீழும்**
**எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும் இடம்நாடி**
**இழைத்த வாறோ**
**கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில்**
**கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ**
**ஒருவன் வாளி''!**

*—கம்ப, யுத்த, மண்டோதரி புலம்புறு படலம்; 26*

இவ்வாறு இராமாயணத்தின் முற்பகுதியில், 'இதய மாம் சிறையில் வைத்தான்' என்று, சீதையை இராவணன் தன் இதயச்சிறையில் கொண்டமையைக் குறிப்பிட்ட கம்பன், அதனை மறவாது, இறுதியினும் நினைவு கூர்ந்து, பொட்பொருத்தமுற மேற்கண்டவாறு புலப்படுத்தியிருத்தல் மகிழ்ந்து பாராட்டத் தக்கதாம்.

இவ்வாறு, இராமாயணப்போர் பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்தது. தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகளும், இராமாயணப் போர் பதினெட்டு மாதங்களும், பாரதப் போர் பதினெட்டு நாள்களும், செங்குட்டுவன் கனக

விசயரோடு நடத்திய வடநாட்டுப் போர் பதினெட்டு நாழிகையும் நடந்து முடிந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

'செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை உண்ப வொன்பதிற் றிரட்டியென்று
யாண்டும் மதியம் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள''

— சிலம்பு, நீர்படைக்காதை: 7-10

எனவே, இராமாயணம் எனும் இலக்கியம் கண்ட போர்க்களம், நல்ல பல கருத்துகளை நம் முன்னே குறிப்பிடுகின்றது என்பது நன்கு விளங்கும்.

# 10. பிள்ளைத் தமிழ்

தமிழ் இலக்கியம் மிகப்பழமையான இலக்கியம். உலகத்தின் மிகத்தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று. இப்படிப்பட்ட பழமையான மொழியில் அமைந்துள்ள இலக்கியங்களும் மிகப் பழமையானவை என்பதில் ஐயம் இல்லை. 'காலத்திற்கேற்பக் கவிஞர்கள் தோன்றுவார்கள் என்பது ஒரு வாக்கு. அதன்படி ஒரு காலத்தின் சூழ்நிலையை யொட்டி இலக்கியங்கள் அமையும்.எனவே, காலத்திற்குக் காலம் தேவைக்கு ஏற்ப இலக்கியமும் மாறி மாறி அமையும். அந்த முறையிலேயே நாம் நம்முடைய தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றைப் பார்போமானால், முதலில் சங்க இலக்கியமும், அதனையடுத்துச் சமய இலக்கியமும், அதற்குப் பின்னர் காப்பிய இலக்கியமும், அதற்குப் பின்னர் சிற்றிலக்கியமும், இறுதியாகப் புதுமை இலக்கியமும் தோன்றியிருப்பதைக்காணலாம். இதிலிருந்து காலத்திற்குக் காலம் தமிழ்க்கவிதையின் வடிவம்தேவையை ஒட்டி மாறி வந்திருப்பது நன்றாய்த் தெரிகிறது.

இவ்வாறு இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைச் 'சிற்றிலக்கியங்கள், என்றும் 'பிரபந்தங்கள்' என்றும் கூறுவர். தமிழ்ப்பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். இந்தத்தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களையும் பற்றிய விரிவான பட்டியலைச் சதுரகராதியில் காணலாம் பிள்ளைத் தமிழைப் பிள்ளைக்கவியென வெண்பாப் பாட்டியலும், பிள்ளைப்பாட்டென பன்னிருபாட்டியலும் கூறுகின்றன. தமிழின் மிகப் பழமையான இலக்கணமாகிய தொல்காப்பியத்தில், 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்று ஒரு நூற்பா உள்ளது. இந்நூற்பாவினை ஆதாரமாகக் கொண்டுதான் இப்பிள்ளைத்தமிழ் தோன்றியிருக்க

வேண்டும் என்று அறிஞர் கூறுவர். 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப, என்ற தொல்காப்பிய நூற்பாவாலும், தொல்காப்பியனார் காலத்திலேயே இத்தகைய பிள்ளைத்தமிழ் நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. அக்காலத்தில் வழங்கிய அந்நூல்கள் பிற்காலத்தில் அழிந்துபட்டிருக்க வேண்டும். இதுபோன்ற எத்தனையோ நூல்கள் தமிழில் கிட்டாமற்போய்விட்டன.

முதலில் பிள்ளைகளுக்கு — குழந்தைகளுக்கு — இந்தப் பிள்ளைத்தமிழ் நூல்கள் சிறப்பிடம் தருவதனைப் பார்க்கிறோம். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பாரகள். இதுபோன்றே 'குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். பரலோக அரசு அவர்களுடையது' என்ற ஏசுபெருமான் வாக்கும் குழந்தைகளுக்கு எத்தகைய சிறந்தஇடத்தைக் கொடுக்கவேண்டும் என்பதனைத் தெளிவாக்கும்.'குழந்தையின் இதயம்கள்ளங்கரவு அற்றது; கரவு என்பதையே அறியாத வெள்ளை உள்ளத்திற்கு உரிமையானவர்கள் குழந்தைகள். எனவேதான், 'கடந்த ஞானியரும் கடப்பரோ மக்கள்மேல் காதல்!' என்றார்கள். நம்முடைய தெய்வப் புலவர் திருவள்ளுவரும் பேறுகளில் சிறந்தபேறு, குழந்தைகளைப் பெறுவதே என்றும், அமிழ்தத்தைக் காட்டிலும் இனிமையானது குழந்தைகள் தங்கள் கைகளை இட்டுத் துழாவிய கூழ் என்றும், யாழைக் காட்டிலும் குழலைக் காட்டிலும் செவிகளுக்கு இன்பம் அளிப்பன அவர்களுடைய மழலைப் பேச்சுகளே என்றும் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

—திருக்குறள் : 60

''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''

—திருக்குறள் : 56

**"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது."**

—திருக்குறள் : 68

**"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்"**

—திருக்குறள் : 69

இது போன்றே, கடவுளராய் இருந்தாலுங்கூடக் குழந்தை வடிவமே — கோலமே சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. கண்ணனுடைய விளையாட்டுகளை எண்ணி மகிழாத குழந்தைகள் உண்டா? முருகனின் குழந்தைக் கோலமாம் 'பழனியாண்டி'யைப் பாராட்டி மகிழாத குழந்தைகள் உண்டா? எனவே, மனிதர் மட்டுமன்றிக் கடவுளரும் குழந்தைக் கோலத்திலேதான் சிறப்பாகப் பேசப்படுகின்றனர் என்பது இதனால் நமக்கு நன்கு புலனாகிறது.

முதலில் பிள்ளைத்தமிழின் அமைப்பினைக் காண்போம். புலவர்கள் தாம் விரும்பும் ஓர் அரசனையோ, அல்லது ஒரு பெரியாரையோ, அல்லது ஒரு தெய்வத்தையோ குழந்தையாக எண்ணி, அக்குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரையில் உள்ள மாதங்களைப் பத்துப் பருவங்களாக வகுத்துக் கொண்டு, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பத்து விருத்தப் பாடல்களை அமைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் என்று கூறப்படும். இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் இரு பிரிவாக வழங்கப்படும். ஆண்பாற்பிள்ளைத் தமிழ் 'காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர்' என்னும் பத்துப் பருவங்களை விளக்குகிறது. பெண்பாற்பிள்ளைத் தமிழ், இவற்றில் முதல் ஏழு பருவங்களையும் பொதுவாகக்கொண்டு இறுதியில் அமைந்துள்ள மூன்று பருங்களுக்குப் பதிலாகக்

'கழங்கு, அம்மானை, ஊசல்' என்ற மூன்று பருவங்களைக் கொண்டதாகும். 'சிற்றில், இழைத்தல், சிறுசோறாக்கல், ஊசல்' முதலிய விளையாட்டுகளும் பெண்பாற்குக் கூறப் படுவதுண்டு.

**'பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்**
**மூன்று முதலா மூவேழ் அளவும்**
**ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே'**

*—பன்னிரு பாட்டியல் : 10*

**'சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி**
**மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய**
**அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே**
**பம்புசிறு தேரொடும் பத்து'**

*—வெண்பாப் பாட்டியல் : செய்யுளியல், 7*

அவற்றுள்,

**'பின்னைய மூன்றும் பேதையர்க் காகா;**
**ஆடுங் கழங்கம் மானை ஊசல்.'**
**பாடுங் கவியால் பகுத்து வகுப்புடன்**
**அகவல் விருத்தத் தாற்கிளை யளவாம்.'**

*—இலக்கண விளக்கப் பாட்டியல் : 47*

**'சிற்றில் இழைத்தல் சிறுசோ றாக்கல்**
**பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்**
**ஆண்டீ ராறதில் எழிற்காமன் நோன்பொடு**
**வேண்டுதல் தானுள விளம்பினார் புலவர்'**

*—பன்னிரு பாட்டியல் : 105*

ஆகவே, பத்துப் பருவங்க்ள் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களாகும், ஒவ்வொரு பருவத்திலும் பத்துப்பாடல்கள் இடம்பெறப் பிள்ளைத்தமிழ் நூறு பாடல்களால் ஆகிய ஒரு பிரபந்த நூலாகும்

இனிப் பத்துப் பருவங்களின் அமைப்பினையும் சற்று விரிவாகக் காண்போம். முதலாவது பருவம் காப்புப் பருவமாகும். இது பாட்டுடைத் தலைவன் அல்லது காவிய நாயகனையோ அல்லது காவியநாயகியையோ காப்பாற்றி அருளும்படி தெய்வங்களை வேண்டுவதாகும். திருமால், சிவன், பிரமன், பிள்ளையார், முருகன், சூரியன், இந்திரன், குபேரன், இலட்சுமி, சரசுவதி, சந்திரன் முதலான தெய்வங்களைப் பாடி, அவர்கள் தம் காவியத் தலைவராகிய குழந்தையினைக் காக்க வேண்டுமென்று பாடுவர். காக்கும் தொழிலைச் செய்யும் திருமாலைக் காப்புப் பருவத்து முதற்கடவுளாகக் கொள்ளவேண்டும் என்ற வரையறை உண்டு.

**'அவன்றான்,**
**காவற் கிழவன் ஆக லானும்**
**பூவின் கிழத்தியைப் புணர்த லானும்**
**முடியும் கடகமும் மொய்ப்பூந் தாரும்**
**குழையும் நூலும் குருமணிப் பூணும்**
**அணியும் செம்மல் ஆக லானும்**
**முன்னுற மொழிதற் குரியன் என்ப.'**

—பன்னிரு பாட்டியல் : 24

என்று பன்னிரு பாட்டியல் பகர்கின்றது.

இப்படியிருந்தும், சில பிள்ளைத்தமிழ் நூல்களில், இந்த வரையறை (விதி) பின்பற்றப்படவில்லை இக் காப்புப் பருவம் குழந்தையின் மூன்றாம் மாதத்திற்குரிய தாகும இரண்டாவது பருவம் செங்கீரைப் பருவமாகும். இது செம்மையான மொழிகளைப் பேசுமாறு குழந்தையை வேண்டுவதாகும். இது ஐந்தாம் திங்களில் பாடப் பெறுவ தாகும். குழந்தை தன் தலையைத் தூக்கிக்கொண்டு, இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி, ஒரு காலை முட்டியிட்டுப் பூமியில் பதித்து, ஒரு காலைப் பின்னால் நீட்டிக்கொண்டு உடல் அசைந்து ஆடும் பருவத்தைச் செங்கீரைப்பருவம் என்பர். இதனைக் 'குமரகுருபரர்'

**'ஒருதாள் உந்தி எழுந்துஇரு கையும்**
**ஒருங்கு பதித்து நிமிர்ந்து**
**அருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினிது**
**ஆடுக செங்கீரை'**

—முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ் : 18

என்று முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழில் அழகாகப் பாடியுள்ளார்.

மூன்றாவது பருவம் தாலப்பருவமாகும். இது ஏழாம் மாதத்து நிகழ்வதாகும். 'தால்' என்பது நாக்கு; எனவே தாலப்பருவம் என்பது தாலாட்டுப் பருவமாகும்.

தாலாட்டென்பது 'தால்' என மருவி வழங்குகின்றது. குழந்தைகளைத் துயிலுறச் செய்வோர் நாக்கை அசைத்து ஒலி எழுப்பிப் பாட்டுப் பாடித் 'தாலேலோ' என்று சொல்லி முடித்துக் குழந்தையினைத் தூங்க வைப்பர்.

திவ்வியப்பிரபந்தத்தில் குலசேகர ஆழ்வார் இராமனையும், கண்ணனையும் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடுகின்றார் :

**'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!**
**தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்!**
**செம்பொன்சேர்**
**கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே**
**என்னுடைய இன்னமுதே! இராகவனே தாலேலோ!**

—தாலாட்டு : 1

ஆழ்வார், தேவகியின் புலம்பலாகக் கண்ணனது குழந்தை விளையாட்டுகளைக் குறிப்பிட்டுள்ளார் :

**'தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா!**
**தவழ்ந்தெ ழுந்து தளர்ந்தோர் நடையால்**
**மண்ணிற் செம்பொடி ஆடிவந்து என்றன்**
**மார்பில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ!**
**வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்**
**வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்**
**உண்ணப் பெற்றிலேன் ஓகொடு வினையேன்**
**என்னை என்செயப் பெற்றதெம் மோயே'**

—தேவகி புலம்பல் : 6

நான்காவது பருவம் சப்பாணிப் பருவமாகும். இஃது ஒன்பதாம் மாதத்து நிகழ்வாகும். இது குழந்தையை இரு கைகளையும் சேர்த்து ஓசை எழக் கொட்டும்படி கேட்கும் பருவம் ஆகும். இப்படிக் கை கொட்டுவது சப்பாணி எனப்படும்.

ஐந்தாவது பருவமான 'முத்தப் பருவம்' பதினோராம் மாதத்து நிகழ்ச்சியினைக் கூறுகின்றது. இது 'குழந்தையினை முத்தம் தருக' எனத் தாயாரும் பிறரும் வேண்டுவ

தாகும் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களிலே 'முத்தம், வருகை, அம்புலி' என்னும் பருவங்கள் மிகச் சிறந்த பருவங்கள் என்பர்.

ஆறாவது பருவம், 'வருகைப் பருவம்' ஆகும். இது 'வாரானைப் பருவம்' என்றும் வழங்கப்படும். இது பதின் மூன்றாம் மாதத்து நிகழ்ச்சியைக் கூறுவது. தளர் நடையிட்டு வரும் குழந்தையை 'வா' என்று அழைப்பது இப்பருவமாகும்.

ஏழாவது பருவம், ''அப்புலிப் பருவம்'' ஆகும் இது பதினைந்தாம் மாதத்து நிகழ்வதைக் கூறுவதாகும். இது சந்திரனை நோக்கிக் 'குழந்தையுடன் ஆடவா' என்று அழைக்கும் பருவமாகும். சந்திரனைக் சாம, பேத, தான, தண்ட முறைகளில் அழைக்கும் முறை மிகவும் அழகுடையதாகும். இப்பருவம் பாடற்கு அரிய பருவம் என்பதனைப் 'பிள்ளைக் கவிக் கம்புலியாம்' என்ற பாடலின் தொடர் விளக்குகிறது. பாட்டுடைத் தலைவர்க்கும் சந்திரனுக்கும் ஒப்புமை கூறுதலும் வேற்றுமை கூறுதலும், வந்தால் விளையும் நன்மை கூறுதலும் வராவிட்டால் நிகழும் தீமை கூறுதலும் புலவர்களின் கற்பனைக்கு விருந்தளிக்க வல்லனவாகும். இப்பருவப் பாடல்களில் புலவர்களது புலமை நலத்தினை நன்கு காணலாம்.

இதுவரையில் கூறப்பட்ட ஏழு பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகிய இரு பிள்ளைத் தமிழ்களுக்கும் பொதுவானவை.

ஆண்பாற் பிள்ளைத் தமிழின் எட்டாவது பருவம், 'சிற்றில் இழைத்தல்' என்பதாகும். இது பதினேழாவது மாதத்தில் பாடப்படுவதாகும். இது சிறுமியர் மணல்வீடு கட்டி விளையாடுகையில், ஆண் குழந்தை அதைக் காலால் உதைத்து அழிக்கின்றபோது, 'எமது சிற்றிலை அழிக்க வேண்டா' என்று பாடப்படுவதாகும்.

ஒன்பதாவது பருவம், சிறுபறை முழக்கலாகும், இது பத்தென்பதாம் மாதத்தில் பாடப்படுவதாகும் இது குழந்தையைத் தன் கையில் 'சிறு பறை' என்னும் இசைக் கருவி கொண்டு முழக்குமாறு வேண்டுதலை உணர்த்தும் பருவமாகும்.

இறுதிப் பருவமான 'சிறு தேர் உருட்டல்' இருபத்தோராம் மாதத்து நிகழ்ச்சியை விளக்குவதாகும். இது குழந்தையை மரத்தால் ஆன சிறிய தேரினை உருட்டும்படி வேண்டும் பருவமாகும்.

பெண்பாற் பிள்யைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் 'நீராடல், அம்மானை, ஊசல்' என்பதை மேலே கண்டோம். 'நீராடல்' என்பது பெண் குழந்தையை நீரில் குளிக்க அழைக்கும் பருவமாகும். 'அம்மானை' என்பது பெண் குழந்தையினைக் கழங்கினை மேலே வீசி ஆடும்படி வேண்டும் பருவமாகும். 'ஊசல்' என்பது பெண் குழந்தையை ஊஞ்சலில் ஆடும்படி வேண்டுதலை அறிவிக்கும் பருவமாகும்.

இறுதியாகக் கூறப்பட்ட மூன்று பருவங்களும், பெண் குழந்தையின் மூன்றாம் ஆண்டிலும், ஐந்தாம் ஆண்டிலும், ஏழாம் ஆண்டிலும் கூட அமைத்துப் பாடப்படும் என்பது வெண்பாப்பாட்டியலால் தெரியவருகிறது. மேலும், ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப்பாடல்கள் பாடப்படும் என்பது மேலே குறிப்பிடப்பட்டதன்றோ? இவ்வாறு பல பிள்ளைத் தமிழ் நூல்கள் அமைந்திருந்தாலும், ஒவ்வொரு பருவத்திற்கும ஏழு ஏழு பாடல்களையுடையதாகச் 'சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழும்,' 'ஐந்து ஐந்து பாடல்களையுடையதாகச் 'செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழும்,' மூன்று மூன்று பாடல்களையுடையதாகப் 'பழனிப்பிள்ளைத் தமிழும்' எந்த வரையறையும் இன்றி 'ஆண்டாள் பிள்ளைத் தமிழும்' அமைந்திருக்கின்றன. மேலும், 'ஆண்டாள் பிள்ளைத்தமிழில் பதினொரு

பருவங்களும், 'சிவகாமியம்மை பிள்ளைத் தமிழில்' பன்னிரண்டு பருவங்களும் கூறப்பட்டுள்ளன.

பிள்ளைத்தமிழ் என்ற பெயரில் பாடாவிட்டாலும், பிள்ளைத்தமிழ் நூலுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் 'பெரியாழ்வார்' ஆவர். அவர் கண்ணனைக் குழந்தையாக எண்ணி மகிழ்ந்து மகிழ்ந்து பாடிப் பரவசமடைகின்றார்; கண்ணனை எண்ணெய் தேய்த்துக் கொள்ளவும், நீராடவும் அழைக்கிறார். எனவே பிள்ளைத் தமிழுக்கு வித்திட்ட பெருமை பெரியாழ்வாரையே சாரும். கடவுளைக் குழந்தையாக வைத்துப் பாடும் மரபு வடமொழி போன்ற இலக்கியங்களிலும் உண்டு. ஆனால், தமிழ்க்கறிஞர் இதை ஒரு முக்கிய வடிவமாகத் தனிச் சிறப்புடன் வளர்த்துள்ளனர். நமக்கு முதன் முதலாகப் பிள்ளைத்தமிழ் என்ற பெயராலேயே கிட்டும் பிள்ளைத் தமிழ் நூல், ஒட்டக்கூத்தர் இயற்றிய 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்.' ஆகும். இந்நூல், நல்ல சந்த அமைப்புப் பெற்று விளங்குகின்றது. பின் வந்த நூலாசிரியர் இவருடைய சந்த அமைப்பைப் பின்பற்றியுள்ளனர். இந்நூல் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றது இராசாதிராசன், இராசராசன் இரண்டாம் இராசேந்திரன் முதலியோர் செய்த பெரும் போர்களும், குலோத்துங்கனுக்கு அவர்களோடு அமைந்த உறவு முறைகளும், இந்நூலால் நன்கு தெளிவாகின்றன.

சில பிள்ளைத்தமிழ் நூல்களை இங்கு குறிப்பிடுவது நலம். அவை, மாதவச் சிவஞானமுனிவர் எழுதிய 'திருக் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்.' திருவாவடுதுறை சிவஞானசுவாமிகள் இயற்றிய 'அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்,' மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்' சேக்கிழார் பிள்ளைத்தமிழ்,' குமரகுருபரர் இயற்றிய 'மதுரைமீனாட்சியம்மை பிள்ளை தமிழ் 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' தச்சநல்லூர் அழகிய சொக்கநாதர் இயற்றிய 'திருநெல்வேலிக்

காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்,' பகழிக்கூத்தர் இயற்றிய 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்,' அந்தக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய 'திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ்,' 'சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்,' 'மங்காத செந்நெல்வளர்' செங்கோட்டை கவிராச பண்டாரத்தையா இயற்றிய 'திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்,' மார்க்கசகாயதேவர் இயற்றிய, 'திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்,' திருவாவடுதுறை ஆதினக் குருமூர்த்தி இயற்றிய 'சம்பந்தர்—அப்பர் பிள்ளைத்தமிழ்,' என்பனவாகும். முகம்மதியக் கவிஞர்கள் 'நபிநாயகப் பிள்ளைத் தமிழ்,' 'முகைதீன் பிள்ளைத்தமிழ்,' 'ஆண்டவர் பிள்ளைத் தமிழ்,' என்னும் நூல்களும் இயற்றியுள்ளார்கள். இக்காலத்தில் 'கம்பன் பிள்ளைத்தமிழ்,' காந்தி பிள்ளைத் தமிழ்' முதலிய நூல்களும் வெளிவந்துள்ளன.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பனவும்; பெண்பாற்பிள்ளைத் தமிழ் நூல்களில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், வடிவுடையம்மை பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் என்பனவும் மிகவும் சிறப்பு வாய்ந்த பிள்ளைத்தமிழ் நூல்களாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலே அமைந்துள்ள 'தொடுக்கும் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே' என்ற பாடல், தெய்வத்தன்மை வாய்ந்த பாடலாகும். பழைய வேதப்பொருளின் வித்து என்றும், அகத்துறை புறத்துறை அமைந்த இனிய தமிழ் மொழியின் சுவை என்றும், ஆணவத்தினை அடியோடு கல்லியெறிந்து அடியார் தம் உளக்கோயிலில் ஏற்றி வைக்கும் திருவிளக்கு என்றும், வளர்கின்ற சிகரங்களையுடைய இமயமலையிலே விளையாடும் இளைய பெண் யானை என்றும், அலை கடலால் சூழப்பட்ட உலகத்தைக் கடந்த ஒருவனாம் ஒப்

பற்ற இறைவனின் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம் என்றும், குழற்காடேந்தும் இளவஞ்சிக்கொடி என்றும், மலையத்துவசன் பெற்ற பெரு வாழ்வென்றும் மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார் :

**'தொடுக்குங் கடவுட் பழம்பாடற்**
**றொடையின் பயனே! நறைபழுத்த**
**துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்**
**சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்**

**தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்**
**கேற்றும் விளக்கே! வளர்சிமய**
**இமயப் பொருப்பில் விளையாடும்**
**இளமென் பிடியே! எறிதரங்கம்**

**உடுக்கும் புவனங் கடந்துநின்ற**
**ஒருவன் திருவுள் ளத்திலழகு**
**ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்**
**உயிரோ வியமே! மதுகரம்வாய்**

**மடுக்குங் குழற்கா டேந்துமிள**
**வஞ்சிக்கொடியே! வருகவே!**
**மலையத் துவசன் பெற்றபெரு**
**வாழ்வே! வருக வருகவே!'**

—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், வருகைப் பருவம் : 9

குமரகுருபரர் இப்பாடலைப் பாடும் பொழுது, அருச்சகரின் மகள் வடிவில் அன்னை மீனாட்சியே வந்து, அரசன் கழுத்தில் இருந்த மாலையைக் குமரருருபரர் கழுத்தில் இட்டு மறைந்தனளென்பது வரலாறு. இது போன்றே முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழின் 'மழவு

முதிர், கனிவாய்ப் பசுந்தேறல்' எனத்தொடங்கும் வருகைப் பருவப் பாடலும் சிறந்ததாகும். 'மீனேறு குண்டகழி' எனத் தொடங்கும் செங்கீரைப் பருவப்பாடல் வள்ளியம்மையின் 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்ற முருகனின்' திறத்தைத் கூறுகின்றது.

கோலக் குமரன் ஞாலத்தில் கொலுவீற்றிருக்கும் இடங்களாக ஆறு இடங்களைக் கூறுதல் மரபு. இவற்றினை 'அறு படை வீடுகள்' என்பர். நக்கீரர் இயற்றிய சங்க நூலாம் திருமுருகாற்றுப் படையிலும், அருணகிரிநாதரின் திருப்புகழிலும் இதனை நன்கு காணலாம். இம்மரபினைப் பின்பற்றியே பகழிக் கூத்தரும் ஆறுபடை வீடுகளையும் ஒரே பாடலில் அமைத்துப் பாடியுள்ளார். அவ்வழகிய பாடல் வருமாறு :

**'அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி**
**ராடுமணி யூசல்சிற்றில்**
**அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்**
**அருவிபாய் பரங்கிரியுமுட்**
**புறந்தரு புனிற்றுவெள் வளைகடற் றிரைதொறும்**
**பொருதசீ ரலைவாயுமென்**
**போதுகமழ் திருவாவி னன்குடியு மரியமறை**
**புகலுமே ரகமுமினிமைக்**
**குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு**
**குன்றுதோ றாடலுந்தண்**
**கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட**
**குஞ்சரம் பிளிறமரவஞ்**
**சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ**
**சிறுபறை முழக்கி யருளே!**
**செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே!**
**சிறுபறை முழக்கி யருளே!'**

—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் :சிறு பறைப்பருவம், 1

பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் பிள்ளைத்தமிழாயினும், 'பெரிய தமிழ்' என்று பாராட்டப்படும் பெருமை வாய்ந்தது; சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய சுவைகள் நிறைந்தது. முத்தப் பருவத்து முதற்பாடலில், ''வலம்புரிகள் ஈன்ற முத்திற்கும், மருப்பில் விளை முத்திற்கும், நெற்பயிரின் குளிர்முத்தினுக்கும் விலையுண்டு; முருகா, நின் கனிவாய் முத்தந்தனக்கு விலையில்லை,'' என்று பாடும் பாடலின் சிறப்பை உள்ளவாறு சொல்லவும் வேண்டுமோ? அவ்வினிய பாடல் வருமாறு:

'கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு,

தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில் விளை
தரளந் தனக்கு விலையுண்டு:
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்தும் சுமந்த.பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையில்லை;
முருகா! முத்தந் தருகவே!
முத்தஞ் சொரியும் கடலலைவாய்
முதல்வா! முத்தந் தருகவே!

—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், முத்தப்பருவம் : 1

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் தம் பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழாரைப் 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ!' என்று பாராட்டிப் பாடி யுள்ளார். 'மணக்கும் மணக்கும்' என்ற சொல்லைப் பல முறை ஒரு பாட்டில் கையாண்டு அவர் பாடியுள்ள பாட்டின் சொல்லாழமும், கருத்தாழமும், கற்று மகிழ்ந்து இன்புறத் தக்கனவாகும்.

இத்தகைய சிறப்புவாய்ந்த பிள்ளைத்தமிழ் நூல்களுட் சில அச்சேறியுள்ளன; சில அச்சில் வாராமல், ஏட்டு அளவிலேயே நின்று விட்டன

பிள்ளைத்தமிழ் நூல்களைப் படிப்போர், அந்நூல் களின் சொற்சுவை, பொருட்சுவை, கருத்தாழம், சந்தநயம் வளமான கற்பனை, உவமம் முதலிய அலங்காரங்களில் தம் நெஞ்சத்தைப் பறிகொடுப்பர் என்பது உறுதி.

# 11. பாரதியார் பா நலம்

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழன்னையின் தவப் புதல்வராய்த் தோன்றியவர் பாரதியார். அவர் பிறந்த காலம் இந்நாடு தாழ்வுற்று விடுதலை தவறிக் கெட்ட காலம்; பாரத அன்னை அடிமைத்தளையில் கட்டுண்டு பரிபவம் அடைத்த காலம்; தமிழ் நாட்டிலும் பழைய பாட்டியல் மரபே கொண்டு பாடல்கள் இயற்றப் பட்ட காலம்; புதுமை அரங்கேறாதகாலம். இந்த இரண்டு நிலைகளும் மாற, இயன்ற அளவு நாட்டுப்பற்று மிக்க வராயும், மொழிப்பற்று மிக்க கவிஞராயும் தோன்றியவர் பாரதியார். 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல், இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்' என்று பாரதியாரே தோத்திரப்பாடல்களில் முழங்கியுள்ளார். கவிதையிற் புதுநெறி காட்டிய புலவர் அவர்; கவிஞன் என்றால் அவன் எங்கோ கற்பனை உலகில் உலவிக் கொண்டு, மக்களினத் தொடர்பற்று வாழ்பவன் என்று பொதுவாகப் பலர் எண்ணிவந்த எண்ணத்தை மாற்றி, நாட்டின் விடுதலைப் போரிலும் நேரடிப்பங்கு கொண்ட வர் பாரதியார். இம்முறையில் நாடு, மொழி, இனம் ஆகிய முத்துறைகளிலும் பேரளவு தொண்டாற்றியவர் கவியரசர் பாரதியார்.

முதற்கண் பாரதியாரின் நாட்டுப் பற்றினைக் காண் போம். தாம் பிறந்த பொன் நாட்டினைப் பாரதியார் மகிழ்ச்சியோடு பாடிப் போற்றுகின்றார்.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே'

—தேசிய கீதங்கள், வந்தே மாதரம் : 1

என்று குறிப்பிட்ட கவிஞர்,

'பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே'

—தேசிய கீதங்கள், எங்கள் நாடு : 2

என்று பாடிப் பரவசப்படுகிறார்.

பாரத நாட்டைப் பாடியது போன்றே தமிழ் நாட்டின் சிறப்பினையும் 'செந்தமிழ் நாடு' என்ற கவிதையில் தேனொழுகக் குறிப்பிடுகின்றார். செந்தமிழ் நாடு என்ற சொற்றொடர் அவர் செவிகளைக் குளிர வைக்கின்றது. தந்தையர் நாடு என்ற சொற்றொடர், அவர் உணர்ச்சியைக் கிளறி வேகமூட்டுகின்றது. செயற்படக் கவிதையாய் அமைகின்றது.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!'

— தேசிய கீதங்கள், செந்தமிழ்நாடு : 1

என்கிறார்.

'தமிழ்க்கவிஞர் பரம்பரையில் பிறந்தோமே!' என்ற பெருமித உணர்வும் பாரதியாருக்குப் பொங்கி வழிகின்றது. 'கம்பன் பிறந்த நாட்டிலே, வள்ளுவன் வாழ்ந்த நாட்டிலே, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எழுந்த நாட்டிலே நாமும் பிறந்தோமே!' என்ற தருக்கும் அவர்க்குண்டு. இம்மூன்று கவிஞரினும் சிறந்த புலவர்கள் உலகில் எங்கேனும் பிறந்ததுண்டா என்றால், 'இல்லை' என்று உறுதியாகப் பதில் இறுக்கிறார் கவிஞர்.

**'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;**
**உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை'**

—தேசிய கீதங்கள், தமிழ் : 2

என்ற அடிகளில் தமிழ்ப்புலவர்களை உலக அரங்கில் உயர்வாக ஏற்றிப் புகழ்ந்துள்ளார்.

தாய்மொழிபால் தண்டாத காதல் கொண்டவர் நம் தமிழ்க்கவிஞர் பாரதியார். இதனை,

**'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்'**

—தேசிய கீதங்கள், தமிழ் : 1

என்று கூறியுள்ளதிலிருந்து அறியலாம். 'ஒருசொற் கேளீர்' என்ற அறைகூவலை முன்விடுத்து: 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!' என்ற வேண்டுகோளைத் தொடுத்து, அதன் வழித் தமிழர் தம் இன்றைய கடமையினை எடுத்து மொழிகின்றார். 'வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் தமிழ்மொழியில் தோன்றுமானால், அறியாமைச் சேற்றில் ஆழ்ந்து கிடக்கும் குருடரெல்லாம் கல்வி விழி பெற்று உயர்வர்.' என்று திண்ணமாகக் கூறுகிறார் அவர். இறுதியில்,

**'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்'**

—தேசிய கீதங்கள், தமிழ் : 4

என்று தெய்வ உலகினையும் படைக்கும் தெள்ளு தமிழின் மேன்மையினைத் தெளிவுபடுத்துகின்றார். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல், ஆதிசிவன் பெற்றமொழி, அகத்தியன் இலக்கணம் செய்து தந்த மொழி, ஆரியத்திற்கு நிகராய் அமைந்த மொழி கிளைத்துத் தழைக்கும்' என்கிறார். 'தமிழில் புத்தம் புதிய நூல்கள் எழவேண்டும்.' என்கிறார். 'பஞ்சபூதங்களின் செயல்களைக் குறிக்கும் விஞ்ஞான நூல்கள் விளக்கமுறுதல் வேண்டும்.' என்கிறார். 'எட்டுத்திக்குகளிலும் சென்று கலைச்செல்வங்களைக் கொண்டுவந்து குவித்தல் நந்தம் பொறுப்பு' என்று நயமுற நவில்கிறார். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' என்று பழைமை பாராட்டியே சோம்பித்திரியும் நம்மை இடித்துரைத்தும், புத்தம் புதிய தமிழுலகினை — திறமையான புலமை காரணமாக வெளி நாட்டார் வணக்கம் செய்யும் புதிய தமிழுலகினை—உருவாக்க வேண்டுவதன் பொறுப்பினை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

அடுத்து, மனித இனத்தின்மீது மாறாத பற்றுக் கொண்டவர் பாரதியார். 'ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள்; உலகின்பக்கேணி' என்ற அடிகளில், உலக மக்கள் அனைவரையுமே ஒரு கூட்டமாக, ஒரு சமுதாயமாக எண்ணிப் பார்க்கும் பெருநோக்கினைக் காணலாம். அம்மட்டோடன்றி ஆறறிவு படையாத அஃறிணை உயிரினங்களையும் நம்மோடு சேர்த்துக் கவிஞர் கவிதை வெறிகொண்டு பாடுகிறார் :

**'காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்,**
**நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்!'**

—தெய்வப் பாடல்கள், ஜய பேரிகை : 2

இது போன்று இந்திய நாட்டினர் அனைவரும் ஒருமைப்பாட்டு உணர்வோடு ஒன்றிய சிந்தையினராய் வாழ வேண்டும் என்பதனைப் பெரிதும் வற்புறுத்துகிறார் பாரதியார். 'எங்கள் தாய்' என்ற கவிதையில்,

**'முப்பது கோடி முகமுடையாள்உயிர்**
**மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்**
**செப்பு மொழி பதினெட்டுடை யாள்எனிற்**
**சிந்தனை ஒன்றுடையாள்'**

—தேசிய கீதங்கள், எங்கள் தாய் : 3

என்று குறிப்பிட்டுள்ளார். 'வாழ்ந்தால் முப்பது கோடி மக்களும் ஒரு நிறையாய் வாழ வேண்டும்; இன்றேல், ஒருங்கே மடிய வேண்டும்!' என்று ஆவேசத்தோடு பேசுகிறார் பாரதியார் :

**'எப்பதம் வாய்த்திடு மேனும் — நம்மில்**
**யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்;**
**முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்**
**முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம் !'**

—தேசிய கீதங்கள் பாரத நாடு : 5

வடகோடி மக்களும் தென்கோடி மக்களும் இணைந்து மகிழ்ந்து வாழ வேண்டும் என்பதனை அழகியதொரு கற்பனைக் காட்சியாய்க் கவினுற வடித்துக் காட்டுன்றார்,

பொதுமை வேட்கை பொலியும் கவிஞர். 'நிலவொளி பாயும் சிந்து நதியிலே, சேரநாட்டின் எழில் இளமங் கையர் அழகுப் படகினிலே அமர்ந்திருக்க, இனிமையான தெலுங்கு மொழியில் இன்பப் பண்ணிசைத்துத் தோணிகளோட்டி வரலாம்,' என்று ஆசை பொங்கக் கூறுகிறார் :

**'சிந்து நதியின்மிசை நிலவினிலே**
**சேரநன் னாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்**
**தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்'**

—தேசிய கீதங்கள், பாரத தேசம் : 5

'வடக்கே காஷ்மீரம் தொட்டுத் தெற்கே கன்னியா குமரிவரை வாழ்கின்ற மாந்தர் அனைவரும் ஒரு குலமாய், ஒரு நிறையாய், ஒரு விலையாய், எல்லாரும் இந்நாட்டு மன்னராய் வாழ வேண்டும்' என்பது அவர்தம் பேராவல். அவர் கனவு காணுகின்ற புதிய சமுதாயத்தில் 'ஒருவர் உணவை ஒருவர் பறியாமல், மனிதர் நோக மனிதர் பாராமல், தனியொருவன் தன் உணவுக்குப் பிறரை எதிர் பாராமல் வாழ வேண்டும்' என்று கூறி,

**'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்**
**முழுமைக்கும் பொது உடைமை**
**ஒப்பிலாத சமுதாயம்**
**உலகத்துக் கொருபுதுமை—வாழ்க !**

—தேசிய கீதங்கள், பாரத சமுதாயம் : 6

என்று புதிய சமுதாயத்தினைப் படைத்துக் காட்டுகிறார். இதனோடு கவிஞரின் நனவாகவேண்டிய கனவு நிற்க வில்லை. மேலும் அவர் உள்ளம் விரிந்து பரந்து செல் கின்றது. 'சேதுவை மேடுறுத்தி வீதிசமைத்துச் சிங்களத் தீவிற்குப் பாலம் அமைப்போம்!' என்கிறார். 'வங்கத்தின் நீர்ப் பெருக்கை மையத்து நாடுகளுக்காகத் திருப்பிவிட்டுப்

பயிர் செய்வோம்' என்கிறார். இவ்வாறெல்லாம் சட்ட மன்றங்களிலே பேச வேண்டிய வேலைகளைத் தாமே எடுத்து மொழிகின்றார் 'மக்கள் ஆக்கா மனுவேந்தர்கள் கவிஞர்கள்' (Poets are unacknowledged legislators of the world Shelly) அல்லவா?

நாட்டு விடுதலைப் பாடல்களில் கவிஞர் உணர்வின் இமயமாய் விளங்குகிறார். 'என்று தணியும் இந்தச்சுதந்திர தாகம்?' என்ற வினாவினை எழுப்பி, மக்கள் மனத்தில் சுதந்திரக் கனல் கொழுந்துவிட்டெரியச் செய்கிறார். 'தொண்டு செய்யும் அடிமை! உனக்குச் சுதந்திர நினைவோடா?' என்று ஆங்கிலேயன் பாரத மக்களைப் பார்த்துக் கேள்வி கேட்பது போல எண்ணி, அதற்கு மறுமொழியாகச் 'சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் — இனி அஞ்சிடோம்' எனறு மார் தட்டிப் பேசுகிறார். 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ?' என்று கூறி, 'எத்தனை இன்னல்கள் வந்துற்றாலும் சுதந்திர தேவியைத் தொழுதிடல் மறக்கிலேன்' என்கிறார். புன்மைத் தொழிலாம் அடிமைத் தொழில் செய்த காலம் கழிந்தொழிந்தது; தொல்லை இகழ்ச்சிகள் தீர்ந்தன. புதிய பாரதத்தினைக் காணவேண்டும். அதற்கு மக்கட்குத் தேவையான அடிப்படைப் பண்பு யாது? அதுவே ஒற்றுமை. அந்த ஒன்றுமை என்ற மட்டும் அமைந்துவிட்டால், பிறகு வாழ்வின் முன்னேற்றத்திற்கு வேறொன்றும் தேவையில்லை. இதனைப் பாரதியார்,

**'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும் — இந்த**
**ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?'**

—தேசிய கீதங்கள், வந்தே மாதரம் : 4

என்று இடித்து அறிவுரை கூரியுள்ளார்.

நாட்டிற்கு அடுத்த நிலையில், மனித சமுதாயத்தின் ஒரு பாதிப்பகுதியான பெண்டிர் சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதிலே பாரதியாருக்குப் பெருவேட்கை இருந்தது. 'பெண்ணை அடிமையாக நடத்தியவர்கள், ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர்கள் மாய்ந்துவிட்டார்கள்' என்று கூறிப் புதிய பெண்மையினைப் போற்றி வரவேற்கின்றார். 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு' முதலிய நற்பண்புகளின் உறைவிடமாகப் புதிய பெண்ணுலகத்தினைக் காணுகின்றார். பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், வேதம் படைப்பதும், நீதிகள் செய்வதும், சாதம் படைப்பதும், தெய்வசாதி படைப்பதும் ஆன செயல்களைச் செம்மையாய் நடத்துதல் இனி அவர் தம் சீரிய அறப் பணிகளாகும். காதலன் ஒருவனைக் கடிமணம் புரிந்துகொண்டு அவனுக்கு எல்லாத்துறைகளிலும் துணை நின்று, முன்னையினும் சிறக்கப் பெண்ணிணத்தைப் பேணி வளர்ப்போம் என்று புதுமைப் பெணகள் முழக்கஞ் செய்வதாகப் 'பெண்கள் விடுதலைக் கும்மி' பாடியுள்ளார் பாரதியார்.

> **'காதலொருவனைக் கைப்பிடித் தேஅவன்**
> **காரியம் யாவினும் கைகொடுத்து**
> **மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்**
> **மாட்சி பெறச்செய்து வாழ்வமடி !'**

—பல்வகைப் பாடல்கள், பெண்கள் விடுதலைக் கும்மி : 8

இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எண்ணற்றுப் பெருகிய இந்நாட்டிலே, கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றிக் கிடைக்கும் இந்நகட்டிலே, தொழில் துறை வளர்ச்சி குறைவாக இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்தவர் பாரதியார். எனவே இரும்பைக் காய்ச்சி உருக்கி, எந்திரங்கள் செய்து கரும்பைச் சாறு பிழிந்து, கடலில் மூழ்கி

முத்தெடுத்து, அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரந்தொழில் செய்வோர்க்கே பெருமை! அவர்களே புதிய பாரதத்தின படைப்புக் கடவுளர்கள் (பிரம்மாக்கள்) என்கிறார்.

பாரதியார் தேசபக்திக் கவிதைகளை மட்டுமன்றித் தெய்வபத்திப் பாடல்களையும் பாடியுள்ளார். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்! எங்கள் இறைவா! இறைவா! இறைவா?' என்று எல்லை கடந்து பேரருட்பிழம்பாய் நிற்கும் இறைவனின் படைப்பு மேன்மையினைப் பாடி நிற்கிறார். பாரதியாருக்கு அன்னை பராசக்தியிடம் அளவிலா அன்புண்டு. எனவே, தம் மனந்து வேட்கையினை அழகிய மாடலொண்றிலே அற்புதமாய் வடித்துக் காட்டுகின்றார் 'காணி நிலம் வேண்டுமாம்; அந்தக் காணி நிலத்தில் அழகிய தூண்களும் துய்ய நிறம் கொண்ட நல்ல மாடங்களும் நிறைந்துள்ள மாளிகை கட்டித்தர வேண்டுமாம். மாளிகைக்கு அருகிள் ஒரு கிணறு இருக்க வேண்டுமாம்; அந்தக் கிணற்றங்கரையினிலே கீற்றும் இளநீரும் நிறைந்த பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் வேண்டுமாம்; மாளிகையின் முற்றத்தில் தென்னங்கீற்றின் ஊடே வெண்முத்துச் சுடர்போன்ற நிலவொளி முன்புவர வேண்டுமாம்; அங்கு இன்னிசைத் தீம்பண் இசைக்கும் கோலக்குயிலின் [கீத இசை கேட்க வேண்டுமாம்; மனம் மலர்ச்சி பெற்று மகிழ இளந்தென்றல் தவழ்த்து தழுவ வேண்டுமாம்; பாட்டுக்கலந்திட ஒரு பத்தினிப்பெண்-மனையாள் - வேண்டுமாம்; க் கூட்டு இன்பததிலே கவிதைகள் பிறக்க வேண்டுமாம். அந்தக் காட்டு வெளியினிலே அன்னை பராசக்தியின் அருட்க்காவல் துலங்க வேண்டுமாம்; பாட்டுத்திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டுமாம்-இதுவே பார்தியார் அன்னை பராசக்தியிடம் வேண்டும் அருள் வரம்.

'எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் இறைவன்' என்ற தத்துவத்தை, நந்தலாலா பாட்டிலே பாரதியார்

பாடுகிறார். காக்கைச் சிறகின் கருமையிலும், பார்க்கும் மரங்களின் பசுமையிலும், கேட்கும் ஒலியின் கீதத்திலும், தீக்குள் விரலைவைத்துத் தீண்டும் இன்பத் திலும கண்ணனே நிறைந்துள்ளான். காயில் புளிப்பதும், கனியில் இனிப்பதும், நோயில் படுப்பதும், நோன்பில் உயிர்ப்பதும், காற்றில் குளிர்வதும், கனலில் சுடுவதும், கண்ணபெருமானின் திருவருட் செயல்களே. இவ்வாறு பாரதியார் உயர்ந்த தத்துவத்தினை 'நந்தலாலா' பாட்டி லும், 'கண்ண பெருமானே' பாட்டிலும், பொதிந்து வைத்துள்ளார்.

பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் ஓர் உயர்ந்த அரிய கற்பனையாகும். உணர்ச்சி (Emotion), கற்பனை (Imagination), வடிவம் (Form), கருத்து (Content), ஆகிய நான்கும் சிறந்த கவிதையின் இன்றியமையாத பண்புகள் என்பார் 'வின்செஸ்டர், (Winchester). இக் கருத்திற்கு விளக்கமாய் அரண் செய்து நிறபன கண்ணன் பாடல்கள். கண்ணனைத் தோழனாய், தாயாய், தந்தையாய், சேவக னாய், அரசனாய், சீடனாய், சற்குருவாய், குழந்தையாய், விளையாட்டுப் பிள்ளையாய், காதலியாய், ஆண்டானாய் குலதெய்வமாய் எண்ணிப் பாரதியார் பாடியுள்ள பாடல் களில் கவிதைப்பண்புகள் நிறைந்துள்ளன. உலகின் சிறந்த கவிதைப் படைப்புகளோடு ஒருங்கே வைத்து எண்ணத் தகும சிறப்புடையன என்று உறுதியாகப் போற்றலாம்.

'பாஞ்சாலிசபதம்' ஓர் உணர்ச்சிக்காவியம் பழைய கதை புதிய வடிவில் புதுமை எண்ணங்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. பாரதத்தாய் அடிமைப்பட்ட நிலை யினைக் குறிப்பாக உணர்த்துவது; 'கட்டுண்டோம். பொறுத்திருப்போம். காலம் மாறும்' என்ற உள்ளீட்டைப் பற்றி நிற்கும் தீஞ்சுவைச் சிறு காவியம் இது.

'முன்னிக் கவிதை வெறிமூண்டே நனவழியப் பட்டப் பகலிலே பாலர்க்குத் தோன்றுவதாய் நெட்டைக் கனவின்;

நிகழ்ச்சியிலே முகிழ்த்தது' குயிற்பாட்டு. இப்பாட்டு வளமான கற்பனையும் நலமான கருத்துகளும் கொண்டு துலங்குகின்றது.

பாரதியார், உள்ளம் அள்ளும் நீர்மையான கவிதைகள் பலவற்றை இயற்றித் தமிழுலகிற்குத் தந்துள்ளார்; தேசியக் கவிஞராய் இருந்து நாட்டின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் உரியவான கவிதைகளைத் தந்துள்ளார்; தெய்வப்பாடல்களை இயற்றி, யாதுமாய், எங்குமாய், எல்லாமாய் நிற்கும் அருட்சத்தியினைப் பத்தியோடு பரவிப் பாடியுள்ளார். சமுதாயச் சீர்திருத்தக் கவிஞராய் விளங்கிப் பெண்ணுரிமைப் பாடல்களைப் பாடிப் புதியதொரு சமுதாயத்தினைச் சமைத்துள்ளார்; 'முப்பெரும் பாடல்கள்' என்ற கவிதைகளால் அவர்தம் திருப்பெயர் கவிதை உலகில் வாழ வகை செய்து கொண்டார்; அனைத்திற்கும் மேலாகத் தமிழ்நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும், நிறைந்த கவிஞராய்ப் பாரதியார் விளங்கி, நமக்கெல்லாம் நல்வழி காட்டுகின்றார். பாரதியாரின் பாடல்களைப் பாங்குறப் படிப்போர், அவரைப் 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்றும், 'புதுநெறி காட்டிய புலவன் பாரதி' என்றும் நெஞ்சம் குளிரப் பாராட்டி மகிழ்வர் என்பது திண்ணம்.



**சி. பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர் கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்.. பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடைகொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர், பேராசிரியராகத் துறைத் தலைவராக விளங்குகிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர். இந்த முற்றிய புலமையாளர், முன்னாள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

நாற்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர்தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன் சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்; புலவரேறு (குன்றக்குடி ஆதினம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி! அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கிய பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி. இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு.

— மா.செ.